www.tamilarangam.net

# எரிமலை

டிசம்பர் 2002

"போராடும் இனத்தின் கவிஞன்
போராட்டத்துடனேயே இருப்பான்"



சிறப்பு நேர்காணல் ■ தாயகக் கவிஞர் புதுவை இரத்தினதுரை

www.erimalai.com

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





அழகான வளமான தமிழீழக் கடற்கரை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எரிமலை

## உள்ளே...


### கட்டுரைகள்

அனுபவத்தின் உயிர் பக்கம் - 18

ஆய்வாளர் கவனத்தை ஈர்க்கத் தவறிய வாவெட்டிமலை இராசதானி பக்கம் - 26

சிகரங்களைத் தொட்ட பின்னும் இன்றும் பெண்.... பக்கம் - 32

### அணையாத தீபங்கள்

லெப். கேணல் நிர்மா பக்கம் - 28

### கவிதை

லயம் - சத்தியபாலன் பக்கம் - 16

காப்பரண் வேலியிலிருந்தோர் கடிதம் -அம்புலி பக்கம் - 17

யாழ்ப்பாணத் தரிசனம் - பு. சிந்துஜன் பக்கம் - 23

உனது வாழ்வையும்தான் நாம் நேசிக்கின்றோம் - அம்புலி பக்கம் - 24

நீங்களும் இரவும் நாங்களும் - நிலா பக்கம் - 37

### சிறுகதை

சிறகுகள் விரிப்பதற்கே - சூரிய நிலா பக்கம் - 20

கலி பிறளுது - தமிழ்க்கவி பக்கம் - 30

அன்பு - தீபா குமரேஸ் பக்கம் - 34

முரண்கள் - ஆதிலட்சுமி சிவகுமார் பக்கம் - 38

### தொகுப்பு

நினைவுக்குறிப்பு.... பக்கம் - 42

மீள்பார்வை பக்கம் - 43

பதிவுகள்...... பக்கம் - 44

04 "போராடும் இனத்தின் கவிஞன் போராட்டத்துடனேயே இருப்பான்"





14 மறுபடியும் நிகழும் ஒருவருகை





40 "வானத்தின் பாதியைத் தாங்குதல்" – சீனப் பெண்களின் அனுபவம்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனையிலிருந்து...

# தமிழர்களுடன் சமாதான சகவாழ்வை நடத்துவதா அன்றி தமிழர்களை பிரிந்து செல்ல நிர்ப்பந்திப்பதா என்பது சிங்கள தேசத்தின் அரசியற் போக்கில்தான் தங்கியிருக்கிறது.



இனவாதமும், இனவாத ஒடுக்குமுறையுமே பிரிவினைவாத அரசியலுக்கும் கிளர்ச்சிகளுக்கும் மூல காரணமாக அமைகின்றன. நிலையான சமாதானத்தையும், இன ஒருமைப்பாட்டையும், பொருளாதார மேம்பாட்டையும் சிங்கள மக்கள் விரும்புவார்களானால் இனவாத சக்திகளை இனம் கண்டு ஒதுக்க வேண்டும். தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண முழு மனதுடன் ஒத்துழைக்க வேண்டும். தமிழ் மக்கள் தமது தாயகத்தில் சுயாட்சி அதிகாரமுடைய ஆட்சியை நிறுவி, தம்மைத் தாமே ஆளுவதற்கு சிங்கள மக்கள் தடையாக இருக்கக் கூடாது. தமிழர்களுடன் சமாதான சகவாழ்வை நடத்துவதா அன்றி தமிழர்களை பிரிந்து செல்ல நிர்ப்பந்திப்பதா என்பது சிங்கள தேசத்தின் அரசியற் போக்கில்தான் தங்கியிருக்கிறது.


தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு **வே.பிரபாகரன்** அவர்கள்



தமிழத தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தலைவாசல்




கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

இருபத்தோராம் ஆண்டு

டிசம்பர்

2002

திருவள்ளுவர் ஆண்டு 2033

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 01 - 43 58 11 42
Fax: 01 - 43 58 11 91
e.mail:editor@erimalai.com
www.erimalai.com

## நிறைவான ஆண்டு

2002 விடை பெறுகின்றது. தமிழீழ விடுதலைப் போராட்டப் பாதையில் நிறைந்த அரசியல் மற்றும் இராஜதந்திர நிகழ்வுகள் கொண்ட முக்கியமானதொரு ஆண்டாக இது திகழ்ந்தது.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தினை சர்வதேச அரங்கில் நிலைநிறுத்தி - அங்கீகரிக்க வைக்கும் நுட்பமான அரசியல் இராஜதந்திர நகர்வுகளை புலிகள் இவ்வாண்டில் மேற்கொண்டிருந்தனர்.

தமிழர்களுக்கு மூடப்பட்ட சர்வதேசக் கதவுகளை திறக்கவைக்கும் அரசியல் - இராஜதந்திர வலிந்து தாக்குதலை புலிகள் திறன்பட நடாத்திய ஆண்டு இது என தயக்கமின்றி குறிப்பிடலாம்.

தமிழர்களையும் - அவர்களின் அரசியல் அபிலாசைக்கான விடுதலைப் போரை முன்னெடுக்கும் புலிகளையும் தனிமைப்படுத்தும் உத்தியுடன் சிறீலங்கா மேற்கொண்ட அனைத்து நாசகார இராஜதந்திர வித்தைகளையும் உடைத்தெறிந்து உண்மை வெளியே வந்த ஆண்டாகக் கூட இதனை விபரிக்கலாம்.

இவ்வாண்டில் புலிகள் தமது நோக்கில் மிகத் தெளிவாக இருந்தனர். மிகுந்த முதிர்ச்சியான பாதையில் விடுதலைப் போரை எடுத்துச் சென்றனர். இந்த முயற்சிகளுக்கு எதிரான சக்திகளின் பல்வேறு ஆத்திரமூட்டலுக்கும், பகை நடவடிக்கைகளுக்கும் பொறுமையுடன் பதில் வழங்கி தமிழர்கள் தேர்ந்தெடுத்த பாதையை புலிகள் இவ்வாண்டில் பாதுகாத்தனர் எனலாம்.

இவ்வாண்டில் புலிகள் மீதான தடை நீக்கபட்டு - போர்நிறுத்த உடன்பாடு சமபல நிலையில் கைச்சாத்திடப்பட்டு - சர்வதேச கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு - தாய்லாந்தில் பேச்சுக்கள் இடம்பெற்றன. புலிகளைத் தடைசெய்த அமெரிக்காவும், பிரித்தானியாவும் கூட பங்கேற்ற நிதி உதவிவழங்கும் மாநாட்டில் புலிகள் பங்கேற்று தமிழர்களிற்கு அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தனர். ஜப்பான் உட்பட பல்வேறு நாடுகளின் தூதுவர்கள் வன்னிக்குச் சென்று புலிகளுடன் பேச்சுக்களை நடாத்தி - உறவுகளைப் பலப்படுத்தி வருகின்றனர்.

இன்று, புலிகள் சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விடுதலை இயக்கமாகும். உலகின் எந்தத் தரப்பும் புலிகளின் தேசிய பாத்திரத்தை நிராகரிக்கவில்லை. தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகப் புலிகள் தமது கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமையை உலகம் ஏற்றுக் கொண்டுவிட்டது. இந்தப் படிக்கற்களில் நின்றவாறு புலிகள் நீதியான - நிலையான தீர்வுக்கான திசையில் பயணிக்கின்றனர். இந்தப் பின்னணியில் உள்ளீடான தேசிய சுயநிர்ணய உரிமையை எதிரி அரசும் - உலக சமூகமும் அங்கீகரித்துள்ளமை எதிர்காலப் பயணத்திற்கு படிக்கற்களாக இருக்கும். வரலாறு எங்கள் பக்கத்தில் உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "போராடும் இ... போராட்டத்து...

தாயகக் கவிஞர் புதுவை இரத்தினதுரை

அண்மையில் ஐரோப்பிய நாடுகளுக்கு, வருகைதந்திருந்த தாயகக் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களைச் சந்திக்கின்ற வாய்ப்பும், அவரோடு பேசுகின்ற வாய்ப்பும் எமக்கு ஏற்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பாவித்து, எரிமலை வாசகர்களுக்காக, ஒரு நீண்டசெவ்வியை பெறுவது என்பது எமது திட்டமாக இருந்தது. எனினும், கடினமான நேர நெருக்கடிக்குள், தனது வெளி நாட்டுப்பயணத்தை பயனுள்ள வகையில், ஒழுங்குபடுத்தி, கூட்டங்கள், சந்திப்புக்கள் என ஏற்படுத்திக்கொண்டு பம்பரமாகச் சுழன்றுகொண்டிருந்த அந்தக் கவிதை இளைஞனிடம், எமது விருப்பத்தை தெரியப்படுத்துவது சரிதானா என்பதும் எமக்குத் தயக் கமாக இருந்தது. எமக்காக ஒருபொழுதை ஒதுக்கித் தருவாரா, என்ற தயக்கத்துடன் எமது விருப்பத்தைத் தெரிவித்தோம். மிகுந்த ஆவலுடன், தனது, நேர நெருக்கடியையும், பணிச்சுமையையும் பொருட்படுத்தாது, எரிமலை வாசகர்களுக்காக, எமது தாயகக் கவிஞர் ஒரு நீண்ட பேட்டியை மகிழ்வுடன் வழங்கினார். சிறிதாகவேனும் பெறுவது என்ற எமது எதிர்பார்ப்பை எல்லாம் பொய் யாக்கி, பெரிதாகவே வழங்கியிருக்கின்றார் கவிஞர் உங்களுக்காக.

**■ தமிழீழத்திலிருந்து, அதிலும் வன்னிமண்ணில் இருந்து, ஒரு பரந்த வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டிருக்கின்றீர்கள். உங்களின் கவிதைகளால் ஈர்க்கப்பட்ட மக்களுக்கு, அதனையே ரசிக்க முடிந்த மக்களுக்கு, தற்போது உங்களை நேரில் பார்க்கவும், பேசவும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. உங்களை நேரில் சந்தித்த மனிதர்களின் உணர்வலைகள் எப்படி இருந்தன?**

**ஒரு கற்பனை வடிவமாக உங்களுக்குள் உருவகப்படுத்தி வைத்திருந்த புலம்பெயர் தமிழீழ மக்களுக்கும், தற்போது நீங்கள் நேரில் பார்க்கும் மக்களுக்கும் இடையே எத்தகைய வேறுபாட்டை காண்கின்றீர்கள்?**

● எமது அமைப்பினுடைய அரசியல் பணி நிமித்தமாகத்தான் நான் இந்த வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டிருக்கின்றேன்.

நீண்ட நாட்களாக இப்படியானதொரு பயணம் எங்களுக்குக் கிடைக்காதா? என்று நாங்கள் நினைத்ததுண்டு. இன்று எங்களுக்கு அகலத்திறந்திருந்த வாசல்களூடே நாங்கள் பயணம் செய்கின்ற ஒரு பாக்கியம் கிட்டியது. நாங்கள் வன்னியிலேயிருந்து அந்த சிறை மூடப்பட்ட கதவுகளுக்குள்ளே வாழ்வுக்காக ஏங்கிய போது எங்களுக்கு கை கொடுத்து, பழம் கொடுத்து, பால் கொடுத்து இவ்வளவு தூரம் எங்களைச் சோரவிடாமல் தக்கவைத்தவர்கள் புலம்பெயர்ந்த எமது உறவுகள்.

இவர்களைப் பார்க்க வேண்டும் இவர்களுடன் பேச வேண்டும் எங்களது உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று எமது தலைமை விரும்பியது. அதன் பிரகாரம்தான் இந்தச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கின்றேன்.

ஏலவே இந்தப் புலம்பெயர்ந்த உறவுகளுடன் எனக்கு பெருமளவு பரீட்சயம். எனது கவிதைகளிலே பாடல்களிலே தொடர்ந்து எனது சமூகச் செற்பாடுகளூடே எனக்கும் இந்தப் புலம்பெயர்ந்த உறவுகளுக்குமிடையில் மிகவும் நெருக்கமான ஒரு பரீட்சயம் உண்டு. உறவு உண்டு. ஆனால் நான் அங்கிருந்து அந்த நெருக்கமான உறவு எவ்வளவு தூரம் கற்பனை செய்து வைத்திருந்தேனோ அதிலும் பார்க்க பல மடங்கு நான் ஆச்சரியப்படத்தக்க வகையிலே என்மீது அவர்கள் அன்பைச் செலுத்தினார்கள். உண்மையில் என்மீதான அன்பு என்பது அது இந்த விடுதலை மீதான அன்பாகக் கொள்ளவேண்டும். நான் வெறும் ஒரு குறியீடு மட்டும்தான். உண்மையில் நாங்கள் அங்கிருந்த பொழுது எங்களுடைய மக்கள் இங்கே வசதியாக வாழ்கிறார்கள், வனப்பாக இருக்கிறார்கள் என்பதை மட்டும்தான் அறிந்திருந்தேன். ஆனால் இங்கு நாங்கள் அவர்களைச் சந்தித்த பொழுதுதான் அவர்கள் எவ்வளவு தூரம் இன்னும் தாயகத்தை இழந்த சோகத்துடனும் துயரத்துடனும் உறவுகளைப் பிரிந்த துன்பத்துடனும் வாழ்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டோம்.

நான் எனக்குள்ளே வைத்திருந்த ஒரு படிமம் ஒரு காட்சிப் படிமமாக அல்லது கருத்துப் படிமமாக வைத்திருந்த யாவும் என்னுடைய உறவுகளை இங்கு சந்தித்தபோது அப்படியே சிதறுண்டு போனது. அவர்கள் ஒரு கறுப்பு ஐரோப்பியர்களாக மாறியிருப்பார்கள் தாயகத்தின் மீதான காதலினால் பிரேமையினால் அவர்கள் காசு தருகிறார்கள். ஆனால் அவர்கள் ஒரு கறுப்பு ஐரோப்பியர்களாகத்தான் மாறியிருப்பார்கள் என்று கருதியிருந்தேன். உண்மையிலேயே எனது கற்பனையை எனது எண்ணத்தை அவர்கள் சிதறடித்தார்கள். நான் இங்கு வந்து இவர்களுடன் பழகுகின்ற பொழுது நான் ஏதோ வன்னியில் நிற்பது போன்ற தாயகத்தில் நிற்பது போன்ற உணர்வு




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ...த்தின் கவிஞன் ...டனேயே இருப்பான் ,,



நேர் கண்டவர் - ஜெயா

ஏற்படுகின்றது. நான் சில்லிட்டுப்போனேன். உண்மையாக நேரில் பார்க்கும் போது அவர்களுடைய நெஞ்சங்களை எங்களால் அறியக்கூடியதாக இருக்கின்றது. இன்னும் சூடு தணியாமல் அதே தாயக உணர்வுடன், தாயகத்திற்கு திரும்ப வேண்டும் என்ற உணர்வுடன் தாயகம் விடிவு பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் தாயகத்திற்கு ஒரு நல்ல தீர்வு ஒன்று எட்டி தாங்கள் எல்லோரும் அங்கு வந்து சேரவேண்டும் என்ற உணர்வுடன் அவர்கள் அங்கங்கிருக்கிறார்கள் என்பதை நான் மிகவும் சந்தோசத்துடன் நினைத்துப் பார்க்கும் போது மகிழ்ச்சியாக இருக்கின்றது.

எனவே இந்தப் புலம்பெயர்ந்த உறவுகள் எங்களை நிமிர்த்துவார்களல்ல, நாளைக்கு எங்களை நிர்மாணிக்கப் போகிறார்கள் என்பதுதான் உண்மை. நான் மிகவும் சந்தோசப்படுகிறேன். இந்த உணர்வு ஒன்று போதும் எங்களுடைய தாயகம் விடிவுபெறும். அங்கே ஒரு சுபீட்சமான வாழ்வு அமையும் நாங்கள் எல்லோரும் மீண்டும் ஒன்றாகக் கூடி குதூகலிப்போம் என்பதற்கு நான் எனது புலம்பெயர்ந்த உறவுகளை இங்கு வந்து பார்த்த பின்னர் ஏற்பட்ட உணர்வு எனக்கு கூடுதலான சாட்சியாக இருக்கின்றது.

**■ புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்னர் வேகமாக மாற்றமடைந்துவரும், அகச்சூழலும் புறச்சூழலும், தாயகத்திலுள்ள தமிழ் மக்களுக்கும் புலம்பெயர்ந்துவாழும் தமிழ்மக்களுக்கும் இடையே ஒரு அகன்ற பாலத்தை அமைத்திருப்பது போன்ற நிலை தென்படுகின்றது. இந்த நிலையில், உங்களது தற்போதைய வெளிநாட்டுப் பயணங்கள் குறித்து நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்?**

● புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்னர் பல மாற்றங்கள். நாங்களே ஆச்சரியப்படத்தக்க மாதிரியாக நடக்கிறது. ஆறு மாதத்திற்கு முன்னர் புளியங்குளம் தடைமுகாமிற்கு அப்பாலே நாங்கள் எட்டிப் பார்ப்போமானால் பயங்கரவாதிகள் என எங்களைச் சுட்டு வீழ்த்தியிருப்பார்கள். இன்று எங்களை வரவேற்று பயணம் செய்ய அனுமதித்திருக்கிறார்கள். ஆனால் இப்போ கடவுச்சீட்டு தருகிறார்கள், விசா தருகிறார்கள், விமானத்தில் ஏறிப் பறக்கும்வரையில் எங்களுக்கு பக்கத் துணையாக நிற்கிறார்கள். எனக்கு ஆச்சரியமாக இருக்கின்றது. ஒரு நேரம் பயமாக இருக்கின்றது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பிறகு ஏற்பட்டுவரும் மாற்றங்கள் மிகவும்

**நான் எனக்குள்ளே வைத்திருந்த ஒரு படிமம் ஒரு காட்சிப் படிமமாக அல்லது கருத்துப் படிமமாக வைத்திருந்த யாவும் என்னுடைய உறவுகளை இங்கு சந்தித்தபோது அப்படியே சிதறுண்டு போனது. அவர்கள் ஒரு கறுப்பு ஐரோப்பியர்களாக மாறியிருப்பார்கள் தாயகத்தின் மீதான காதலினால் பிரேமையினால் அவர்கள் காசு தருகிறார்கள். ஆனால் அவர்கள் ஒரு கறுப்பு ஐரோப்பியர்களாகத்தான் மாறியிருப்பார்கள் என்று கருதியிருந்தேன். உண்மையிலேயே எனது கற்பனையை எனது எண்ணத்தை அவர்கள் சிதறடித்தார்கள்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அபரிமிதமான வேகத்தில் நடைபெறுகின்றது. இதற்கு அகச்சூழலும் புறச்சூழலும் காரணம் என்று எடுத்துக்கொள்ள முடியாது. எமது விடுதலைப் போராட்டம் பல்லாயிரக்கணக்கான மாவீரர்களுடைய, பொதுமக்களுடைய ஈகத்திலே விளைந்தது. இப்பொழுது புறச்சூழல் என்பது உண்மையாக இருந்தால் கூட அகச்சூழலும் உண்மையாக என்னைப் பொறுத்தளவில் முழுமையாக நம்பவில்லை. புறச்சூழலால் மட்டும்தான் அகச்சூழல் ஏற்பட்டிருக்கின்றது போன்று ஒரு பாவனை காட்டப்படுகிறது, என்றுதான் நான் கருதுகிறேன். சரி, அப்படியே வைத்துக்கொள்வோம். அகச்சூழலும் புறச்சூழலும் அமைந்துவிட்டதாகவே வைத்துக்கொண்டால் இதனால் என்ன நன்மை விளைந்ததென்று சொன்னால் நாங்கள் புலம்பெயர்ந்த மக்களிடையே அகன்ற பாலத்தை அமைக்க முடிகிறது. ஒரு உறவுப் பாலத்தை உருவாக்க முடிகிறது. எவ்வளவு காலம் எங்களுடைய உறவுகளை நாங்கள் சந்தித்து. அவர்கள் வரமுடியவில்லை தாயகத்திற்கு நாங்கள் வந்து அவர்களைப் பார்ப்பதற்கு வழிகள் அடைத்துக்கிடந்தன. இன்று இந்த உறவுப்பாலம் உருவாக்கப்படுகின்றது. நாங்கள் எல்லோருமே எங்களுடைய உறவுகளைப் பார்ப்பதற்கு ஓடிவருகின்றோம். நன்றி சொல்ல, ஆரத்தழுவ, உங்களால் நாங்கள் நிமிர்ந்தோம் என்ற செய்தியைச் சொல்ல தொடர்ந்தும் எங்களுடைய நாட்டின் நிர்வாகத்திற்கு நீங்களே கதாநாயகர்கள் என்று சொல்ல அவர்களை நாங்கள் நேரே சந்தித்து எங்களுடைய இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ள எல்லாத்திற்குமான அகன்ற ஒரு உறவுப் பாலம் ஒன்று அமைக்கப்படுகின்றது. இந்த நிலையில்தான் நமது அமைப்பில் பலர் பல நாடுகளில் நிற்கின்றோம். தொடர்ந்து ஒரு வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொள்கின்றோம். நானே 7, 8 நாடுகளைக் கடந்து இப்பொழுது பிரான்சில் நிற்கின்றேன். ஒவ்வொரு நாட்டிலும் என்னுடைய உறவுகளுடன் பேசுகின்றேன். அவர்கள் எல்லாம் மிகவும் சந்தோசமாக வந்து எமது தாயகம் எப்படியிருக்கின்றது, எங்களுடைய மக்கள் எப்படி இருக்கிறார்கள் எங்கள் உறவுகள் எப்படியிருக்கிறார்கள் எதற்கும் நீங்கள் அஞ்சாதீர்கள் என்ன நிலை வந்த போதும் நாங்கள் உங்களுக்கு தோள் கொடுப்போம், துணை நிற்போம் என்று நம்பிக்கை தருகிறார்கள்.

எனவே இந்த வெளிநாட்டுப் பயணம் எங்களுக்கு நம்பிக்கையையும் ஊட்டுகின்றது. மற்றது இடையிலே நீண்டகால முக தரிசனமற்று இருக்கின்ற பொழுது இந்தப் பயணங்கள் நிவர்த்தி செய்கின்றது. நீக்கிவிடுகின்றன. நாங்கள் எல்லோரும் ஒன்றான குடும்பம் என்பதனை இந்தப்பயணங்கள் எங்களுக்கு ஏற்படுத்திவிடுகின்றது. இது வெறும் உல்லாசப் பயணம் அல்ல. இல்லை என்று சொன்னால் ஒரு உறவுப் பயணமும் அல்ல, உறவினுடைய ஒரு சந்திப்புப் பயணம். நாங்களும் நீங்களும் ஒன்று இடையிலே கண்டங்கள் பிரித்தாலும் கடல்கள் பிரித்தாலும் நாங்களும் நீங்களும் ஒன்று என்ற செய்தியை நாங்கள் ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்கின்ற பயணம். எனவே இந்தப் பயணம் மிகவும் எங்களுக்கு வேண்டியதாகவும் அதே நேரம் நெஞ்சுக்கு மிகவும் நிம்மதியாகவும், இனிமையாகவும், இதமாகவும் இருக்கின்ற பயணமாக இருக்கின்றது. இது ஒரு விடுதலைப் போராட்டத்தின் ஒரு பாய்ச்சலாகவே நான் கருதுகிறேன்.

**■ தாயகத்தில் கடுமையான போர் நடைபெற்று வந்தபோதும் கூட, அங்கு கலை இலக்கியப் பணிகளும், அவற்றைப் பாதுகாக்கின்ற முயற்சிகளும் சிரமத்தின் மத்தியில் மேற்கொள்ளப்பட்டுவந்ததை யாவரும் அறிவர். தற்போது, புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது. சமாதான முயற்சிகள் வேகம் பெறுகின்றன. தமிழீழத்தின் மூடிய கதவு திறந்துவிடப்பட்டிருக்கின்றது. உலகத்தின் ஒவ்வொரு மூலைக்கும் தொடர்புகளை ஏற்படுத்த வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. இந்த நிலை, தமிழீழத்தின் கலை இலக்கியச் செயற்பாடுகளுக்கு மேலும் ஆக்கத்தையும் ஊக்கத்தையும் கொடுப்பனவாக உள்ளது. இந்த வாய்ப்பை நீங்கள் எவ்விதம் பயனுள்ளதாக ஆக்கிக்கொள்ளலாம் எனத் திட்டமிட்டுள்ளீர்கள்?**

● உண்மையிலே 1990ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினுடைய வெளியேற்றத்திற்குப் பிறகு எங்களுடைய கட்டுப்பாட்டிற்குள், விடுதலைப் புலிகளுடைய கட்டுப்பாட்டிற்குள்ளே கணிசமான



பகுதிகள் வருகின்றன. அதாவது விடுதலை வீரர்களுடைய விடுதலை நிர்வாகத்திற்குக் கீழே வருகிறது. அப்பொழுது, நாங்கள் எங்களுடைய அமைப்பினுடைய கலை இலக்கிய, கலாச்சாரத்திற்குப் பொறுப்பான விடுதலைப் புலிகளின் 'கலைபண்பாட்டுக்கழகம்' தன்னுடைய வேலைத்திட்டத்தை புதியளவிலே முன்னெடுக்கின்றது. நீங்கள் எல்லாம் நன்கு அறிந்த அந்தப் பிரமாண்டமான முத்தமிழ் விழாக்கள், இசை விழாக்கள், கருத்தரங்குகள் இப்படியாக நாளொரு விழா அப்படியான ஒரு காலத்தில் எங்களுடைய யாழ்ப்பாணம் அல்லது தமிழீழம் இருந்தது. அப்பொழுதுதான் நிறைய அரங்கேற்றங்கள், கலந்துரையாடல்கள், கண்காட்சிகள் நடந்தன. இப்படியாக நாளொரு நிகழ்ச்சிகள் சொல்லுவார்கள் 'உறங்காத நகரம்' போன்று ஒரு காலத்தில் இலக்கியத்தில் இயங்கும் மையமாக எங்களுடைய பிரதேசம் இருந்தது.

அதன் பிறகு நாங்கள் 1995ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து அந்த மாபெரும் அவல இடப்பெயர்வுக்குப் பிறகு இந்தப் போராட்டத்தின் மையப்புள்ளி வன்னிக்கு நகர்த்தப்படுகிறது. அது வன்னிக்கு நகர்த்தப்பட்டவுடன் எங்களுடைய வாசல்கள் யாவும் அடைக்கப்படுகின்றன, மூடப்படுகின்றன. எந்தத் தொடர்பும் இல்லை. மூச்சுவிடுவதற்குக் காற்றுக்குக் கூட கட்டுப்பாடு என்பது போன்ற நிலையில் நாங்கள் தள்ளப்பட்டோம். ஆறு வருடங்கள் ஏறக்குறைய அரை அஞ்ஞானகால வாசம். நீங்கள் குறிப்பிடுவதுபோன்று நாங்கள் சகலதிற்கும் சிரமத்தின் மத்தியில்தான் இந்தப் பணிகளை மேற்கொண்டோம். எதற்கும் தடை அச்சியந்திரப் பொருட்களா? அல்லது ஓடியோ, வீடியோ பொருட்களா? நாங்கள் எங்கள் குரல்களை உலகத்திற்கு கொண்டு செல்வதற்கான வழிவகைகள் யாவும் அடைக்கப்பட்டு இருந்தன. ஆனால் நாங்கள் அப்பொழுதும் தளர்ந்து போகவில்லை. நிமிர்ந்தோம். சிரமத்தின் மத்தியில் அந்தக் கட்டுப்பாட்டுக்குள்ளேதான் நிறைய வேலை செய்தோம். ஏறக்குறைய ஆறு வருடத்திற்குள் 40ற்கு மேற்பட்ட புத்தகங்களைப் பிரசுரித்திருக்கின்றோம், அவ்வளவு சிரமத்தின் மத்தியிலும் அந்தக் காலப்பகுதிக்குள்ளேயே 30ற்கு மேற்பட்ட இசைத்தட்டுக்களை வெளியிட்டிருக்கின்றோம். அழியும் நிலையில் இருந்த எங்களுடைய பாரம்பரிய கூத்துக்களை, கலைகளை வடிவங்களை வீதி நாடகங்களாக இந்த போராட்டத்தின் புலர்வு நோக்கி போராட்டத்தின் வீச்சுக்கருதி நாங்கள் தெருத்தெருவாக நாளாந்தம் பெரிதாக விஸ்தாரம் கொள்ளச் செய்தோம். அதை ஏற்றுக்கொண்டார்கள் எல்லோரும். இதன் கலை இலக்கியத்தின் மையப்புள்ளி வன்னியாக மாறிவிட்டதென்று எழுதத் தொடங்கினார்கள். அவ்வளவு தூரம் நாங்கள் அந்த அடைக்கப்பட்ட வாசலுக்குள்ளும் நாங்கள் நிமிர்ந்தோம். எங்களுடைய முகவரிகள் வெளியே தெரியக்கூடியதாக நாங்கள் விஷ்பரூபம் கொண்டு நாங்கள் நிமிர்ந்தோம். உண்மையிலே நீங்கள் குறிப்பிட்டது போன்று அந்தக் காலத்திலும் சிரமத்தின் மத்தியிலும் நாங்கள் பெரிதாகப் படைப்பை மட்டுமல்ல, ஏலவே இருந்ததை பேணிக்காப்பதற்கும் பெரும் சிரமத்தின் மத்தியில் நாங்கள் பெரும் பணிகளை மேற்கொண்டோம். இப்பொழுது புரிந்துணர்வு ஒப்பந்தக் கதவுகள் திறக்கப்பட்டுவிட்டது. சமாதான மூச்சுக்கள் வேகம்பெறுகின்றன. இன்று மூடப்பட்ட கதவுகள் திறக்கப்பட்டுவிட்டது. உலகத்தின் ஒவ்வொரு மூலைக்கும் தொடர்புகள் ஏற்பட்டுவிட்டன. இந்த நிலையில்தான் தமிழீழத்தின் கலை இலக்கியச் செயற்பாடுகளுக்கு பெரிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. இந்த வாய்ப்பை நாங்கள் பயன்படுத்த வேண்டும். என்னுடைய இந்தப் பயணத்தினுடைய மூலகாரணங்களில் ஒன்று இதுவும்தான். இதற்குப் பெரிதாக வளர்ச்சி கண்டிருக்கின்ற இந்த உலகத்தின் மற்றப் பகுதிகள் யாவுமே துறைகள் யாவுமே கலை இலக்கியத்துறைகள் யாவுமே எவ்வளவு தூரம் பெரிதாக விஷ்தரிக்கப்பட்டிருக்கின்றது என்பதை நாங்கள் அறிவோம். அதைப் பார்வையிட வேண்டும். நாங்கள் இனியும் குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓடிக்கொண்டிருக்க முடியாது. எங்களுடைய அவலத்தின் மத்தியில் எங்கள் உன்னதமான போராட்டம் யாவையும் உலகத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டும். பாரதி சொன்னது போல எட்டுத்திக்கும்




தமிழத தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்களுடைய கலை இலக்கியம் பரவவேண்டும். அப்படியானவொரு நெஞ்சுநிறைந்த வேணவாவுடன் நாங்கள் இந்த வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ளோம். அதற்கான வேலைகளையும் நாங்கள் ஆரம்பித்துவிட்டோம்.

எமது கலை இலக்கியங்கள் எல்லாமே உலகத்தின் சகல மொழிகளிலும் தெரியவேண்டும். எங்களுடைய இலக்கியங்கள் யாவும் உலக மொழிகள் யாவற்றிலும் மொழி பெயர்க்கப்பட வேண்டும். ஈழத்தமிழன் நோபல் பரிசு பெறுவான் என்று கூறிக்கொண்டிருப்பதில் எந்தப் பயனுமில்லை. அவன் பெறுவதற்கான அந்த வழிவகைகளிலே நாங்கள் முன்னின்று இயங்கவேண்டும். அதற்கு வெளியில் புலம்பெயர்ந்து வாழுகின்ற எங்களுடைய உறவுகளும் கலை இலக்கியவாதிகளின் பணிகளும் வேற்று மொழி தெரிந்த பல மொழிகளைத் தெரிந்த அறிஞர்கள் இங்கிருக்கிறார்கள். எங்களுடைய இந்த வதை சுமந்த இந்த வாழ்வுக்குள்ளும் நாங்கள் நிமிர்ந்த இந்த வரலாறுகளை எல்லாம் பதிவாக்கப்பட்டிருக்கின்ற இலக்கியங்களையும் கலைகளையும் வேற்று மொழிகளுக்கு கொண்டு செல்ல வேண்டும். அந்த வேற்று மொழிக்கு கொண்டு சென்று இப்படியெல்லாம் விலை கொடுத்து மிக உன்னதமான நிலையைப் பெற்றோம். நாங்கள் கொடுத்த விலை அதிகம் என்பது போன்ற நாங்கள் பட்ட சோகம், துயரம், சந்தோசம் எல்லாம் கலந்த கலவையான இலக்கியங்கள் யாவற்றையும் விடுதலை இயக்கங்கள் யாவற்றையும் பிற மொழிகளில் பரவலாக்கப்பட வேண்டும். அப்பொழுது நாங்கள் பேசப்படுவோம். அப்பொழுதுதான் ஈழத்து இலக்கியம் தமிழீழத்து இலக்கியத்திற்கு ஒரு உலக அங்கீகாரம் கிடைக்கும். அப்பொழுது அது பேசப்படும். நிட்சயமாகப் பேசப்படும். அங்கு உயரிய இலக்கியங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் பிரசுரமாகாமலே ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. அந்த வாய்ப்பு எங்களுக்குக் கிடையாது. எனவே, நீங்கள் கைகொடுக்க வேண்டும். புலம்பெயர்ந்த உறவுகள் கை கொடுப்பார்களேயானால் இந்த இடைவெளியில் அகலத் திறந்த வாசல்களை நாங்கள் சரியாகப் பயன்படுத்துபவர்களாவோம். அந்தக் கடமை தமிழீழ கலை இலக்கியவாதிகளுக்கு உண்டு. இருக்க வேண்டும். அவர்கள் தங்களுடைய இலக்கியங்களை எங்களுக்குத் தருவது போன்று எங்களுடைய இலக்கியங்களை எடுத்து உலகத்தின் திசைகளில் ஒட்டவேண்டும், முகங்களிலே ஒட்ட வேண்டும். அப்பொழுது நாங்கள் பேசப்படுபவர்களாக, எங்களுடைய போராட்டம் பேசப்படுவதாக நாங்கள் கொடுத்த விலை பேசப்படுவதாக, நாங்கள் பட்ட அவலம் பேசப்படுவதாக அந்த இலக்கியத்தினுடாக உலகம் பெற முடியும் எனவே, இந்த பயனுள்ள வாய்ப்பைக் கொண்டு பயனுள்ளதாக ஆக்கிக் கொள்வதானால் அது ஒரு வழிப் பாதையல்ல இரட்டை வழிப்பாதை வேண்டும், நீங்களும் அதற்காக முயல வேண்டும். புலம் பெயர்ந்த கலை இலக்கியவாதிகளும் அதற்காக முயற்சிப்பார்களேயானால் தமிழீழ இலக்கியம் ஒரு உன்னதமான இலக்கியம் என்று உலகம் சொல்லும்படியாக நாங்கள் உருவாக்க முடியும்.

**■ ஆக்கிரமிப்பின் இறுக்கமானபிடியில் இருந்த யாழ் மண்ணில் விடுதலைப் புலிகள் காலடிபதித்த கையுடன், குறுகிய கால இடைவெளியில் மானிடத்தின் தமிழ்க்கூடல் நிகழ்ச்சியை யாழ் மண்ணில் நடத்தி, பெரும் சாதனையைப் படைத்துள்ளீர்கள். தற்போது, வாய்ப்பான சூழ்நிலை தோன்றியுள்ளது. கலை இலக்கிய கர்த்தாக்களையும், தமிழின உணர்வுத் தளத்தில் இருந்து பணியாற்றுபவர்களையும் ஒன்றிணைத்து பரந்துபட்ட பொது நிகழ்வொன்றை நிகழ்த்தும் எதிர்காலத்திட்டம் எதனையும் கொண்டுள்ளீர்களா?**



● இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பிறகு யாழ் மண்ணிற்கு பயணம் செய்கின்றோம். நாங்கள் விட்டுப் பிரிந்த அந்தத் தாய்மடி தேடி விட்டுப் பிரிந்த அந்தக் கன்றுகளில் ஒன்றாக நானும் சென்றேன். நாங்கள் அங்கே யாழ் நகருக்கு 6 வருடங்களுக்குப் பிறகு விடுதலைப் புலிகளாகிய நாங்கள் இந்த விடுதலை சக்திகள் கால் பதித்தவுடன் எங்களுக்குப் பல கேள்விகள் இருந்தன. நாங்கள், போகும் பொழுது அந்த யாழ்ப்பாண மண் அந்த 6 வருடமும் மகிழ்ச்சியற்றிருந்தது என்பதைக் கண்டு கொண்டோம். ஒரு உயிர்ப்பிழந்த நிலையிலே குடாநாடு இருந்ததை நாங்கள் அறிந்து கொண்டோம். அது அசையவில்லை மூச்சுவிட்டுக் கொண்டிருந்தது என்பது உண்மைதான். ஆனால் அசையாமல் உயிரற்று ஒரு சடலமாகக் கிடந்ததைத்தான் எங்களால் காணமுடிந்தது. அதை எவ்வளவு தூரம் மற்றவர்கள் ஏற்றுக்கொள்கின்றார்கள் என்பது தெரியவில்லை. நான் அறிந்து கொண்டது இவ்வாறு. முகத்தில் சிரிப்பற்று 40,000 இராணுவத்தால் சூழப்பட்டு முள் வேலிகளாலும், காவலரண்களாலும் சுற்றிவளைக்கப்பட்டு அந்த யாழ் குடா நாடு ஒரு சாட்டுக்கு ஏனோ மூச்சுவிட்டுக்கொண்டிருந்ததே ஒளிய அந்த முகத்திலே எந்த மலர்ச்சியையும் என்னால் காணமுடியவில்லை. அப்பொழுதுதான் அந்த யாழ் மண்ணை இயங்க வைப்பதற்கு அசையவைப்பதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று நாங்கள் கருதினோம். விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகமாகிய நாங்கள் என்ன செய்தோம் என்று சொன்னால் இயங்க வைக்க வேண்டும். எங்களுடைய வேலைகளை குடாநாட்டில் ஆரம்பித்து வைத்து முதலாவது புள்ளியையும் இட வேண்டும். இந்த இரண்டையும் இணைத்த வேலையாக இலங்கை முழுவதிலுமிருந்த கலை இலக்கியவாதிகளான தமிழ் இலக்கியவாதிகள் எல்லாரையும் இணைத்து ஒரு சங்கம நிகழ்ச்சியை செய்ய வேண்டும் என்று விரும்பினோம். அப்பொழுதுதான், எமது போராட்டம் உண்மையிலான தமிழர்களால் நடாத்தப்படுகின்ற ஒடுக்கப்பட்ட தமிழர்களுடைய விடுதலைக்கான போராட்டமாக இருந்தாலும் உண்மையில் அது ஒரு இனம் மொழி என்று சொல்லிப் பிரிக்கப்பட்டதல்ல. வதைபடும் ஒரு மானிடத்தின் குரலாக, ஒரு மானிடத்தின் சிலிர்ப்பாகத்தான் எங்களுடைய போராட்டம் நடந்தது. எனவே அந்த மனது அந்தப் பெயரையே வைத்துக் கொண்டு நாங்கள் இந்த மகாநாட்டு ஏற்பாடுகளை செய்த போது இவ்வளவு பெரிதாக அது விஷ்தாரம் கொள்ளும் என்று நான் உண்மையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருதவில்லை. முதலில் அது ஒரு யாழ்ப்பாணக் கலைஞர்களைக் கொண்ட எழுத்தாளர்களைக் கொண்ட சங்கமமாகத்தான் அதை நாங்கள் திட்டமிட்டோம். பிறகு வன்னியை இணைத்துக்கொண்டோம். பிறகு வடக்குக் கிழக்கான எங்கள் பிரதேசமான தமிழீழப் பிரதேச எழுத்தாளர்களை இணைத்துக் கொண்டோம். சிங்கள மக்களுக்குச் சொல்ல வேண்டிய செய்தி இருக்கின்ற இந்த சமாதானக் காலப்பகுதியில் எங்களுடைய நியாயத் தன்மையை தென்னிலங்கை எங்களுடைய சக உறவுகளுக்கு சிங்கள மக்களுக்கு சொல்ல வேண்டிய தேவை இருக்கிறது. அவர்கள் எங்களைப் புரிந்து கொண்டது மிகக் குறைவு. எங்களுடைய உண்மையான நிலையை அவர்கள் தெரிந்து கொண்டது மிகக் குறைவு. எங்களுடைய விடுதலைப் போராட்டத்தின்உண்மைக் குரல்கள் அவர்களுக்கு மறைக்கப்பட்டிருக்கின்றது. எனவே, அவர்களையும் அழைத்து எங்களுடைய குரல்களையும் அவர்களுக்கு அறிமுகப்படுத்துவோம், தெளிவுபடுத்துவோம் என அவர்களையும் அழைத்துக் கொண்டோம். பிறகு பார்த்தால் எங்களுடைய முஸ்லிம் சகோதர எழுத்தாளர்களையும் அழைத்துக் கொண்டோம். தமிழ்நாட்டிலிருந்து பேராளர்கள் வர விரும்பினார்கள் பின்னர் அவர்களையும் இணைத்துக் கொண்டோம். புலம்பெயர்ந்த நாட்டிலிருந்து நிறையப் பேர் அங்கு குடும்பம் குடும்பமாகச் சாரி சாரியாக வந்து குவிந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள்ளே கலை இலக்கியவாதிகளும் இருந்தார்கள். அவர்களும் கனிசமாகக்கலந்து கொண்டார்கள்.

ஏறக்குறைய 15,000 பேர் தினசரி வந்து போன ஒரு மகாநாடாக இருந்து, கேட்ட மகாநாடாக விளங்கியது. உண்மையிலே அது பெரிய வெற்றி. இன்றுவரை அந்த வெற்றியின் சத்தம் கேட்டுக் கொண்டுதான் இருக்கின்றது. சிங்களப் பத்திரிகைகள் இன்றுவரை அதைப்பற்றி எழுதிக்கொண்டுதான் இருக்கின்றது. தாங்கள் இதுவரை தவறவிட்டுவிட்டோம், தமிழ் மக்களை தவறாகப் புரிந்து கொண்டு இருக்கின்றோம் என்று சொல்லி இப்பொழுதும் எழுதிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். இது ஒரு பெரிய வெற்றி. உண்மையில் இந்த வெற்றி தாயகத்துடன் மட்டுப்படுத்தக் கூடாது என்பதில் நாங்கள் முதலிலே கவனமாகவும் கரிசனையாகவும் இருக்கின்றோம். இப்பொழுது ஒரு பரந்துபட்ட நிகழ்வொன்றைச் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுவிட்டது. இன்றைக்கு உலகம் எங்களை மிகவும் புரிந்துவிட்டது.

நாட்களாக இருந்த காலம் நிமிடங்களாக மணிக்கணக்காக மாறியது. எங்களுடைய மக்கள் தமிழீழ படைப்பாளிகள் எல்லோருமே இன்று உலகம் எங்குமே வாழ்கிறார்கள். எங்கு பார்த்தாலும் இலக்கியங்களைப் படைத்தபடி அதைப்பற்றி பேசியபடி, உசாவியபடி இருக்கிறார்கள். இவர்களை எல்லாம் ஒன்றிணைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுவிட்டது. இன்றைக்கு எங்களுக்குள்ளே கருத்து முரண்பாடுகள் கணிசமான அளவு குறைந்துவிட்டன. சித்தாந்த ரீதியிலே சிதறுண்டு இருந்தவர்களிடையே இருந்த முரண்பாடுகள் எல்லாம் களையப்பெற்று கனிசமாக ஒன்றிணைந்துவிட்டது. ஒரு மையப்புள்ளியின் கீழே நாங்கள் எல்லோரும் சங்கமமாகி விட்டோம். எனவே, இப்படியான சாத்தியப்படக் கூடிய ஒரு நேரத்திலே நாங்கள் உலக ரீதியாக ஒரு கலை இலக்கிய எழுத்தாளர்களுடைய சங்கமிப்பு ஒன்றைச் செய்ய வேண்டிய ஒரு தேவை இருக்கின்றது. அதற்கான கால்கோலும் நாட்டப்பட்டுவிட்டது என்று கருதுகிறேன். எனவே, இந்த வெளிநாட்டுப் பயணம் அதை இன்னும் நம்பிக்கையையும் செய்ய வேண்டுமென்ற அந்த உத்வேகத்தையும் தந்திருக்கின்றது. மானுடத்தின் **தமிழ்க்கூடல் 2003** ஒரு புலம்பெயர்ந்த ஐரோப்பிய உலகத் தமிழர்களுடைய உண்மையான கலை இலக்கியப் படைப்பாளிகள் எல்லோரும் ஒன்று திரண்டு அல்லது இன்னொரு இடத்திலோ எங்களுக்கு வசதியான இடத்திலோ தாயகத்திலோ கலைஇலக்கிய வாதிகளையும் தமிழகத்துக் கலை இலக்கியவாதிகளையும் இலங்கையின் ஒட்டுமொத்தமான கலை இலக்கியவாதிகளையும் ஒன்றிணைத்து ஒரு மண்டபத்தின் கீழ் ஒரு குடையின் கீழ் ஒரு புள்ளியில் நிச்சயமாகச் சந்திக்க வைக்கின்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது. அதற்கு புலம்பெயர்ந்த எங்களுடைய கலை இலக்கியப் படைப்பாளிகள் யாவரும் தங்களுடைய ஒத்துழைப்பை வழங்குவார்கள் என்று நினைக்கின்றேன். நிச்சயமாக, எங்களுடைய தலைமையுடன் நான் இது பற்றிப் பேசி 2003 மானுடத்தின் தமிழ்க்கூடல் ஒரு புலம்பெயர்ந்த ஒரு ஐரோப்பிய நாட்டிலோ அல்லது வசதியான தேசத்திலோ உலகத் தமிழர்களுடைய உண்மையான கலை இலக்கியப் படைப்பாளிகள் எல்லோரும் ஒன்று திரண்டு ஒரு வாய்ப்பான ஒரு மகாநாடாக அல்லது சங்கமமாக, ஒரு சந்திப்பாக அமையும் என்ற நம்பிக்கையுடன் இருக்கின்றேன். விரைவில் அதற்கான முடிவுகளை நாங்கள் தெரிவிப்போம்.

■ **போராடும் மண்ணில், அற்புதமான போராளிக் கலைஞர்கள் தோன்றியிருக்கின்றனர். நெருக்கடியான காலத்தில், உக்கிரமான சண்டையின் மத்தியில் போர்புரிந்தபடியே தரமான படைப்புக்களை அவர்களால் எப்படித் தரமுடிகின்றது?**



● உண்மையிலேயே ஒரு கலை இலக்கியப்படைப்பாளி ஒரு கலைஞன் தான் எழுதும் பொருளுக்கு தானே உயிருள்ள சாட்சியாக இருந்தான். கண்கண்ட சாட்சிகள் தானே அதற்கான உயிருள்ள சாட்சியாக இருக்க முடியும், கவிஞனாக இருக்க முடியும், படைப்பாளியாக இருக்க முடியும். தான் அறிந்ததை தான் பார்த்ததை தனக்குள்ளே தானே நின்றதை, தனக்குள்ளே தானே சந்தோசிப்பதை எழுதும்போது அவனுடைய எழுத்துக்கு ஒரு சத்திய தரிசனம் ஏற்படுகின்றது. சத்தியம் உண்மை இருக்கிறது. எங்களுடைய மண்ணிலே போராடிக் கொண்டிருக்கின்ற எமது போராளிகளுக்குள்ளே நிறையப் போராளிக் கலைஞர்கள் இருக்கிறார்கள். நீங்கள் வந்து பார்த்தால் தெரியும். திறமான கவிஞர்கள், படைப்பாளிகள், நடிகர்கள், ஆடல்அரசிகள் என்று சொல்லக் கூடிய அளவு நர்த்தகிகள் இருக்கிறார்கள். இன்றைக்கு அற்புதமான படப்பிடிப்பாளர்கள் வந்து விட்டார்கள். மிகவும் முக்கியமான ஒலிப்பதிவாளர்கள் உருவாகிவிட்டார்கள். இயக்குனர்கள் உருவாகிவிட்டார்கள். இது போராட்டம் தந்ததின் ஒரு பலன். அவர்கள் களத்திலே போராடும் பொழுது அவர்களுக்குள்ளே இருக்கின்ற உண்மையான ஒரு கலைஞர்களுக்குள்ளே சொல்வார்கள். பாரதி சொன்னது போல "ஆடுதல், பாடுதல் சித்திரம் இனிய கவி ஆகிய கலைகளில் மனம் ஈடுபட்டு என்றும் நடப்பவர் பிறர் ஈன நிலை கண்டு சொல்லுவார்" ஒரு கலைஞன் பிறருடைய நிலை கண்டு சொல்லுவதுதான் வழக்கம். உண்மையில் இந்தப் போராளிகள் எல்லாம் தனது தேசத்திற்கு தனது இனத்திற்கு தனது வாழ்வுக்கு இதனால் ஏற்பட்ட அடிமைத்தனத்திற்கு போராடப் புறப்பட்டவர்கள்.

உண்மையாக போராளிக் கலைஞர் என்பது போராட வந்ததே எந்த அடிமைத்தனத்தில் இருந்து தங்களை விடுவித்துக் கொள்ளத்தான். அந்த முகத்தறிகளை உடைத்தெறிவதற்கு கைகளில் இருக்கின்ற கைவிலங்குகளை அகற்றுவதற்கு இதே குணாம்சம் ஒரு கலைஞனுக்கும் இருக்க வேண்டும். கலைஞனை ஒரு போராளிதான் சொல்வார்கள் கலைஞனே ஒரு கலகக்காரன் என்றும் அவனுக்கு அந்த குணாம்சம் இருக்கும். இவர்களுக்கு இரண்டும் இருக்கிறது. அவன் கலைஞனாகவும் இருக்கின்றதினால் இருக்கின்ற அந்தப் போர்க்கோலம், போராளியாக இருப்பதனால் கலைக்குணம் இந்த இரண்டும் சேர்ந்து அவர்களை அற்புதமான படைப்பாளிகளாக கலைஞர்களாக எங்களுடைய போராளிகளை உருவாக்கியிருக்கினறார். இன்றைக்கு எங்களுடைய மலரவனது 'உலக உலா' உலகம் எங்குமே பேசப்படுகின்றது. அதை மட்டும் உலக மொழிகளில் மொழிபெயர்த்தால் அது ஒரு உன்னதமான இலக்கியமாகப் பேசப்படும் என்பதில் எந்தவிதமான ஐயமுமில்லை. எங்களுடைய பெண் போராளிகளான கஸ்தூரி, வானதி, பாரதி இவர்களுடைய வழித்தடத்தில் எத்தனை நூற்றுக் கணக்கான பெண் போராளிகள் எத்தனை அற்புதமான கலைஞர்களாக இருக்கிறார்கள். இன்று புதிய புதிய கலைஞர்கள் எல்லாம் போராளிகளுக்குள்ளே இருந்து பிறக்கிறார்கள். என்ன காரணம் அவர்கள் உண்மையை மட்டும் எழுதுகிறார்கள். அவர்களுடைய திசையில் எந்தப் பொய்யும் கிடையாது. எந்த மயக்கமும் கிடையாது. தான் உயிர்கொடுத்த எந்த இலட்சியத்திற்காக நிற்கின்றானோ அதே உயிர் கொடுக்கும் அந்த




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலட்சியத்தை எழுத்தாகப் படைக்கின்றான். அப்படியாகப் படைக்கும் அந்தப் படைப்புக்கு ஒரு உண்மைத் தன்மையும் ஒரு உயிர்த்தன்மையும் கிடைக்கின்றது. இதனால்தான் அவர்களால் போர் புரிந்தபடியே தரமான படைப்புக்களை தரமுடிகிறது. அறியாத பொருள்பற்றி யாரும் காணமுடியாது. இன்றைக்கு என்னதான் இருந்தாலும் போர்க்களத்தை விபரணத்தை நான் நினைக்கின்றேன், கலிங்கத்துப் பரணி பாடிய ஜெயங் கொண்டான் நிச்சயமாக கலிங்கப்போரில் கலந்திருக்க வேண்டும், கலந்து நின்றிருப்பான். அதன்படியால்தான் அந்த போரின் சாயலே அவனுடைய கவிதையில் வந்தது. போரே அவனுடைய கவிதையில் நின்றது. எனவே, நான் என்ன சொல்கின்றேன் என்று சொன்னால் அந்த உன்னதமான போராளிகளுக்குள்ளே உன்னதமான படைப்பாளிகள் இருப்பதற்கு காரணம் அவனது நெஞ்சிலே இருக்கின்ற உன்னதமான இலட்சியம்தான். அந்த உன்னதமான இலட்சியம்தான் அவனை உன்னதமான போராளியாகவும், படைப்பாளியாகவும் உருவாக்குகின்றது. இது பொய்யற்ற உண்மை. நான் என்னுடைய தேசத்தை விடுவிப்பேன் என்று அவன் எதைக்கருதி தனது உயிரையும் தியாகம் செய்ய நிற்கின்றானோ அதே உணர்வுடன்தான் கவிதை எழுதுகிறான், நாடகம் போடுகின்றான், நடிக்கின்றான். எனவே அந்த உண்மையான போராளியே தரமான படைப்புக்கள் தருவதற்கு இதுதான் சாட்சியமானதாக நான் கருதுகின்றேன்.

**■ காத்திரமான உணர்வுப் பிரம்பாக உண்மையின் வடிவாக, காலத்தை படைக்கும் போர்க்கால இலக்கியங்கள் எமது மண்ணில் உலகத்தரத்தை எட்டும் வண்ணம் படைக்கப்பட்டிருப்பதாக உணர்கின்றீர்களா?**

● உன்னதமான உலகத்தரத்தை எட்டக்கூடிய படைப்புக்கள் தமிழீழத்தில் உருவாகிவிட்டதாக நான் சொல்லவில்லை. ஆனால் உருவாகவில்லை என்றும் நான் சொல்லவில்லை. உருவாகிய இலக்கியங்கள் இன்னும் வெளியே தெரிய வரவில்லை. உருவாக்கப்பட வேண்டிய கலை இலக்கியங்களை அவர்கள் இப்பொழுது உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, நீங்கள் சொல்வதுபோன்று அந்த உன்னதமான உச்சத்தை உரசிச் செல்கின்ற இலக்கியங்கள் படைக்கப்பட்டுவிட்டதென்று சொல்லி பிரகடனம் செய்ய நான் தயாராக இல்லை. அந்த இலக்கியங்களுக்கான வரைகோள்கள் தெரிய அறிகுறிகள் தெரியத் தொடங்கிவிட்டன. ஒரு உன்னதமான உலகத் தரத்திற்கு நிகரான இலக்கியங்கள் படைக்கப்படாவிட்டாலும், படைக்கப்படுவதற்கான அறிகுறிகள் ஆங்காங்கே தெரியத்தொடங்கிவிட்டன. ஆனால், எமது இலக்கியத்தை வேற்று மொழிகளுக்குக் கொண்டுபோய்ப் பாருங்கள். அவர்கள் அதிசயிக்கப்படக் கூடியதாக எங்களுடைய கலை இலக்கியப் படைப்புக்கள் இருக்கின்றன. அதை ஏற்றுக்கொள்ளாதவர்கள் எங்களுக்குள்தான் இருக்கிறார்கள். அதுதான் மிகவும் வேதனையானது. ஏனென்று சொன்னால் தாங்கள் இந்தப் போர் இலக்கியத்துள்ளே வந்து சங்கமிக்கமாட்டோமே. நாங்கள் இந்த போர் இலக்கியம் என்று சொல்லி ஒரு கூடுகட்டி விதந்துரைக்கப்படும் பொழுது தாங்கள் வெளியே நின்றவர்கள் இந்த வடிவத்திற்குள் வரமாட்டார்கள் என்ற ஆதங்கத்தில் என்ன செய்கின்றார்கள் என்றால் உன்னதமான இலக்கியம் படைக்கப்படவில்லையென்று கூறிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் உலகம் இவர்களுடைய சொல்லைக் கேட்கப்போவதில்லை. எங்களுடைய இந்தத் தமிழீழ இலக்கியங்களை, கலைகளை நாங்கள் உலக மொழிகளுக்கு உலகம் தெரியக் கூடியதாக என்று கொண்டு செல்கின்றமோ அன்று உண்மையாகவே எமது இலக்கியங்கள் உலகத்திற்கு நிகரானது என்பதை உலகம் ஏற்றுக்கொள்ளும். அப்படித்தான் இல்லாவிட்டாலும் நாளை நிச்சயமாக தமிழீழப் படைப்பாளி ஒருவன் அல்ல பலர் நிச்சயமாக கலை இலக்கியப் படைப்பாளிகள் உலகத் தரத்திற்கான கலை இலக்கியங்களைப் படைக்கத்தான் போகிறார்கள். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. எத்தனைபேர் வாழ்விழந்து, வசதிகள் குறைந்து, வாசல்கள் யாவும் அடைக்கப்பட்டு, அவலம் சுமந்துநிற்கும் இவர்களிடம் அந்த வாழ்வுக்கு முகம் கொடுக்க வேண்டிய தேவை இப்பொழுது இருக்கின்றது. ஆனால். நெஞ்சிலே அவர்கள் குறித்திருக்கிறார்கள். நிச்சயமாக நான் கூறுவேன் உலகத்தரத்திற்கு இலக்கியங்களுக்கான வரவு அறிகுறிகள் எமது மண்ணிலே



தெரியத் தொடங்கியது மட்டுமல்ல, அப்படி உன்னதமான உலகத்தரத்தை உரசிச் செல்லக் கூடிய தொடுகுறியான இலக்கியங்களும் கலைகளும் எமது தமிழீழப் படைப்பாளிகளால் படைக்கப்படப் போகிறது என்பதை நான் ஆணித்தரமாக உறுதியாகச் சொல்கின்றேன். இது உண்மையானதென்பதை ஆதாரத்துடனும் ஆணித்தரத்துடனும் என்னால் கூற முடியும்.

**■ பொதுவாக வியப்பிற்குரிய விசயம் எதுவெனில், எப்படி நீங்கள் வேகமாக எழுதித் தருகின்றீர்கள் என்பதே. அது பாடல்களாக இருக்கட்டும், கவிதைகளாக இருக்கட்டும் மிகவும் வேகமாக, போராட்டத்தின் பரபரப்பையும், பதிவுத் தேவையையும் ஈடுசெய்ய நீங்கள் பரபரப்பாக இயங்குவது எப்படி முடிகின்றது என்பதை கொஞ்சம் சொல்லுங்களேன். அள்ள அள்ளக் குறையாமல் அருமையான கவிதைகள், இலக்கியப் படைப்புக்கள் எப்படி உங்களின் உள்ளிருந்து ஊறிவருகின்றது என்ற அதிசயத்தைக் கொஞ்சம் சொல்லுங்களேன்?**

● இந்தக் கேள்வி என்னையே நான் மறுபரிசீலனை செய்வதற்கு வாய்ப்புத்தருகின்றது. என்னை அதிகமாகப் பலர் சொல்வார்கள் வேகமாக எழுதுபவன் என்று சொல்லி. இன்னும் சிலர் சொல்வார்கள் வேகமாக எழுதுவதால் அது ஒரு அரைவேக்காடு என்றும் எங்கும் போகாத தன்மையும் அதில் இருப்பதாகக் குறிப்பிடுவார்கள். இன்னும் சிலர் சொல்லுகிறார்கள் உன்னதமான இலக்கியங்கள் எல்லாம் அவசரத்தில் ஆக்கமுடியாதென்று. இவை எதற்குமே எனக்கு பதில் சொல்லத் தெரியவில்லை. நான் இலக்கியங்கள் என்று சொல்லி நான் ஏதோ நோபல் பரிசு பெறுவதற்காக அல்லது நாளைய வரலாற்றிலே எனக்கும் ஒரு இடம் கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் எழுதவில்லை. ஆனால், அன்றுதொட்டு இன்றுவரை உலக இலக்கியங்களிலே எனக்கு ஒரு இடம் கிடைக்க வேண்டும். உலகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெரிந்த ஒரு படைப்பாளியாக எனக்கொரு சிலை வைப்பார்கள், மணிமண்டபம் வைப்பார்கள் என்ற எந்த மயக்கங்களும் எனக்குக் கிடையாது. நான் கொஞ்சம் வேகமாக எழுதுவதென்பது உண்மை. இதற்கு நான் ஒன்று சொல்கிறேன், உண்மையான, அற்புதமான அதற்காக நான் அற்புதமானவன் என்ற சொல்லவில்லை, ஒரு கலைஞன், கவிஞன் தான் எழுத வேண்டும் என்பதற்காக பொய் சொல்லுவதில்லை. உண்மையில் அவன் எழுதுகின்ற பாடுபொருள் பற்றிய அந்தப் பக்கங்கள் எல்லாவற்றையும் அவன் அதற்குப் பிறகு தான் போய்ப்பார்ப்பதுமில்லை. ஒரு ஓவியன் மாடு வரைவதற்காக மட்டும் மாட்டைப் பார்த்துவிட்டுத்தான் வந்து வரைவதில்லை. ஏலவே அந்தக் கலைஞனிடம் மாடுபற்றிய ஒரு உருவம் இருக்கும். ஒரு தென்னைமரத்தை ஒரு ஓவியன் கீறுவதாக இருந்தால் தென்னைமரம் ஒன்று கீறவேண்டும் என்பதற்காகப் போய்த் தென்னைமரத்தைப் பார்ப்பதில்லை. அதற்கு முதலே தென்னைமரத்தைப் பார்த்து வைத்துத் தன் நெஞ்சிலே பதிய வைத்திருப்பான். அப்பொழுது அவனுக்கு சுலபமாக மிக விரைவிலே அவனாலே கீற முடிகிறது.

இந்தப் போரின் அவலத்தை இந்தப் போருக்குள் மக்கள் படும் வதையை அவர்கள் கூட நின்று அவர்கள் பெற்ற வெற்றியிலே, மகிழ்ச்சியிலே எல்லாம் நான் ஏலவே பார்த்து வைத்திருக்கின்றேன். எழுத வேண்டிய நேரத்தில் எழுத முற்படும் போது அது வேகமாக பீறிட்டு வருகிறது. அவ்வளவும்தான். இதில்வேகம், அமைதி, ஆறுதல், யோகங்களை நீக்கல் அப்படி எதுமே படைப்புக்களில் கிடையாது. படைப்பு படைப்புத்தான் அது வேகமாக வரும் ஆறுதலாக வரும் என்பதில்லை. ஒரு தேர்ந்த கலைஞன் ஒரு தேர்ந்த கவிஞன் அவன் ஏலவே தன்னுடைய மனதிலே பதித்து வைத்திருக்கின்றவையெல்லாம் பீறிட்டுக் கிழம்பும்படியாக இருக்கும் போது அது வேகமாக வந்துவிடுகின்றது. ஆனையிறவு வெற்றியை என்னைப் பாடச் சொல்வதற்கும் அதை அறியாத ஒருவர் பாடுவதற்கும் அதற்கு வேண்டிய தரவுகள் அதற்கான விளக்கங்கள் வரைபடங்கள் எல்லாவற்றையம் எடுத்து வைத்துக் கொண்டு எழுதுவதற்கு நாளாகும். இதனால் ஆனையிறவு படை நடத்தும் போதும் அதற்குள்ளே மக்களினுடைய பங்களிப்பு இருந்த போதும் போராளிகள் படை நடத்தும் போதும் பக்கத்திலிருந்து பார்த்து பங்குபற்றியவன் என்ற படியால் அந்த வெற்றியை ஆனையிறவு வெற்றியை நான் உடனடியாக எழுதக்கூடியதாக இருந்தது. ஆனையிறவு வெற்றி கொள்ள முன்னமே "ஆனந்த சுதந்திரம் பெற்று விட்டோமே ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே" என்று பாடிய போது ஆனையிறவுத் தளம் விழுவதற்கு 4, 5 மணித்தியாலங்களுக்கு முதலே ஒரு நாளுக்கு முதலே நான் "ஆனையிறவின் மேனிதடவி போனது போனது பூங்காற்று" என்று எழுதினேன். எனவே அவசரத்தன்மை என்பது அதனுடைய தரத்தை எந்தவிதத்திலும் குறைக்கப்போவதில்லை. ஏனென்றால் தினசரி கணப் பொழுதுக்குள்ளே மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பூமி எங்களுடைய தேசம். எங்களுடைய போராட்டத்திற்கு ஒரு பரப்புரைத் தேவை இருக்கின்றது. இதை ஒரு பிரச்சாரம் என்று யாரும் சொல்லிவிட்டுப் போகலாம். எனக்குப் பரவாயில்லை. அதில் ஒட்டாமல் நிற்பவர்களுக்கு அது ஒரு பரப்புரையாகத் தெரியும். அதுவும் அந்த மண்ணுக்கு தேவையானதொன்று. ஒரு மாவீரன் மறையும் போது அவனைப்பற்றி நாலுவரி. ஒரு வெற்றி பெறும்போது அந்த வெற்றியைப் பற்றி நாலுவரி. இது கவிதை போலக் கவிதையாக விழுகின்றது. இது பரப்புரையோ பிரச்சாரமோ எனக்கு அதைப்பற்றி பிரச்சனையே கிடையாது. ஆனால், இந்த மண்ணின் தேவை, அந்தப் போராட்டத்தின் தேவை, விடுதலையின் தேவை எங்களை அப்படியே கொண்டுவந்து சேர்க்கினறது. இதற்கொரு புதிவுத் தேவையும் உண்டு.

உண்மையாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நாளைக்கு வரலாற்று ஆசிரியர்கள் வரலாற்று ரீதியில் எழுதுவார்களோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால், இந்தத் தமிழீழ விடுதலைப் போராட்டம் அப்படியே பாடலாகவோ கவிதையாகவே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதுதான் என்னுடைய இலக்கியம். என்னுடைய வெற்றியே அதுதான். நாளைக்கு வரலாற்று ஆசிரியர் ஒருவர் செய்ய வேண்டிய பணியை நான் கவிதை மூலமும் பாடல் மூலமும் இந்தப் போராட்டத்தைப் பதிவு செய்து வைத்திருக்கின்றேன். அதை வாயெடுத்துப் பாடுகிறார்கள். நான் புலம்பெயர்ந்து வந்து பார்த்த பிறகுதான் தெரிகிறது. என்னுடைய கவிதை எவ்வளவு தூரம் புலம்பெயர்ந்த உறவுகளிடம் போய் வேர் பாய்ந்திருக்கின்றதென்பதை. என்னுடைய கவிதைகளை ஆங்காங்கே அவர்ளே உச்சரித்து அவர்கள் பெரிசாகப் பாடினார்கள். நான் சந்தோசப்படுகிறேன் இது போதும் எனக்கு. எனவே, இதில் அவசரம் என்று எதுவுமில்லை. உண்மையாகச் சிலர் சொல்கிறார்கள் அள்ள அள்ளக் குறையாத அருமையான கவிதை என்று. நான் சந்தோசப்படுகின்றேன். சந்தோசப்படுவதற்கு எனக்கு நியாயம் இருக்கின்றது சந்தோசப்படுகிறேன். இது உருவாவதற்கு காரணம் என்னவென்று சொன்னால் ஏலவே அந்தப் போராட்டத்துடன் அந்த மண்ணிலே வேர் பரவி நான் நிற்கின்றேன். எனவே, ஒரு போராளியின் இழப்பு எனக்குத் தருகின்ற சோகம் ஒரு வெற்றி எனக்குத் தருகின்ற சந்தோசம் மற்றது எங்களுடைய இடப்பெயர்வில் ஏற்படுகின்ற அவலம் ஏலவே நான் அறிந்தவை. எனவே அது எனக்குள்ளே இருந்து பீறிட்டுவருவதில் எந்த அதிசயமும் இல்லை. அதை தேடவேண்டிய தேடல் எனக்கு இல்லை. அதில் சிலவற்றை என் கண்ணாலே பார்த்தவை. எனக்கு மட்டுமல்ல களத்திலே, நிலத்திலே நிற்கின்ற சகல படைப்பாளிகளுக்கும் இருந்ததுதான் இது எனக்கென்று வந்ததில்லை.

களத்திலே நிற்கின்ற சகல படைப்பாளிகளுக்கும் இந்த நிலைதான். எனவே, அவசரத்துக்குள்ளேயும் அற்புதமாயும் அது பீறிட்டுத் தளைக்கிறது. ஏனென்று சொன்னால் உண்மை பக்கத்திலேயே நிற்கிறது. நாங்கள் பார்க்கின்ற அந்த உண்மை எங்களுடனேயே ஒட்டிக்கொண்டு நிற்கின்றது. அதைத் தேட வேண்டியதில்லை. அது நாளாந்த வாழ்வாகிவிட்டது. அந்த மண்ணும் மக்களும் போராட்டமும் அந்த அவல வாழ்வும் எங்களுடைய வாழ்வாகிப் போய்விட்டது. வாழ்வானவைகள் வெளியே வருவதற்கு எங்களுக்கு அவகாசம் தேவையில்லை. அது அழகாக வந்துதான் ஆகும். அவசரமானதென்று தள்ளி வைக்கமுடியாது. ஒன்றி நிற்கும் இடத்திலே அது உன்னதமாக பிரகடனம் கொள்கிறது. அப்படித்தான் களத்திலே நிற்கின்ற படைப்பாளிகள் அனைவரிடமும் அது வருகிறது. என்னிடமும் அது இருக்கிறது.

**■ சாதாரண குடும்பவாழ்க்கை நடாத்திக் கொண்டிருந்த நீங்கள் எந்தச் சந்தர்ப்பத்தில், எத்தகைய உள்ளுணர்வின் உந்துதலில், விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்டீர்கள்?**



● உண்மையிலே நான் அறிந்த காலம் தொடங்கி என்னைத் தெரிந்தவர்களுக்குத் தெரியும் நான் ஒரு கலகக்காரனாக இருந்தேன். அதனாலே நான் ஒரு கவிஞனானேன். நான் எப்பொழுதுமே எங்கெங்கு மானிடம் வதைபடுகின்றதோ அங்கெல்லாம் நானும் சேர்ந்து குரல் கொடுத்திருக்கிறேன். வியட்நாம் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் நேரம் அதற்கும் எழுதியிருக்கிறேன். சிலியிலே அலன்டே கொல்லப்பட்ட போதும் அதற்கும் அழுதழுது நான் எழுதியிருக்கிறேன். சீனப் புரட்சியினுடைய மாசேதுங் அவர்கள் பற்றியும் நான் எழுதியிருக்கிறேன். எனவே, எங்கெங்கு மானிடத்தின் திசை நோக்கிய எழுச்சிகள் ஏற்படுகின்றதோ விடுதலைகள் ஏற்படுகின்றதோ விடுதலைப் போராட்டங்கள் நடக்கின்றதோ அங்கெல்லாம் நான் நின்றிருக்கின்றேன். 1965ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டிலே தீண்டாமை இயக்கம் தீண்டமை போராட்டத்தை நடத்தியபோது நான் அங்கு களத்தில் நின்றேன். அவர்களில் ஒருவனாக நான் அங்கு நின்றேன். பண்டித்தலைச்சி அம்மன் கோயிலில் நின்றேன். மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலில் நின்றேன். எங்கும் நின்றேன். மானுடம் வதைபடும் இடமெல்லாம் இந்தக் கவிஞன் நின்றிருக்கின்றான். ஒரு சாதாரண வாழ்க்கையை நடத்திக் கொண்டு ஒரு சாதாரண குடும்பத்திலிருந்துதான் நான் தோற்றம் பெற்றேன். ஆனால் கவிதை என்ற கடிவாள் எனக்கொரு பலமான ஆயுதமாக மாறியது. நான் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொள்வதற்கு இந்த மானுடம் தழுவிய ஆவல்தான் காரணம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

வதைபடும் இனத்திற்காக குரல் கொடுக்கும் ஒரு பணி எனக்கு முன்னால் நின்றது. எனவே நான் விடுதலைப் புலிகள் அமைப்புடன் என்னை இணைத்துக் கொண்டேன். இன்றைக்கு 20 வருடங்களாகிவிட்டது. விடுதலைக்காக போராடுகின்ற ஒரு இனத்தின் கவிஞன். அந்த விடுதலைப் போராட்டத்துடன்தான் இருப்பான். பாரதி நமக்குத் தொழில் கவிதை என்று சொன்னானே அது அப்படித் தான். இன்று பலருக்கு நமக்குத் தொழில், தொழில். அதற்குப் பிறகு கவிதையாகச் செல்கிறது. ஆனால் எனக்கு நமக்குத் தொழில் கவிதையாகிவிட்டது. அந்த விடுதலை அமைப்புடன் என்னை நான் இணைத்துக்கொள்ள வேண்டிய தேவை வந்துவிட்டது. இணைத்துக் கொண்டேன். எனவே, இதற்கு எந்தவிதமான பிரதிபலனுமில்லை, பிரதிபலன்களை எதிர்பார்ப்பதுமில்லை. நான் இணைந்த நேரத்திலே என்னுடைய குடும்பம் மிகவும் வதை சுமந்தது. கஷ்டம் அனுபவித்திருந்தது இன்றுவரை. ஆனால் அது கடமை ஒரு கலகக்கார கவிஞனுக்கு அது தேவை. அந்த உண்மையான சக்திகளுடன் தன்னை இணைத்துக்கொள்வது காலத்தின் கட்டாயம், கடமை அதை நான் நிறைவேற்றியிருக்கின்றேன். எனவே, எனக்கு இயல்பாக இருந்த அந்த மானுடத்தின் மீதான காதல் அல்லது முகத்தடிகளை உடைத்தெறிய வேண்டும், அந்தப் போராட்டத்துடன் இணைத்துக்கொள்ள வேண்டும் என்ற அந்தக் கவிஞனுடைய குரல் என்னை இந்த விடுதலைப் புலிகள் அமைப்புடன் விடுதலைப் போராட்டத்தை நடத்துகின்ற மையசக்திகளுடன் பிரபாகரன் என்ற பெரும் தலைவர் தலைமையில் என்னை ஏற்றுக்கொள்ள வைத்திருக்கிறது. இது கவிஞனுக்கு உண்மையாக போரிடும் கலைஞனுக்கு மானுடத்தின் வதையைக் கண்டு மனம் பொறுக்காத கலைஞன், கவிஞன் எவருக்குமே இது தேவையானது. நான் உண்மையாக இருந்தேன், இந்த விடுதலைப் போராட்டத்துடன் என்னை இணைத்துக் கொண்டேன்.

■ **தியாகி திலீபன் உண்ணாவிரதம் இருந்தபோது உங்களால் படிக்கப்பட்ட அந்தக் கவிதை தமிழ் மக்கள் மனங்களில் இடம்பிடித்த அற்புதமான உணர்வுப் பதிவு. அந்தக் கவிதையை அந்தச் சூழலில் வாசித்தபோது நீங்கள் எப்படி உணர்ந்தீர்கள்?**

● தியாகி திலீபன் உண்ணாவிரதம் இருந்ததும் அவன் வீரச்சாவைத் தழுவிக் கொண்டதும் இன்றுவரை ஏதோ நம்பமுடியாத செய்தி போலத்தான் இருக்கிறது. உண்மையிலே திலீபனை உண்ணாவிரத மேடையிலே கொண்டு உட்கார்த்திவிட்டோம் கந்தன் கருணை வீட்டிலிருந்து புறப்பட்டு அவனை அழைத்துவந்து நல்லூரின் அந்த வீதியிலே மனோன்மணி அம்மன் கோவில் மூலையிலே அமைக்கப்பட்ட மேடையிலே உட்கார்த்தி இருக்கிறோம். அப்பொழுது நான் உண்மையைச் சொல்கிறேன் . நான் என்றுமே பொய் சொல்வதில்லை. அப்பொழுது திலீபனை நாங்கள் சாகக் கொடுப்போமென்று நான் கருதவில்லை. ஆனால் திலீபன் கருதியிருந்தான். நான் கருதவில்லை. ஒரு 4, 5 நாட்கள் வரையும் திலீபனைச் சாகக் கொடுப்போமென்று நான் கருதவில்லை. இந்தியாவை அப்பொழுது நம்பாவிட்டாலும் முதற்பலியாக திலீபனையே சாவு கொள்ளக் கொடுப்போம் என்று நான் கருதவில்லை. எனவே, அந்த 4 நாட்கள் வரையும் எதிர்ப்புணர்வை இந்தியாவிற்குக் காட்டுகின்றோம் என்பது போல்த்தான் கழிந்தது. ஆனால் நான்காவது நாள் திலீபனுடன் பேசிவிட்டு வரும் போது எனக்குச் சாடையாக ஏதோ மனதில் இவனை நாம் இழந்து விடுவோமோ என்ற எண்ணம் எனக்குள்ளே வரத்தொடங்கியது.

நானும் திலீபனும் மிகவும் நெருக்கமானவர்கள். ஒரு வழியில் சொன்னால் என்னை இந்த விடுதலைப் புலிகளுடன் இணைக்க வைத்ததே திலீபனும், கேணல் கிட்டுவும்தான். நான்காம் நாட்களுக்குப் பிறகு என்னுடைய அந்தர ஆத்மா சொல்கிறது அவனை இழக்கப்போகிறாய் என்று. இந்த மண் இவனை இழக்கப் போகிறது என்ற குரல் எனக்குள்ளே கேட்கத் தொடங்கியது. அப்பொழுதுதான் அந்தக் கவிதையை எழுதினேன். எழுதிவிட்டு எல்லாருமே திலீபனுக்கு அமைக்கப்பட்ட மேடைக்கு அருகில் அமைக்கப்பட்ட மேடையில் ஏறித்தான் கவிதை வாசித்தோம். நான் கவிதை எழுதிவிட்டேன் என்பதையும் நான் இன்று கவிதை வாசிக்கப் போகிறேன் என்பதும் திலீபனுக்குத் தெரிந்துவிட்டது. திலீபன் எனக்கு ஒரு செய்தி



அனுப்புகிறான், "புதுவை அண்ணையை தயவுசெய்து கவிதையை வாசிக்க வரவேண்டாம் இந்த மேடைக்கு, ஏனென்றால் நான் தாங்கமாட்டேன். அவரும் தாங்கமாட்டார்" எனவே, அந்த மேடைக்கு ஏறி தயவுசெய்து வாசிக்க வேண்டாம் என்று சொல்லி. அதே போல் அந்தக் கவிதை மேடையில் வாசிக்கப்பட்டதல்ல. அது அப்பொழுது எங்களுடைய நிதர்சனத்தினுடைய ஒலிபரப்பு நடந்து கொண்டிருந்த நேரம் நாலாம் நாள் அந்த ஒலிபரப்பினூடாகத்தான் நாங்கள் அந்தக் கவிதையை ஒலிபரப்பினோம். மேடையிலிருந்து திலீபன் அந்தக் கவிதையைக் கேட்டான். அந்தக் கவிதையை இன்றுவரை உச்சமாக அதாவது நீங்கள் குறித்தது போன்ற அற்புதமான மன உணர்வின் பதிவாகத்தான் நான் நினைக்கிறேன்.

"நாவிழந்து நாதமணி பேச்சிழந்து
தூண் துவண்ட மாதிரியாகப் போய் முடியப் போறாயா
காற்றே நீ நிறுத்து கடல் அலையே நீ நிறுத்து
கூற்றுவனா அவனைக் கொண்டுவந்து தூக்கிலிடு"

எனக்கு என்னவென்று சொன்னால் அந்தர ஆத்மா கூறத்தொடங்கிவிட்டதெல்லவா திலீபனை நீ பறிகொடுக்கப் போகிறாய்என்று. அந்த உணர்வலையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் பொழுது சனக் கூட்டத்திலிருந்த பல்லாயிரக் கணக்கானோர் "ஓ" என்று கத்தியதை நான் அறிவேன். ஏனென்று சொன்னால் ஒலிப்பதிவை முடித்துவிட்டு ஒலிபரப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**"என்னுடைய வாழ்க்கையிலே எனக்குக் கிடைத்த பெரும் அற்புதமான, வீரம் செறிந்த, வீரத்தில் விளைந்த எங்களி அருகிலிருந்து வாழும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருப்**

நடந்துகொண்டிருக்கும் பொழுது நானும் அந்த வீதியிலே பார்த்துக் கொண்டு நின்றேன். அந்தச் சூழலிலே எனக்கு ஏற்பட்ட உணர்வு அந்த முதல் நான்கு நாட்களிலும் இருந்த உணர்வல்ல. இவனை நான் இழக்கப்போகிறேன் இழக்கப்போகிறோமா இவனை நான் இழந்துவிடுவேனா இழந்துவிடுவோமா அது திரும்பத் திரும்ப வந்துகொண்டிருந்தது. அந்தக் கவிதையைப் பார்த்தால் தெரியம். உன்னை நாங்கள் இழக்கப்போகிறோமா? என்று சொல்லிக் கேட்கும். அந்த நேரம் அந்த உணர்வு இன்றுவரை அதாவது நீங்கள் குறிப்பது போல என்னால் அதை ஜீரணிக்க முடியாமல் அவனை இழந்து போனதை ஏற்றுக்கொள்ள முடியாமல்தான் இருக்கிறது. அந்தக் கவிதை உண்மையிலே எல்லோராலும் எங்கும் பேசப்படுகின்றதென்று சொன்னால் அந்த நேரத்திலிருந்த சூழலும் நான் அதனால்பட்ட வேதனையும் அவனை இழந்துவிடுவேனோ என்ற எண்ணமும் எல்லாம் சேர்ந்து ஒரு உணர்வுத்தளத்தை பிழியவைத்து எழுதப்பட்ட கவிதை அது.

**■ தமிழீழத்தின் முதன்மைக் கவிஞராக போற்றப்படுகின்றீர்கள். எண்ணுக்கணக்கில்லாத கவிதைகளைப், பாடல்களைப் படைத்துள்ளீர்கள், அவற்றில் பலவற்றை நீங்கள், ஞாபகத்தில் கொண்டுவர முடியாமல் இருக்கலாம். ஆனால் நீங்கள் படைத்த முதலாவது கவிதை அநேகமாக ஞாபகத்தில் இருக்கும். அது எக்கவிதை, எந்தச் சூழ்நிலையில் அல்லது எத்தகைய மன உந்துதலில் அதைப் படைத்தீர்கள்?**

● தமிழீழத்தின் முதன்மைக் கவிஞனாகப் போற்றப்படுகிறேனோ எவ்வளவு ஆயிரக்கணக்கான கவிதைகளைப் படைத்திருக்கிறேனோ இவையெல்லாம் நாளைக்கு வாழப் போகின்றனவோ எதுவுமே எனக்குத் தெரியாது. ஆனால், என்னுடைய முதலாவது கவிதையின் வரிகள் எனக்கு நினைவில்லை. அந்தக் கவிதை 1987ம் ஆண்டு வரையும் என்னிடம் இருந்தது. எனது 14 வயதிலே அந்தக் கவிதை பிரசுரமானது. அதற்கு முதலே சின்னச் சின்ன கவிதைகளை என்னுடைய மாணவ காலத்திலே எழுதியிருந்தேன். யாழ்ப்பாணத்திலே 'ஈழநாடு' பத்திரிகை ஒன்று வந்து கொண்டிருந்தது. அதிலே மாணவர் பக்கம் என்று சொல்லி ஒரு பக்கம் வரும். புதன்கிழமையிலோ வியாழக்கிழமையிலோ வரும். அதில் நான் எனது 14 வயதிலே ஒரு கவிதையை எழுதியிருந்தேன். அதுதான் நான் எழுதிப் பிரசுரமான முதலாவது கவிதை. அந்தக் கவிதைத் துண்டு என்னிடம் இருந்தது. அது 'மழைக்காலம்'. அந்த கவிதை உண்மையிலே எனக்கு நினைவில்லாமல் இருக்கிறது. 'மழைக்காலம்' என்று சொல்லி அந்தக் கவிதையை எழுதியிருந்தேன். குடை பிடிப்போம், வழுக்கும் என்ற மன உணர்வில் நான் எழுதியிருந்தேன். அந்தக் கவிதை 1987ம் ஆண்டு வரையும் என்னுடைய கையில் இருந்தது. ஆனால் அந்த 'லங்கா தகனம்' இரண்டாம்முறை நடந்ததல்லவா. இந்திய இராணுவம் வந்த காலத்திலே என்னுடைய வீட்டை அவர்கள் எரித்தார்கள. என்னுடைய பொருட்கள், கவிதைகள், நான் தேடி வைத்திருந்த ஆயிரக்கணக்கான பிரசுரமான, பிரசுரமாகாத அத்தனை கவிதைகளும் தீயிட்டுக் கொளுத்தினார்கள். நான் உலகத்திலே யாரையும் மன்னிப்பேன், என்னுடைய நாடுதேடி, வீடு தேடி வந்து எரித்த இந்திய இராணுவக் காலத்தை நான் சாகும்வரை, இறக்கும்வரை ஏன் இறப்பிற்குப் பின்னும் என்னுடைய தலைமுறையே மன்னிக்கக் கூடாது என்ற கருத்துடையவன். ஏனென்று சொன்னால் என்ன கேள்வி என்றால் பதறாமல், மெய்தளராமல் அவர்களால் எப்படி எரிக்க முடிந்தது. அந்த நேரத்தில் என்னுடைய கவிதைகளும் என்னிடமிருந்து எரிந்து போனது. ஆனால் என்னுடைய முதல் கவிதை வரிகளை என்னால் ஞாபகத்தில் கூறமுடியாதிருக்கிறது. அது ஒரு மழைக்காலம் பற்றி என்னுடைய 14 வயதிலே ஈழநாடு பத்திரிகையில் எழுதப்பட்ட கவிதை என்று கூறுவேன். சின்னவயதில் எழுதியது.



அதிகமாக நான் நினைக்கின்றேன் என்னவென்றால் சோமசுந்தரப் புலவரோ அல்லது தேசிக விநாயகம்பிள்ளையோ யாரோ எழுதிய தாக்கத்திலிருந்து எழுதப்பட்ட கவிதை எனக்கு நினைவில்லை. வழுக்கும், குடைபிடித்து நடப்போம் என்று சொன்ன கவிதையினுடைய தாக்கத்திலிருந்து பிறக்கப்பட்ட கவிதையாக இருக்குமென்று நான் நம்புகிறேன். அதுதான் என்னுடைய முதற் கவிதை.

**■ தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுடன் அருகிருந்து பார்க்கவும், பேசவும், பழகவும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறீர்கள். தலைவர் குறித்து நீங்கள் பல பாடல்களை, கவிதைகளைப் படைத்திருக்கிறீர்கள். என்றாலும், அவற்றிற்குள் இன்னமும் பிடிபடாமல் இருக்கின்ற தலைவரின் குணாதிசயங்கள், அவரின் பண்புகள் குறித்து எரிமலை வாசகர்களுக்காக கூறுங்களேன். உங்களின் கவிதை இதயத்தில் எங்கள் தலைவரின் பதிவு என்ன?**


● என்னுடைய வாழ்க்கையிலே எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாக நான் கருதுவது என்னவென்று சொன்னால் இந்த அற்புதமான,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ாக்கியமாக நான் கருதுவது என்னவென்று சொன்னால் டைய தேசியத் தலைவரின் பக்கத்தில் இருந்து, தான் ”



வீரம் செறிந்த, வீரத்தில் விளைந்த எங்களினுடைய தேசியத் தலைவரின் பக்கத்தில் இருந்து, அருகிலிருந்து வாழும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது. நான் எமது தலைவரை மிகவும் அருகிலிருந்து பார்த்திருக்கிறேன், பேசியிருக்கிறேன், பழகியிருக்கிறேன் அந்த வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன் என்பது உண்மைதான். அவர் மிகவும் மகிழ்ச்சியாக இருந்த நாட்களில் நான் அவருக்கு அருகில் இருந்திருக்கிறேன். அவர் களத்தில் வழிநடத்திக் கொண்டிருந்த நேரத்தில் அவர் அருகிலிருந்து பார்த்திருக்கிறேன். அவர் கோபப்பட்டு விழிகள் சிவந்திருந்த நேரத்திலும் அவரை நான் அவர் அருகிலிருந்து நேரில் பார்த்திருக்கிறேன். மிகவும் உணர்வுத்தளத்திலே அவர் உட்கார்ந்திருந்ததையும் அவர் அருகிலிருந்தே நான் பார்த்திருக்கிறேன். செஞ்சோலைப் பூக்களுடன், காந்தரூபக் கதிர்களுடன் அவர் அளவளாவி இருக்கின்ற அந்த மகிழ்ச்சியான நேரங்களிலும் நான் அருகிலிருந்து பார்த்திருக்கிறேன். கலை இலக்கியவாதிகளுடன் அவர் ஒன்றிக்கலந்து தன்னுடைய அந்த அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டிருக்கும் போதும் பக்கத்திலிருந்து பார்த்திருக்கிறேன். இப்படி நான் நீண்டகாலமாக ஏறக்குறைய 15 வருடங்களாக அவருடைய அருகில் இருந்து அவருடைய சகல உணர்வுத் தளங்களையும் புரிந்து கொள்ளக் கூடியதாக நான் அவருக்கு மிக நெருக்கமாக இருந்திருக்கிறேன் என்பது உண்மைதான். அதை வைத்துத்தான் என்னுடைய பாடல்களிலும், கவிதைகளிலும் அவரைப் படம்பிடிக்கக் கூடியதான பாக்கியம் எனக்கு கிட்டியது. அது யாருக்கும் கிடைக்காத வரம். நான் பாடல்களிலும், கவிதைகளிலும் குறிப்பது வெறும் வார்த்தைகளல்ல. நான் அருகிலிருந்து பார்த்து அனுபவித்ததை கண்டுகொண்டதை அந்த வார்த்தைகளுடைய உருவகம்தான் அந்தக் கவிதைகளும், பாடல்களும். அதில் எந்தவிதமான பொய்யுமில்லை, எந்தப் புனைவுமில்லை. எனது கண்ணினூடாக நெஞ்சுக்குள் இறங்கி எமது தேசியத் தலைவர்தான் என்னுடைய வரிகளூடாக வெளியே வருகிறார் அவ்வளவும்தான். நான் முதலில் குறிப்பிட்டது போன்று பல சூழ்நிலைகளில் சந்தர்ப்பங்களில் பலபல உணர்வுத்தளங்களிலுள்ளே அவர் கட்டுண்டு இருந்த நேரங்களில் எல்லாம் அவரை நான் பார்த்திருக்கிறேன். என்னால் முடிந்தளவு அவரைப்பற்றி பாடல்களாகவும் கவிதைகளாகவும் ஆக்கியிருக்கிறேன். நான் ஒரு கவிஞன், ஒரு படைப்பாளி என்பதற்கு மேல் ஒரு அமைப்பினுடைய ஒரு பொறுப்பான பதவியில் இருப்பவன். தமிழீழத்தினுடைய கலைபண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளர். அந்த இயக்கச் செயற்பாடுகள் தேவை கருதியும் தேவையாகவும் நான் அவருக்குப் பக்கதிலிருந்து பார்த்திருக்கிறேன். இரண்டுக்கும் நிறைய வித்தியாசம் உண்டு.

இந்த விடுதலையின் செயற்பாட்டிலே அவர் ஒரு வித்தியாசமாக இருந்தார். விடுதலையினுடைய அந்த வெற்றியான நகர்வுத் திசையிலே அவர் குறியாக, மிகவும் குறியாக இருந்தார். சில எங்களுக்குத் தெரியப்படுத்துவார். அது இப்படியிருந்தால், இப்படியிருக்கலாம்தானே என்ற கருத்துக்களை முன் வைப்பார். தமிழீழத் தேசியத் தலைவர் அவர் ஒரு சிறந்த ஓவியன், நல்ல கவிஞன், நல்ல கலை இலக்கிய ஆற்றலன், ஒரு தேர்ந்த வாசகன் இத்தனை பணிகளுக்கிடையிலும் தினசரி வாசிப்பதற்கு நேரம் ஒதுக்குகின்ற ஒரு மனிதன், தேடலுள்ளவர் இப்படியே அருடைய பரிமாணங்களை நான் அறிந்திருக்கிறேன் பார்த்திருக்கிறேன்.

அவற்றுள் இன்னும் பிடிபடாமல் இருக்கின்ற குணாம்சங்களை நீங்கள் கேட்கின்றீர்கள். அவருடைய பண்புகள் பற்றிக் குறித்திருக்கிறீர்கள் அவரைத் தெரிந்து கொண்டதும், அவரைப் புரிந்து கொண்டதும் நான் எல்லாவற்றையும் வரிவடிவங்களாக்கியிருக்கிறேன், பாடலாக்கியிருக்கிறேன். எனக்கு இன்னும் பிடிபடாமல் இருப்பவற்றை இன்னும் அவருடன் நெருக்கமாகப் பழகும் போதுதான் பெற்றுக்கொள்ள முடியும். பெற்றுக் கொண்ட எல்லாவற்றையும் நான் பதிவு செய்துகொண்டிருக்கின்றேன். நான் நினைக்கின்றேன் தலைவரைப் பற்றி அதிகம் எழுதிய கவிதைகளும், பாடல்களும் என்னுடையவைதான் என்று. எனவே மீதியாக அவருடைய குணாதிசயங்கள் பண்புகள் பற்றியதாக இருந்தால் தொடர்ந்தும் எனக்கு அவர் அருகில் இருக்கும் பாக்கியம் சித்தித்திருந்தால் இனி வரும் அவருடைய குணாதிசயங்களையும் பண்புகளையும் அறிந்து அதைப் புதிதாக எழுதவேண்டிவரும். ஆனால் அவருடைய முழுத்தோற்றத்தையும் யாராலும் எட்டிப்பிடித்துவிடலாம் என்று நான் கருதவில்லை. நானும் தோற்பேன். ஏனென்று சொன்னால் தேசியத் தலைவர் அவர்கள், நான் முதலில் சொன்னது போல பல பரிமாணங்கள் கொண்டவர். ஒரு களத்தை வழிநடத்துகின்ற தளபதிபோல் இருப்பார், இந்த நிலத்தின் அதிகளவு காதல் பெற்ற மனிதனாக இருப்பார், மிகவும், மிகவும் மெல்லிய இதயம் கொண்ட மனிதனாக அவரைப் பல தடவைகள் நான் பார்த்திருக்கிறேன். செஞ்சோலை, காந்தரூபனுக்குள் நுழைந்துவிட்டால் அவர் ஒரு தந்தை ஸ்தானத்திற்குப் போய் அவர் ஒரு விளையாட்டுப் பிள்ளையாக மாறுவதைக் கூட நான் பார்த்திருக்கிறேன். அந்தச் சின்னப்பிள்ளைகளுடன் சின்னப்பிள்ளையாக இருந்து விளையாடுவதை நான் பார்த்திருக்கிறேன். ஒரு குண்டுவீச்சு அல்லது ஒரு பெரிய அழிவுகளை எதிரி எங்கள் மீது ஏற்படுத்திய தருணங்களிலெல்லாம் நான் மிகவும் குறுகிய நேரத்தில் அவரின் பக்கத்தில் இருந்திருக்கிறேன். அவருடைய கொதிப்புணர்வு எனக்குத் தெரியும். அப்படியே விழி சிவந்து இருக்கும். அந்த நேரத்திலும் நான் பார்த்திருக்கிறேன் ஆனால் எந்த வடிவத்தில் பார்த்தாலும் தலைவர் அவர்களுக்குள்ளே ஒரு மனிதம் நிறைந்த மனிதனாக இருப்பதைத்தான் என்னால் பார்க்கமுடிகிறது, காணமுடிகிறது. இது தவிர எனக்கு பிடிபட்ட அவருடைய குணாதிசயங்கள், பண்புகள் யாவற்றையும் நான் எனது பாடல்களிலும் கவிதைகளிலும் குறித்துவிட்டேன். புதிதாக இனி நான் இனம் காணுவதை இனிமேல் நான் குறிப்பேன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





மலைமகள்

# மறுபடியும் நிகழும்

பாணனுக்குப் பரிசாகப் போன சிறு நிலமே, யாழ்ப்பாணமே.

விடுதலை - உணர்வின் வேரையும் வீரியத்தையும் அக்கினிக்குஞ்சாக எப்போதும் தன் மடி சுமக்கும் பனங்காமத்து வன்னிமையே, பெரு நிலமே.

ஒரு வயிற்றில் பிறந்த இரு சகோதரிகள் போலவே உங்களில் எத்தனை வேறுபாடு.

நினைத்ததெல்லாம் நடக்க வேண்டும் என்ற அடமும், எவரோடும் சட்டென ஒட்டுவதும், அதே வேகத்திலேயே வெட்டுவதுமான துடுக்குத்தனமும் கொண்ட இளையவள் போன்றவள் யாழ்ப்பாணம்.

நினைத்ததைச் செய்வதற்கான காலம் வரும்வரை காத்திருக்கும் பொறுமையும், மனிதர்களை மிகச்சரியாக எடைபோட்டு அவரவர் இயல்புக்கேற்ப அவர்களைக் கையாளும் நிதானமும் திறமையும் பொறுப்புணர்வும் கொண்ட மூத்தவள் போன்றவள் வன்னிமை.

அவள் அழகானவள்.

இவள் அமைதியானவள்.

பார்ப்பவரை ஈர்ப்பவளாக இளையவளே இருந்தாலும், எல்லோருடைய மதிப்புக்கும் உரியவளாக எப்போதும் மூத்தவளே இருப்பதுண்டு.

எங்களுக்கும் இடையிடையில் சின்னவளோடு முறுகல் வரும். புறப்பட்டு மூத்தவளிடம் வந்து விடுவோம். அட! நாங்கள்தான் என்று இல்லை. சங்கிலியன் காலத்திலேயே அப்படித்தானாம். அவரும் ஒருமுறை தன் படையை அழைத்துக்கொண்டு மூத்தவளின் வீட்டுக்கு வந்துவிட்டார்.

சின்னவளுக்கு மனிதர்களை எடை போடும் நுட்பம் தெரியாது. சிரித்தபடி யார் வந்தாலும், நல்லவர்கள்தான் அவளுக்கு. வீட்டிலுள்ளவர்களிடம்தான் அவளுக்குவாய். வெளியாட்களிடம் தேன்தான். வருபவர்களுக்கும் அவளை விட்டுப்போக மனம் வராது. அவளின் முகமறியாதவர்களும் அவள் பற்றித் தாமறிந்த கதைகளால் ஈர்க்கப்படுவர். கப்பலைக் கட்டிக் கொண்டாவது புறப்பட்டுவிடுவர்.

போர்த்துகேய காலத்திலிருந்தே இதே சிக்கல்தான். அதற்கு முந்தைய கதைகள் எனக்குத் தெரியவில்லை. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், ஆரியர்கள் என்று எல்லோருமே வந்த சில நாட்களிலேயே தம் சொந்த முகங்களைக் காட்டி அவளைப் புண்ணாக்க, கோபத்தில் கொதித்தெழும்பிச் சிலிர்க்கும் தன் மக்களை மூத்தவளிடம் அனுப்பிவிடுவாள்.

அவளுக்குத் தெரியும் அவர்களுக்கு அதுவே பொருத்தமான இடம் என்று. அவளுக்குத் தெரியும் அவர்களே தனது மீட்பர்கள் என்று. அவளுக்குத் தெரியும் தன்னுடனான அவர்களின் ஊடல் நிலையானதல்ல என்று. அவளுக்குத் தெரியும் தன்னிடம் வராமல் அவர்களால் இருக்க முடியாது என்று.

சின்னவளின் பிள்ளைகளிடம் மூத்தவளுக்கு பற்று அதிகம். தன்னிடம் இருப்பவற்றையெல்லாம் வாரிக் கொடுப்பாள். தனக்குத் தெரிந்தவற்றையெல்லாம் சொல்லிக் கொடுப்பாள். வாரிக்கொடுத்தாள். சொல்லிக் கொடுத்தாள்.

விளையாட்டுப் பிள்ளைகளாய் வருபவர்களையும் வீரத்தின் பிள்ளைகளாய் மாற்றும் வலிமை பெரியவளிடம் உண்டு. வீரர்களாக வருபவர்களையும் உரசி உரசி மேலும் கூர்மையானவர்களாய் ஆக்கும் வலிமை பெரியவளிடம் உண்டு. மாற்றினாள். ஆக்கினாள்.

நாம் உரம் பெற்றோம்.1987 இல் வந்தபோது நாம் உரம் பெற்றோம் 1996 இல் வந்தபோது ஒரு தடவை போல இன்னொரு தடவை இருப்பதில்லை.

*****

கடைசியாகச் சின்னவளை நாம் 1996 இல் விட்டு வந்தோம். அடங்காச் சினத்தோடு வந்த எமக்கு கிளிநொச்சியிலும் முல்லைத்தீவிலும் நகர்ப்புறப் போர் முறையைப் பழக்கினாள் பெரியவள். தன்னிடமிருந்த இரகசியங்களை எல்லாம் எமக்குச் சொன்னாள். மணலாற்றிலிருந்து பனங்காமத் தொங்கல்வரை காட்டுச் சண்டை பழக்கினாள். காட்டின் மர்மங்களை காட்டித்தந்தாள்.

நுளம்புகளை எதிர்க்கும் வலிமையை, மலேரியாவை வெல்லும் மனோபலத்தை, பசியை, பனியை, பகலவனை வெல்லும் பெரும் பலத்தைத் தந்தாள். எதுவுமே இல்லாமல் வாழும் வாழ்வை, கிடைப்பவற்றை மிகச் சரியாகப் பயன்படுத்தும் வாழ்வை எங்களுக்குப் பழக்கினாள். புறப்படும் போதெல்லாம் பூரிப்போடு வழியனுப்பினாள்.

பொன்னேரியில் விரையும் படகுகளில் அமர்ந்தபடி அவளுக்குக் கையசைத்தோம். பகைவனின் பிடியில் சிக்கி வேலிகளுள்ளும் மதில்களின் பின்னாலும் பதுங்கிக் கிடந்த இளையவளுக்கு சிறகுகளைச் சுமந்து சென்றோம். வழியனுப்பினாள்.

*****

கைதடிப் பகுதிச் சண்டையெல்லாம் கடுமையானதுதான். வெளியான பகுதியில் பகைவர்களின் கடுமையான எதிர்ப்பின் நடுவே முன்னோக்கி ஓடினோம். விழ விழ ஓடினோம். எவரும் நிற்கவில்லை. வீழ்ந்தவர்கள் எல்லோருமே ஒரே விடயத்தைத்தான் சொன்னார்கள்.

"என்னை ஒருதரும் பாக்க வேண்டாம். விடாதை பிடி"

காயங்களோடும் பாரங்களோடும் முன்னோக்கி ஓடிக் கொண்டிருந்தவர்களின் காதுகள் ஒரே ஒரு கட்டளையையே உள்வாங்கிக் கொண்டன.

"விடாதை பிடி"

வீழ்ந்தவர்களின் கட்டளை அது.

வீழும்போது தாம் வழங்க வேண்டிய கட்டளையும் அதுவே.

"விடாதை பிடி"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரு வருகை

லெப்ரினன்ட் அன்பினி, 2ம் லெப்ரினன்ட் தாயகி, 2ம் லெப்ரினன்ட் சிவமதி.

எல்லோரது கட்டளைகளும் கைதடி நாவற்குழி வெளியில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. கைதடிச் சந்தியில், நாவற்குழிப் பாலத்தின் தொடக்கத்தில் முடிவில் அமைக்கப்பட்டிருக்கும் பகைவர்களின் காப்பரண் சுவர்களோடு மோதி மோதி ஒலிக்கின்றன அவர்களின் குரல்கள்.

"விடாதை பிடி"

*****

காற்று ஊவென்றிரைந்தது. அவர்களுக்குப் பயமாயிருக்கவில்லை. பரிதாபமாக இருந்தது. எத்தனை உயிர்கள் இந்த வெளியில் போயின. இவர்கள் இருக்கின்றார்களா, இல்லையா என்று அறிய வழியின்றி எத்தனை உயிர்கள் நித்தமும் வேகுகின்றன.

எங்கே புதைத்திருப்பார்கள்? தலை வாசல் பிள்ளையாருக்குப் பின்னாலா? முன்னாலுள்ள வயல் வெளியிலா? அல்லது எம் காலடியிலேயா?

கால்கள் கூசின. மண்வெட்டியை ஓங்கி நிலத்தைக் கொத்தக் கைகள் கூசின.

அவலத்தோடு கொலையுண்டவர்களினது சாவின் பின்னரான அமைதியை நாம் கலைத்துவிடப் போகின்றோமா?

"உறவுகளே, எங்களை மன்னியுங்கள்"

ஓங்கிய மண்வெட்டியோடு ஒவ்வொரு முறையும் அள்ளுண்ட மண்ணில் எவரது எச்சங்களுமே இல்லை என்று உறுதி செய்தவாறே செம்மணி வெளியில் நிலையமைத்து முடிப்பதற்குள் மனதால் களைத்து விட்டோம். இன்னும் எத்தனை பேரை இப்படி இழக்கப் போகின்றாய் யாழ்ப்பாணமே?

அன்றைய சண்டை பெருஞ்சண்டை. விழுதெறிந்த ஆலமரக் கூடலுள் அமைக்கப்பட்டிருந்த தன் காப்பரணில் நின்றவாறு நிலைமையை நிதானமாகக் கணிப்பிட்டாள் மேஜர் சீத்தா. வலமும் இடமுமாக வயல்வெளிக்குள் அமைக்கப்படிருந்த ஏனைய காவல் நிலைகள், ஏற்கனவே மழைநீரில் ஊறிக்கிடந்த காவல் நிலைகள் பகைவரின் கடும் எறிகணை வீச்சால் பொத பொதத்து விழ, காயமடைந்தவர்கள் உடன் நின்றவர்களின் வித்துடல்களைச் சுமந்தவாறு விலகுவதைத் தவிர, வேறு வழியே இருக்கவில்லை.

எல்லோரையும் வெளியேறும்படி பணித்தாள் சீத்தா. எல்லோரையும் அனுப்பிவிட்டு, தன் காப்பரணில் தனித்து நின்றாள் சீத்தா. கூட நின்றவள் காயப்பட, அவளையும் போகுமாறு கண்டிப்பாகப் பணித்து விட்டு தனித்து நின்றாள் சீத்தா.

"தனியாக நிற்கவேண்டாம். உடனேயே பின்னுக்கு வா"

என்ற கட்டளைப் பீடத்திற்குப் பணிய மறுத்து, தனித்து நின்றாள் சீத்தா.

"நிறைய ஆமி வாறான். என்னை அவங்களுக்குத் தெரியேல்ல. எனக்கு அவங்களைத் தெரியுது. என்னட்டை 40மி.மீ ஷெல்லும் இருக்குது. ரைபிளும் இருக்குது. இப்ப இவங்களை விட்டா பிறகு அடிக்கிறது கஸ்ரம். நான் அடிபடப் போறன்"

புதையுண்டு போயிருந்த நானூறு பேருமாக சீத்தா பேரிட்டாள்.

கடைசி நிமிடத்தில் உயிர்த்துளிக்காக பகைவரிடம் இறைஞ்சிய அவலக் குரல்களையே இதுவரை சுமந்த காற்று,

"நான் வரமாட்டன். அடிபடப் போறன்"

என்ற சீத்தாவின் குரலைச் சுமந்து வீசத் தொடங்கிற்று. தலைவாயிற் பிள்ளையாரின் உடைந்த கோயிற் சுவருடன், அரைப்பனை உயரத்தில் நிமிர்ந்து நிற்கும் விளம்பரப் பலகையுடன் மோதி மோதி வீசும் காற்றில் அந்தக் கம்பீரமான குரல் எதிரொலிக்கின்றது.

"இப்ப இவங்களை விட்டா, பிறகு அடிக்கிறது கஸ்ரம்"

*****

அது எமது கடைசிச் சண்டை. பலத்தைப் பெருக்குவதற்காய் பெருநிலத்திடம் மறுபடி வந்தோம். எங்கள் பெரும் பலத்தை தீச்சுவாலை எதிர் நடவடிக்கையில் காட்டியதால், அதற்கு முன் வந்த வெற்றி நிச்சயம் படையினரைத் தடுத்து வல்லமை காட்டியதால், கூண்டோடு கலைத்துக் கொடியேற்றியதால் திறந்த நெடும் பாதை வழியே உன்னிடம் வந்தோம் யாழ்ப்பாணமே.

திறந்த நெடும் பாதை வழியே உன்னிடம் வந்தோம் தலை நகரமே.

திறந்த நெடும் பாதை வழியே உன்னிடம் வந்தோம் வாவி நகரே.

*****

0பாணனுக்குப் பரிசாகப் போன சிறு நிலமே.

தாயக நீள் நிலத்தின் சிறு துளியே, வருவோம்.

மறுபடி வருவோம்.

அடையாள அட்டைகளைக் காட்டியதாய் அல்லாமல், இனத்தின் அடையாளத்தை, வீரத்தின் அடையாளத்தை, தாயகத்தின் தனித்துவ அடையாளங்களைச் சுமந்ததாய் நிகழும் அந்த வருகை.

எமது கடல் எமது வயல்
எமது வெளி எமது குளம்
எமது நிலம் எமது வனம்
எமது நதி எமது சனம்
எமதெனவே எமதெனவே
எமதெனவே எமதெனவே
(நன்றி நிலாந்தன்)

என்ற பாடலை இசைத்தபடி, கொடியைச் சுமந்தபடி, தாயகத்தின் தனித்துவ அடையாளங்களைச் சுமந்தபடி

மறுபடி வருவோம் தலைநகரமே
மறுபடி வருவோம் வாவிநகரே
மறுபடி வருவோம் யாழ்நிலமே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நீ

எங்கெங்கும் எதிலும்
ஒரு வியாபகமாய்
தெரிகிறாய்– உனக்கே நீ.....

உனது சுகம்
உனது தெரிவு
உனது விருப்பு
உனது வெறுப்பு
என...
உனபிறலைகள்
மட்டுமே தெரியுமுன்
கண்ணுக்கு!
அடுத்தவர்.....?
உனக்கும் பூச்சிகள்....
ஊதி விலக்கிடை
முடியாதெனில்
உலக்கை போல் கொண்டேனும்
வழி விலக்கி
மீண்டும் கொள்வாய்
உனதான உன்
தரிசனம்!
போதனைகோடி முத்தம்
உனது சிவப்புமைப்பேனா
வாகாய்...
உன் சுகங்காக்க
வழிசமைத்து.....!
உனது விழிகளின்
அலட்சிய வெய்யில்
வார்த்தைகளின்
நிர்த்தாட்சண்யம்
செய்கைகளின்
கொடூரம்
இவை புரியும் அழிப்புகள்
உனதறிவில் உறைக்கா....
உன் மணமேடையில்
முடிசூடி...
சிம்மாசன மேறி
மறந்தாலும் புன்னகையோடு
வீற்றிருக்கும்
உன்னையே
பசித்தபடி "நீ"



சத்தியபாலன்

# லயம்

விளக்கொன்று
கைக்கொண்டு
புறப்படும் பயணம்..

இருளோடிக்
கிடக்கும். பெருவெளியிடையில்
தொடர்கிற தேடல்....
எதைக்காணவேண்டி.....?
நாமறியோம்!
ஆனாலும்
தேடும் தாகம்
தணிவதேயில்லை
இதுவோ
இதுவோ எனக்கேட்குமறிவு
இதுவன்று இதுவன்று
எனச் சொல்லும்
அனுபவம்
பெருவிருட்சமொன்றின்
ஆணி வேர் காணப்
புறப்படுவனுக்கு
பக்கவேர்க் கீற்றுக்களோடே
பாடம் முடிகிறது.
ஆதிகால முதல்
உன்னையும் என்னையும்
வைத்துக்கொண்டு
சிதம்பர ரகசியம்
காட்டுகிற பயணத்தைச்
சாட்டாக வைத்து
உலகு செய்கிறது
இயற்கை.....
தேடல்
தொடர்கிறது
தனது லயம்
பிறழாமல்!




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அம்புலி

# காப்பரண் வேலியிலிருந்தோர் மடல்

காப்பரண் மரங்கள்
கதைபேசின.
வான்நிலவும் உடுக்களும்
வந்தன சேர்ந்துண்ண
கார்முகிற் துளிகளில்
முகம்பார்த்துத் தலைசீவி
பனிக்கால இரவுகளை
பயிற்சிக்காய் பகலாக்கி இளமைக்
கனவுகளின் முளைகிள்ளி
காவலுக்காய் உயிர்தேக்கி
உடல் தின்ற குண்டுக்கு
உதிரத்தால் பசியாற்றி
விழுப்புண்கள் ஆறமுன்னம்
விரைகின்றேன் எல்லைக்கு
மீண்டும் பதுங்கு குழி.. துப்பாக்கி..
எத்தனை உயிர்களின்
துயிலலுக்கான துயில்மறப்பு.
இன்றோ நாளையோ
என்றிருக்கும் வாழ்வுக்காய்
என்னுறவுகள்
அழுதலில் எனக்காறுதலில்லை
உண்ணும் சோற்றில் ஒருபிடி
உடுக்கும் துணியில் ஒரு முழம்
இல்லாதோர்க்கீயும் மனத்திறன்
எல்லாம் உறவென
நினைக்கும் ஈரம்.
பேதமகற்றிய வாழ்வின் வீரம்
காதலின் மேலெனக் கருதுவேன் யான்
நெஞ்சினிற் சுமக்குமென்
தாகத்தை ஆற்ற
நினைவுகளால் நீர்விடுங்கள் உறவுகளே.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





தூயவன்

# அனுபவத்தின் உயிர்

**/ஒன்றும் செய்யாமல் விடுவதிலும் ஏதாவது செய்வது நல்லது என்பதால் சிகிச்சையை ஆரம்பிக்க வேகமாகச் செயற்பட்டனர். தேவையான மாற்றுக் குருதி தயார் செய்து உபகரணங்களை ஒழுங்கு செய்து, மின் ஒளியைத்தயார் செய்து காயக்காரனை மேசையில் கிடத்தி சிகிச்சையை ஆரம்பிக்கையில் எல்லாமே பிந்திவிட்டது என்பது புரிந்தது. விழுப்புண்ணடைந்தவன் தனது இறுதி மூச்சுக்காக அவஸ்தைப்படத் தொடங்கிவிட்டான். மெல்ல மெல்ல ஆவி பிரிய அவன் துடிப்புக்கள் அடங்கிப் போகின்றன. வீரச்சாவு என்பது உறுதி செய்யப்படுகின்றது/**

நீரைக் கிழித்து விரைகிறது நீருந்து விசைப்படகு. கடூர இருளும் கருங்கடலும் கைகோர்த்துள்ளன. விசைப் படகில் மோதும் பேரலைகள் உள்ளிருப்பவர்களைத் தூக்கியடிக்கின்றது. அப்படகில் '50 கலிபர்' துப்பாக்கியொன்று பொருத்தப்பட்டுள்ளது. அதனைத் தயார் நிலையில் வைத்தபடி வலத்திசையை உற்று நோக்குகின்றாள் ஒரு பெண் கடற்புலி. அவளின் கால்களுக்கு அருகில் வலது கால் முழுவதும் P.O.P கட்டுடன் கிடத்தப்பட்டுள்ள போராளியொருவன். அங்கு காணப்படும் போராளி மருத்துவனும் ஏனைய சகலரும் வலத்திசையாலே வைத்த கண் வாங்காமல் பார்க்கிறார்கள். சுமார் ஒரு மைல் தூரமளவில் நடைபெறும் கடற்சமர் இடையிடையே கடலில் தீப்பிளம்புகளைத் தோற்றுவிக்கின்றது. இருளைக் கிடையாகக் கிழிக்கும் ரவை மழையும், வானைப் பிரகாசமாக்கி நட்சத்திரங்களைக் கரைய வைக்கும் பராவெளிச்சங்களும், படகில் இரைந்தபடியே கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருக்கும் தொலைத் தொடர்புக்கருவியும், வலியில் முனகும் காயக்காரனும், கடல் நீரில் நனைந்து கடற்காற்றினால் சில்லிடும் உடல்களுமென கடற்சமர் சூடுபிடித்துள்ளது. இக் காயக்காரனை வன்னிப்பெருநிலம் கொண்டு செல்லவும், படைக்கல பரிமாற்றங்கள் செய்யவுமென, பாதுகாப்புக் கொடுத்து நிற்கும் கடற்புலி கலங்களிற்கும் கடற்படைக் கலங்களிற்கும் இடையேயான கடற்சமர் ஆரம்பித்துவிட்டது.

இதோ! இவர்களின் கடல் வியூகத்தை உடைத்து, பகைக் கலமொன்று நெருப்புத் துண்டங்களை வேகமாக உமிழ்ந்து வரும் இராட்சத முதலையென, அலைகளில் பாய்ந்து பாய்ந்து பக்கவாட்டமாக இவர்களை நோக்கி வருகின்றது. தனது ஆளுகையில் இருக்கும் இயந்திரத் துப்பாக்கியை அவள் அதனை நோக்கித் திருப்புகின்றாள். இவர்களின் சூட்டு வலுவோ பலமடங்கு குறைவானது. எனினும், சில கணங்களில் நேரடி வலுச்சண்டையொன்று மூழப்போகின்றது. முண்ணாணைச் சில்லிட வைக்கும் அச்சில கண இடைவெளியில், இவ்விரு கலங்களிடையே சீறிப்பாய்ந்து வந்த கடற்புலிச சமர்க் கலமொன்று பகைக் கலத்தைப் போரிற்கு இழுக்கின்றது. அது தன் திசை மாற்றிச் செல்கின்றது. ஒரு காயக்காரனைக் காப்பாற்றவென சிலர் வீரச்சாவடையும், பலர் காயமடையும் கடற்சமர் தொடர்கின்றது. அச் சூழலிலும் அம்மருத்துவனின் மனவோட்டம் சில நாட்கள் பின் நோக்கி கடக்கின்றது.

1999 யூலை 31, அதிகாலை அந்தத் திருமலை காட்டு முகாமில் பரபரப்புக் குறைந்து காணப்படுகின்றது. பெரும்பாலானவர்கள் பதுங்கித் தாக்குதல் ஒன்றைச் செய்வதற்காக இரவோடிரவாக நகர்ந்து விட்டிருந்தனர். திட்டமிட்டபடி சூரியக்கதிர்கள் தெறிக்கும் நேரம் வீதிச் சோதனைக்கு வரும் பகைவர் மீது உயிர் பறிக்கும் தாக்குதல் தொடங்கப்படும். இவர்கள் தரப்பில் எவ்வித இழப்புக்களும் ஏற்படாத வண்ணமே திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஏனெனில் அம்முகாமின் மூன்று திசைகளிலும், சில மைல் தொலைவில் தொடர் இராணுவ முகாம்கள் உள்ளன. நான்காம் திசையை கடல்வரையறுத்துள்ளது.

இச்சூழ்நிலையில் காயமடைபவர்களைக் காப்பாற்றி பராமரித்து வன்னிக்கு அனுப்புவதென்பது கற்பனை கடந்த கடிதங்களை உள்ளடக்கியதாகும். வேகமான நகர்த்திறனைக் கொண்டிருப்பதுடன், தற்காலிகமாக தங்க இடங்களை அமைத்து தங்குவதே இவர்கள் வழமையாகும். எதிரிக்குத் தொல்லை கொடுக்கும் தாக்குதல்களை அடிக்கடி மேற்கொள்ள வேண்டும். இதனால் பகைவனுடைய படைபலம் இம்மாவட்டத்தில் முடக்கப்படும். வன்னியை ஊடறுக்க முனையும் 'ஜெயசிக்குறுப்' படையினருக்கு வலுவூட்டும் படைகள் இங்கிருந்து செல்வது தவிர்க்கப்படும். மேலும் இத்தாக்குதல் நடக்கும் இடத்தில்தான் இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஒரு போராளியை எதிரி கொன்று அவன் தலையை வெட்டிச் சென்றிருந்தான். அதற்கான பதிலடியாகவும் இது அமைய வேண்டும். திடீரென இவர்களின் தொலைத் தொடர்புக் கருவிகள் உயிர் பெறுகின்றன. சண்டையின் விபரத்தைக் களமுனைத் தளபதி அறிவிக்கின்றார். இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட மற்றவர்கள் தப்பியோடிவிட்டார்கள் என இவர்கள் கைப்பற்றிய ஆயுதங்களுடன் எவ்வித இழப்புக்களுமின்றி பின்வாங்குகின்றனர். களமருத்துவன் ஆசுவாசப் பெருமூச்சு விடுகின்றான். எதிரியின் இராணுவ மூளை இவர்கள் பின்வாங்கும் திசையைச் சரியாகக் கணித்திருக்க வேண்டும். பல முனைகளில் இருந்தும் ஒருங்கிணைந்த எறிகணை வீச்சை செறிவாக மேற்கொள்கின்றான். முகாம் மீண்ட போராளிகள் கையசைப்பினூடாகவும், புன்சிரிப்பினூடாகவும் வெற்றியைப் பகிர்ந்தபடியே பதுங்கு குழிகளினுள் புகுந்து கொள்கிறார்கள். அப்பொழுது வந்து விழுந்து வெடித்த எறிகணையொன்று இருவரைக் காயப்படுத்தி விட்டது.

கணமும் தாமதிக்காது அவர்களை காப்பரண்களினுள் இழுத்துச் சென்றவர்கள் இரத்தப் பெருக்கைக் கட்டுப்படுத்துகின்றனர். மேலதிக சிகிச்சையினை இப்பொழுது செய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யமுடியாது. எறிகணை வீச்சு சற்றேனும் ஓய வேண்டும். கால்மணி நேரத்தின் பின்னர் காயங்களைக் களமருத்துவன் கவனமாகப் பரிசோதிக்கிறான். உடனடியாக இருவருக்கும் பெரிய சத்திர சிகிச்சைகள் செய்ய வேண்டும். ஒருவனுக்கு வலதுகால் முழங்காலிற்கு கீழாகச் சிதைந்து விட்டது. மற்றவனுக்கு முதுகினைத் துளையிட்டுச் சென்றுள்ள எறிகணைச் சிதறல் வயிற்றறை உள்ளுறுப்புகளைத் தாக்கிவிட்டது.

தளபதிக்கு மருத்துவர் நிலைமையை விளக்குகின்றனர். அவர் அணிகளை மீள ஒழுங்கமைக்கின்றார். இரண்டாமவனின் வயிற்றறையினைத் திறந்துதான் மேலதிக சிகிச்சையினை மேற்கொள் வேண்டும். அதற்குத் தேவையான மருந்து இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்தில், ஆதரவாளர் வீடொன்றின் குளிர்சாதனப் பெட்டியினுள் வைக்கப்பட்டுள்ளது. அதனை எடுத்த வருவதற்காக அணிகளை அனுப்ப வேண்டும். ஒரு பகல் நடந்து, இரவு இராணுவக் காவல் அரண்கள் கடந்து, ஊர்மனையினுள் புகுந்து, குறித்த மருந்தினை எடுத்து, மறுநாள் பகல் மீள வேண்டும். ஏதோவொரு வழியில் நிச்சயம் இராணுவத்தினரின் பதுங்கித் தாக்குதல்களை எதிர்பார்க்கலாம். அவ்வாறு நடைபெறின் சிலர் இறக்கவோ, காயமடையவோ வேண்டி வரலாம். அவ்வாறு நடந்தால்........ நினைக்கவே பயமாக இருக்கிறது. காயமடைதல் மருத்துவத் தேவைக்காகச் செல்லுதல், மீண்டும் காயமடைதல், மருத்துத்தேவைக்காகச் செல்லுதல், மீண்டும் காயமடைதல், மீண்டும்........... எனவொரு நச்சுவட்டமே தொடர் கதையாகி விடும். எனினும் ஆள் எண்ணிக்கை மீதான இலாப நட்டக் கணக்கைவிட போராளிகளின் உளவியல் பலம் பேணப்பட வேண்டும். ஆதலால் துணைத்தளபதி தலைமையில் அணிகள் புறப்பட்டுவிட்டன.

இங்கு போராளி மருத்துவன் உதவியாளர்களுடன் தனது மணியை வேகப்படுத்துகின்றான். காட்டு மரம் ஒன்றின் கீழ் காட்டு மரங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட மாதிரிக் கட்டில் ஒன்றில் கால்க் காயக் காரனுக்கு சிகிச்சையை ஆரம்பிக்கின்றான். எவ்வித அடிப்படை உயிர்காப்பு வசதியும் இல்லாமல் மயக்க மருந்து கொடுத்து சத்திர சிகிச்சை செய்யப்படுகின்றது. சாதாரண சூழலில் இவ்வாறு செய்வது மருத்துவ விதிகளுக்கு முற்றிலும் முரணானது. ஆனால் அதுவே இங்கே விதியானது. சிகிச்சை நடைபெற்றுக்க கொண்டிருக்கும் போதே தேவையான மருந்துகள் பல்வேறு பகுதிகளில் உருமறைந்திருந்த மரப் பரண்களில் இருந்து எடுத்துவரப் படுகின்றன. போராளியொருவனில் இருந்து பெறப்பட்ட இரத்தமானது நேரடிப் பரிசோதனை மூலம் ணருங் கொட்டாமை உறுதி செய்யப்பட்டு இவனுக்த ஏற்றப்படுகின்றது. புதிய சூழல் என்பதால் நுண்ணுயிர் கொல்லி மருந்துகளுக்கு தாக்குப்பிடிக்க வல்லமை பெற்ற கிருமிகளின் தொற்று தவிர்க்கப்படும். இது சாதகமான ஒன்று. வெட்டித் திறக்கப்பட்ட கால்க் காயத்திலிருந்து இரத்தப் பெருக்கை ஏற்படுத்தும் நாடி நாளங்கள் பிடித்துக்கட்டப்படுகின்றன. சிதைந்த தசை நார்கள் வெட்டி அகற்றப்படுகின்றது. என்பு சீராக்கப்பட்டு P.O.P போடப்பட்டு சிகிச்சை வெற்றிகரமாக நிறைவு செய்யப்படுகின்றது.

மறுபகுதியில் ஒரு தற்காலிகமாக சத்திர சிகிச்சைக்கூடம் 'பிளாஸ்டிக் ரெண்டினால்' அமைக்கப்படுகின்றது. அவ்வேலை முடிவடைய சில மணித்தியாலங்கள் தேவைப்படும். சிறு மின் பிறப்பாக்கி மூலம் மின்சாரம் வழங்கப்படுகின்றது. தளபதி உட்பட அனைவரும் பம்பரமாகச் செயற்படுகின்றனர். இதனுள் தான் வயிற்றறையைத் திறக்கும் சிகிச்சையைச் செய்யலாம்.

வயிற்றறைக் கா பத்திற்குட்பட்டவனின் நிலையோ மோசமடைந்து கொண்டு செல்கின்றது. நிமிடங்கள் ஒவ்வொன்றும் நாட்களாகக் கழிகின்றது. "டொக்டர் நான் தப்புவனா" ஏன் எனக்கு இன்னும் ஒப்பிரேசன் செய்வில்லை?? போன்ற அவனின் கேள்விகள் இவனைக் குடைந்து எடுக்கின்றது. மருத்துவனோ அவன் தலையைத் தடவிய வண்ணம் "இன்னும் கொஞ்ச நேரத்தில தொடங்கிடுவம். மருந்துக்குப் போனவையள் வந்து கொண்டிருக்கினம்" எனத் தன்னாலான பொய்களைச் சொல்கின்றான். அவனுக்கு வாயினால் எதுவும் அருந்தக் கொடுக்கவில்லை. திரவ ஊடகத்தின் மூலம் உடலின் அனுசேபத் தேவையானது பூர்த்தி செய்யப்படுகின்றது. நாடித்துடிப்பு வீதம், குருதியமுக்கம், உடல் வெப்பநிலை என்பன அளக்கப்பட்டு அட்டவணைப் படுத்தப்படுகின்றது. மருத்துவரோ காயக்காரனுக்கும் அருகிலேயே அமர்ந்திருக்கிறார். சென்றவர்கள் ஊரினுள் நுழையும் நேரம் நெருங்கிவிட்டது. நேரம் மென்னிருள் கடந்து ஆழமான பகுதிக்குள் செல்கின்றது. திடீரென சத்தங்களுடன் தொலைத் தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டது. ஒருவரினது முகத்திலும் ஈயாடவில்லை. அவர்களுக்கு அடி விழுந்துவிட்டது. இவர்கள் கலைந்து சென்றிருப்பார்கள்.

சிலர் எதிர்பாராத நிகழ்வுகளே வழமையாகி விட்ட வாழ்க்கைக்குப் பழகியவர்கள். ஆழ்ந்த யோசனையுடன் காத்திருக்கின்றனர். நள்ளிரவு தாண்டிவிட்டது மீண்டும் தொடர்பு சாதனத்தில் தொடர்பெடுத்த உப தளபதி நிலமையை அறிவிக்கின்றார். தங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தாங்கள் காயமோ உயிரிழப்போ இன்றித் தப்பிவிட்டதாகவும், எதிரி உசார் அடைந்துவிட்டதால் தாங்கள் மீண்டும் மீண்டும் முயற்சித்தும் முடியவில்லை எனவும், மறுநாள் இரவு மீண்டும் முயற்சிப்பதாகவும் கூறுகின்றார். தளபதி மருத்துவரிடம் என்ன சொல்வது எனக் கேட்கிறார்.

நிலைமை கையை மீறிவிட்டது. ஏற்கனவே தாமதமாகிவிட்டது. இன்னுமொரு நாள் அவனால் தாக்குப் பிடிக்க முடி பாது. இதனை அவனுக்கு தெரிவிக்கவும் இயலாது சாதாரண மயக்கமருந்தைக் கொடுத்து சிகிச்சையை ஆரம்பிக்க வேண்டியதுதான். அவ்வாறுவயிற்றறையை வெட்டித் திறந்தால் காற்றடித்த பலூனாக குடல்கள் வெளித்தள்ளிக் கொண்டு வரும். அவற்றை மீண்டும் உள்ளே செலுத்தி சிகிச்சையை முடிப்பது என்பது மிகவும் கடினமானது. எனினும் அதனைத் தான் செய்ய முடியும். அவ்வாறு செய்வதை சத்திர சிகிச்சைக்குரிய ம நத்தியல் புத்தகங்கள் அனுமதிக்கின்றனவா எனத் தேடித் தேடிப் பார்க்கின்றான். புத்தகங்களைப் பார்த்தும் காயத்துக்குள்ளானவனின் உடல் நிலையைப் பரிசோதிப்பது தளபதியிடம் நிலைமையைக் கேட்பது என மாறி மாறி செயற்பட்டுக் கொண்டி நந்தவன். அவரின் கேள்விக்கு நாங்கள் இருக்கிறதைக் கொண்டு தொடங்குவோம். அவர்களை வரச்சொல்லுங்கள் என்கிறான்.

ஒன்றும் செய்யாமல் விடுவதிலும் ஏதாவது செய்வது நல்லது என்பதால் சிகிச்சையை ஆரம்பிக்க வேகமாகச் செயற்பட்டனர். தேவையான மாற்றுக் குருதி தயார் செய்து உபகரணங்களை ஒழுங்கு செய்து, மின் ஒளியைத்தயார் செய்து காயக்காரனை மேசையில் கிடத்தி சிகிச்சையை ஆரம்பிக்கையில் எல்லாமே பிந்திவிட்டது என்பது புரிந்தது. விழுப்புண்ணடைந்தவன் தனது இறுதி மூச்சுக்காக அவஸ்தைப்படத் தொடங்கிவிட்டான். மெல்ல மெல்ல ஆவி பிரிய அவன் துடிப்புக்கள் அடங்கிப் போகின்றன. வீரச்சாவு என்பது உறுதி செய்யப்படுகின்றது.

களமருத்துவ வாழ்வில் அவன் சந்தித்த தோல்வியின் பட்டியல் நீள்வதாக உணர்கின்றான். தன்னுணர்வுகளை முகத்தில் வெளிக்காட்டாமல் தளபதிக்கு விடயத்தைச் சொல்கின்றான். மறுநாள் வீரமரண நிகழ்வு நடந்தது. இவர்கள் இருக்கும் பகுதியிலேயே அவ் வித்துடல் விதைக்கப்படுகின்றது. தப்பியிருப்பவனைத் தொடர்ந்து அங்கு வைத்துப் பராமரிக்க முடியாது. வன்னிக்கு அனுப்ப வேண்டும். அதற்கு இரண்டு நாள் நடந்து கடற்கரை செல்ல வேண்டும். இன்றிரவு நித்திரை செய்தால்தான் நாளை காலை நடக்கத் தொடங்கலாம். இவனை ஏதோவொரு குற்றவுணர்வு கொல்கின்றது.

"இப்படியான இடங்களில் பயன்படுத்தக் கூடியவாறு, தளிர்சாதனப் பெட்டி தேவைப்படாத வகையில் மருந்து தயாரித்து இருக்க மாட்டார்களா?" மீண்டும் இரவு புத்தகங்களைப் புரட்டுகின்றான். அவன் தேடியதைக் கண்டுகொள்கின்றான். குறித்த மருந்து இருந்திருந்தால் இம்மரணத்தைத் தவிர்த்திருக்கலாம். மேற்படி மருந்தைக் குறிப்பெடுத்தவன் துறைசார் பொறுப்பாளரிடம் அறிவித்து வெளியிலிருந்து இதனை எடுப்பிக்க வேண்டும், என எண்ணுகின்றான். அப்பொழுது "டொக்டர்" எனக் கூப்பிட்டபடியே வரும் தளபதி சொல்கிறார். "களைத்துப் போயிருப்பீர்கள், இரண்டு நாள் தொடர்ந்து நடக்க வேணும். நித்திரை செய்யலாம் தானே!" என. இவனிடமிருந்த வெறுமை கலந்த சிரிப்பொன்று வெளிவர முயற்சிக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறகுக

அவளுக்கு அழுகைதான் வந்தது. அதற்கான காரணம் சொன்னால் அனைவரும் சிரிப்பார்கள்.

ஆம், அவள் நீண்ட காலத்தின் பின் விடுமுறையில் வந்திருக்கிறாள். சண்டைக் காலங்களில் அவள் எங்கே நின்றாள் என்ற தெரியாது. தமது மகள் இறந்திருக்கலாம் இவர்கள் அதனை மறைத்திருக்கின்றார்கள் என்று குடும்பத்தவர்கள் ஒரு முறை தீர்மானமெடுத்து அவளுக்குரிய தொடர்பக முகாமிற்குள் சென்று ஒரு ஆர்ப்பாட்டமே நடத்தியிருந்தார்கள். அதனை அவளது தோழிகள் அவளுக்குச் சொல்லிச் சிரித்திருக்கின்றார்கள். இப்பொழுது யுத்த நிறுத்தம் என்பதால் சற்று ஓய்வாக இருப்பதனால் அனைவரையும் போல அவளும் விடுமுறையில் வந்திருக்கிறாள். அவ்வாறு விடுமுறையில் வந்திருக்கும் தங்களது பிள்ளையின் மீதான பாசத்தை அவளது குடும்பத்தினரும் உறவினர்களும் உணவின் மூலம் காட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களது பாசம் முழுவதையும் ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு அவளது உணவுப்பையில் இடம் இருக்கவில்லை. வேண்டாம் என்று சொன்னாலும் அவர்கள் விடுவதாயில்லை. அதுதான் அவளது அழுகைக்கான காரணம்.

இந்த நேரம்தான் நல்ல உவட்டுக்குள் கட்டி நிற்கும் படகில் ஆசை வந்தது. இப்போது எப்படியாவது சிரமப்பட்டு அதிலே ஏறினால்ப் போதும். இந்த வயிற்றுக்கோளாறு இலகுவாய்த் தீர்ந்து போகும்.

இயலாக் கட்டத்தில் அவள் தங்களுக்கேயுரிய பாசையில் அம்மாவைப் பார்த்து முறைத்தபடி கேட்டாள்.

"எனக்கென்ன இரப்பையா, உரப்பையா?"

அம்மா ஒருகணம் நிலைகுலைந்தாள்.

"உனக்கெண்டு செய்யிறது பிள்ளை"

அம்மாவின் கையில் இருந்த உணவைப் பார்த்துவிட்டு தூரத்தே வெறித்த அவளது கண்களில் ஆபிரிக்கநாடுகளில் எலும்பும் தோலுமாய் ஏக்கப்பார்வையுடன் உணவுக்காய்த் தவமிருக்கும் சிறுவர்களல்ல, எங்களது தேசத்திலேயே பசியுடன் பாடசாலைக்கு வந்து மயங்கி விழும் குழந்தைகள் வந்து நின்றார்கள்.

"எப்பொழுது இந்த உணவு நிலை சமம்படும்"

என்று சலிப்புடன் நினைத்துக் கொண்டவள்.

"தமிழீழத்தில்தானே எதுவுமே சீராயமைய முடியும்"

என்று தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொண்டாள்.

எப்போதாவது உணவு சமிபாடு அடையாத பிரச்சினை வந்தால் மிதமிஞ்சிய சூட்டில் தேநீர் குடிப்பாள் அல்லது மருத்துவப் போராளிக்குத் தெரியாமல் இரண்டு 'டையின்' எடுத்துச் சாப்பிடுவாள். இப்போது இரண்டு அல்ல, பாதி 'டையின்' கூடச் சாப்பிடுவதற்கு இடமில்லை.

உணவுத் தட்டை உள்ளே வைத்து விட்டு அம்மா அவளருகில் வந்து அமர்ந்தாள். வேறெவரும் வீட்டில் இல்லை. ஆறுதலாக ஏதும் கதைக்க அம்மா நினைத்திருக்கக்கூடும். அவள் அம்மாவின் மடியில் சாய்ந்தாள். தாயின் மடிதான் உடல் நோக்கும், உள நோக்கும் உலகிலேயே தலைசிறந்த மருந்து என்று அப்போது தோன்றியது. அம்மா மெதுவாக அவளைத் தடவிக் கொடுத்தாள். அப்போதுதான் அவளது கண்களில் அது பட்டிருக்கவேண்டும்.

"இது என்ன பிள்ளை காயம்?"

அது தீப்பற்றி எரிந்து தோழியைக் காப்பாற்றப் போய் ஏற்பட்ட காயம் என்று சொன்னால் விடுமுறை முடிந்து போக விடமாட்டார்கள். ஆகவே அவள் அம்மாவைச் சிரித்துச் சமாளித்தாள்.

அம்மா தீவிரமாயும் அப்பாவித்தனமாயும் கேட்டாள்.

"நீ ஏன் பிள்ளை இயக்கத்துக்கு போனனி?"

அவள் நிதானமாய்ச் சொன்னாள்.

"நீங்கள் விட்ட பிழையாலதானம்மா"

அம்மா புரியாமல் நெற்றி சுருக்கினாள்.

"நீங்களோ அப்பாவோ கூட எங்களை அடிச்சு வளக்கேல்லே. அப்பிடி வளர்ந்த என்னை ஆரோ ஊரும் பேரும் தெரியாத ஒருத்தன் வந்து அதிகாரம் செய்யிறதை நான் விரும்பேலை. என்னை நானே தீர்மானித்துக் கொள்ளும் வாழ்க்கையைத்தான் விரும்பினன். அதாலதான் போனனான்"

அம்மா பெருமூச்சு விட்டாள்.

"இனியென்ன சண்டை முடிஞ்சுதானே பிள்ளை விட்டிட்டு வாவன்?"

"வந்து என்ன செய்யிறது?"

"அண்ணாவுக்கு அடுத்த வருசம் 'சிற்றிசன்' கிடைக்குமாம். அவன் உன்னை எடுக்கிறானாம். இல்லாட்டா சித்தப்பா எடுப்பார்தானே பிள்ளை. மாமாவும் தான் எடுப்பன் எண்டு கதைச்சவர்"

அவளது சிந்தனை வேறு திசையில் ஓடிற்று. சித்தாவிற்கு ஐந்து பிள்ளைகள். அவர் மூன்று பிள்ளைகளை போராட அனுப்பலாம். மாமாவிற்கு நான்கு பிள்ளைகள் அவரும் இருவரைத் தரலாம். இனி எதற்கு? தனியே சுதந்திரம் கிடைத்தால் போதுமா? நாட்டை யார் அபிவிருத்தி செய்வது? ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீடு, கிராமம் தோறும் பாடசாலை, வைத்தியசாலை என்று கட்டுமானப் பணிகளை யார் செய்வது? நிர்வாகத்தை யார் கவனிப்பது? என்று கேட்பார்கள்.

"நீ ஒண்டும் பேசாமல் இரு பிள்ளை. நான் படுறபாடு உனக்கென்ன தெரியும்" பிள்ளை வளக்கத் தெரியேல்லை எண்டு எல்லாரும் என்னைத்தான் பேசுகினம்"

ஓ! பெற்றோர்களால் சரியாக வளர்க்கப்படாத பிள்ளைகள்தான் போராடப்போகிறார்களா? அவர்களால்தான் இவ்வளவு சாதனைகளையும் படைத்து புதியதோர் சரித்திரத்தை எழுத முடிகிறதா? அப்படியானால் பெற்றோர்களே தயவு செய்து எந்தப் பிள்ளைகளையும் சரியாக வளர்க்காதீர்கள்.

அவளது மனம் கெஞ்சியது. அம்மாவினது விழிகள் ஊற்றெடுத்துப் பெருகின. அவளுக்கு ஏனோ சின்னவயதில் படித்த நல்ல மேய்ப்பன் கதை ஞாபகத்தில் வந்தது. அந்த மேய்பனிடம் நூறு ஆடுகள் இருந்தனவாம். அவற்றில் ஒன்று வழி தவறிப் போய் விட்டதாம். அவன் எஞ்சியிருந்த தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் விட்டு விட்டு அந்த ஒன்றைத்தேடிக் காடு மேடெல்லாம் அலைந்து கண்டு பிடித்தானாம்.

அம்மாவும் கூட அப்படித்தான் இருக்க விரும்புகிறாளா? தன்னுடன் இருக்கும் இரண்டு பிள்ளைகளை விடவும் என்னை ஏன் அம்மாவின் மனம் அதிகமாய் நாடுகின்றது?

ஓ! என் இனிய அன்னையே, நான் திசை தெரியாமல் வழி தவறிய ஆட்டுக்குட்டி இல்லை. எனக்குரிய சரியான வழியில் போய்க் கொண்டிருக்கின்ற ஆற்றிவுள்ள உங்கள் பிள்ளை.

அவள் புன்னகையுடன் தாயின்



தமிழத் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ள் விரிப்பதற்கே

கன்னங்களில் வழிந்த கண்ணீரைச் சுண்டிவிட்டாள்.

அவளைப் பார்க்க உறவினர்கள் வந்தார்கள். நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு அவர்கள் புறப்பட்ட பொழுது அவர்களது உந்துருளி செயற்பட மறுத்தது. அவளும், அம்மாவும் மட்டும்தான் வீட்டிலிருந்தார்கள். ஆகவே அவளே அதற்கு எண்ணை அடைக்கிறது என்று கண்டு பிடித்து 'பில்ரரைக்' கழற்றித் துப்பரவு செய்து கொடுத்தாள். அவர்கள் பெரிதாக வியந்தார்கள்.

அவர்களது வியப்பை மெல்லிய முறுவலுடன் ரசித்த படியே மனசுக்குள் கேட்டாள்,

"எங்களது பிள்ளைகள் நடுக்கடலில் வைத்தே 'கியர் பொக்ஸ்' மாற்றுவார்கள் தெரியுமா உங்களுக்கு?"

அம்மாவிற்கு ஏதாவது உதவி செய்ய அவள் முயன்ற போதெல்லாம் அம்மா தடுத்து விட்டாள். அவள் காரணம் கேட்டபோது,

"உந்த உடம்பு என்னத்துக்காகும்? சும்மாயிரு" என்றாள் அம்மா, அவள் வாய்விட்டுக் கண்ணீர் வரும் வரையும் சிரித்தபடியே பார்வையால் சொன்னாள்,

"ஒவ்வொருநாளும் முதுகு கொடுத்துப் படகு தள்ளுற உடம்பம்மா இது"

இரவில் வீட்டிற்குள் வேர்த்துக் கொட்டியது. அவள் முற்றத்து மாமரத்தின் கீழிருந்த காட்டுத் தடிக் கட்டிலில் சுவாத்தியமாகத் தூங்க விரும்பினாள். அப்பா கூடப் பூச்சி, புழுவிற்கு பயத்தில் வெளியே தூங்குவதில்லையாம் என்று அம்மா மறுத்து விட்டாள். எல்லோரும் தூங்கிய பின் அவள் சத்தம் போடாமல் வெளியே வந்து நிம்மதியாகத் தூங்கினாள்.

சமையலறையே உலகம் என்று பழகியிருந்த அம்மாவை ஒரு மாற்றத்திற்காக வெளியே அழைத்துப் போனாள். இரணைமடு அணைக்கட்டால் பயணித்த போது அம்மா இறுக்கிப் பிடித்த பிடியில் அன்று முழுவதும் தோள் வலித்த படியேயிருந்தது. அதனை விடவும் "அம்மா உனக்கு இவ்வளவு பயமா?" என்று நினைத்து மனசு வலித்தது.

துயிலுமில்லம் கூட்டிப்போய் தனது தோழர்கள், தோழிகள் ஒவ்வொருவரையும் காட்டி அவர்கள் எப்படியெல்லாம் எரிந்தும், சிதைந்தும், கரைந்தும் இந்த நாட்டிற்காய்ச் செத்தார்கள் என்று சொன்னபோது அம்மா வழி நெடுகவும் அழுது கொண்டே வர எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள்.

அவளைப் போலவே விடுமுறையில் நின்ற அவளது தோழி ஒருத்தி பொழுது போகவில்லையாம் என்று அவளிடம் வந்தாள். இருவரும் சேர்ந்து வீட்டையே தலைகீழாக்கி விட்டு மரத்தில் ஏறி அமர்ந்து மாங்காய் சாப்பிட்டபடி கடற்கரை இப்போது எந்தச் சீரில் இருக்கும் என்று பேசிக்கொண்டார்கள்.

"புளி மாங்காய் பிள்ளை. காய்ச்சல் வரும்" மரத்தால் அவர்களை இறக்குவதற்காக அம்மா பொய் சொன்னாள்.

அவளது தோழி சிரித்தபடியே சொன்னாள். "தனது அம்மாவும் தன்னை நீண்டநேரம் தண்ணீருக்குள் நிற்கவேண்டாம், காய்ச்சல் வரும் என்று பேசினாவாம்"

இருவரும் சிரித்த சிரிப்பில் புரைக்கேறி தண்ணீர் குடிக்க இறங்கினார்கள்.

"துவக்கு உன்னைத் தூக்கம் போல கிடக்கு" அவளது தோழியைப் பார்த்து பெரியப்பா கேலியாய் சொன்னார்.

இதே இந்தச் சின்னப் பெண்தான் படகில் மண்மூட்டை வைத்து ஏறி நின்று கனரக ஆயுத்தை இயக்கி எதிரிக் கலங்களை வெளுத்து வாங்குகிறாள் என்பது தெரிய வந்தால் பெரியப்பாவின் முகம் எப்படி பேயறைந்தது போலாகும் என்று நினைத்து அவள் அடக்க முடியாமல் சிரித்தாள். அது புரியாமல் தோழி அவளை முறைத்தாள்.

அவள் விடுமுறை முடிந்து புறப்படுவதற்கு முதல் நாளிரவு ஆறாம் பிறை நிலவு கீழிறங்கிக் கொண்டிருக்க கண்சிமிட்டும் நட்சத்திரங்களிடம் கதை கேட்டபடி சந்தோசமாய்ப் படுத்திருந்த அவளருகில் என்றுமில்லாதவாறு அம்மா வந்து படுத்தாள்.

முதன் முதலாய் ஓய்வாய்ப் படுத்தபடியே வானத்து வைரங்களைத் தரிசித்த அம்மா வியந்து போனாள்.

"எவ்வளவு வடிவாயிருக்கு"

"வடிவு மட்டுமில்லையம்மா, செயற்கை வழிகாட்டும்கருவிகள் செயலிழக்கையில் எமது நிலையான வழிகாட்டிகளாக இருப்பவை இவைதான்" என்று அவள் சொன்னது நிச்சயம் அம்மாவிற்குக் கேட்டிருக்காது.

மாமரத்தின் சலசலப்பின் தாலாட்டில் அவள் விரைவாகத் தூங்கிப் போய்விட்டாள். அம்மாவிற்கு அது புது அனுபவம். அவள் பிறந்து வளர்ந்து நாற்சார வீட்டில், இடம் பெயர்ந்து அவலப்பட்டபோதும் இப்படி வானத்தைப் பார்த்து ரசிக்கும் அனுபவமோ, மனநிலையோ இருந்ததில்லை. அம்மா முதன் முதலாக உணர்ந்து கொண்டாள்.

"வாழ்க்கையும், இயற்கையும் மிகவும் வேண்டிய பலவற்றை எங்களது தலைமுறை இழந்து விட்டது" மெதுவாய்த் திரும்பி மகளைப் பார்த்தாள். கடல் நீரில் ஊறி, கடற்காற்றில் காய்ந்து, வெய்யிலால் பதனிடப்பட்டு வலிமை பெற்ற உடலுடனும், தலைவரின் வளர்ப்பில் வைரம் பெற்ற மனத்துடனும் அவள் ஆனந்தமாகத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

அம்மாவிற்கு அழுகை வந்தது. காரணம் புரியாமல் சத்தமின்றி அம்மா நீண்ட நேரம் அழுது கொண்டிருந்தாள்.

விடுமுறை முடிந்து அவள் புறப்பட தயாரானாள். உறவினர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள்.

"போகத்தான் போறியோ பிள்ளை"

"விட்டுட்டு வா பிள்ளை"


"போய் விலத்தப் போறன் எண்டு



தமிழத தேசிய ஆவணச சுவடிகள்

www.tamilarangam.net





# சிறகுகள் விரிப்பதற்கே

சொல்லு"

"நாங்கள் அங்கால போகேக்கை கூட்டிக் கொண்டு போறம். நீ வா"

என்று அவளை விக்கிரகமாய் நினைத்து அனைவரும் அர்ச்சனை செய்து கொண்டிருந்தார்கள்.

அவள் பிரயாணப் பையைக் கையில் எடுக்கவும் அதுவரையும் பேசாமல் இருந்த பெரியப்பா இப்போது வாய் திறந்தார்.

"நீ போகவேண்டாம் நில், நான் மிச்சம் பார்த்துக் கொள்ளுறன்"

அவள் இப்படியொன்றை எதிர்பார்க்கவில்லை. அவர்களது உறவினர்கள் அனைவரின் மத்தியிலும் பெரியப்பாவின் சொல்லுக்கு மறு பேச்சுக் கிடையாது. அவர் மீது அனைவரும் அதிக பாசம் வைத்திருந்தார்கள். அவரும் அப்படித்தான். யாருக்காகவும் உயிரைக் கூட கொடுக்கத் தயங்கமாட்டார்.

அவள் தனித்துப் போய் பெரியப்பாவைப் பார்த்தாள். படகில் ஏனைய அனைவரும் காயமும் வீரச்சாவும் அடைந்துவிட ஒரே ஒரு இயந்திரத்துடன் எதிரிப் படகுகளுக்குள்ளால் தனியே படகைக் கொண்டு வந்தபோது கூட அவள் இப்படிக் கலங்கவில்லை.

தனது பேச்சிற்கு மறுபேச்சு இல்லை என்பதால் பெரியப்பா மேலே எதுவும் பேசவில்லை. எல்லோரும் அவளது பதிலுக்காய்க் காத்திருக்க ஒரு கடுமையான அமைதி அங்கே நிலவியது. தனக்காகத் தானேதான் கதைக்க வேண்டிய கட்டாய நிலையில் அவள் வாய் திறந்த போது....

"அவள் போகட்டும் விடுங்கோ"

அவளால் தனது காதுகளையே நம்ப முடியவில்லை. பிரயாணப்பைகளை எறிந்து விட்டு ஓடி வந்து அந்தக் குரலிற்குரியவளைக் கட்டிக் கொண்டாள்.

தான் இழந்துவிட்ட சுதந்திரங்களையும் சந்தோசங்களையும் தனது குஞ்சாவது அனுபவிக்கட்டும் என்று தாய்க் குருவி நினைத்தது போலும்.

அந்த இறுக்கமான அணைப்பில் மகள் தாய்க்கு நன்றி சொன்னாள். தாய் மகளுக்காகத் தன் மனப்பூர்வமான ஆசியைத் தெரிவித்தாள். இருவரும் சந்தோசக் கண்ணீருடன் பிரிந்தார்கள்.

முகம் கொள்ளாத மகிழ்வுடன் அவள் முகாம் திரும்பினாள். அவளைக் கண்டு ஓடிவந்து ஆர்ப்பாட்டம் செய்த தோழிகளைச் சமாளித்து விட்டு கடற்கரைக்குப் போனாள். நீண்ட நாள் பிரிந்து இருந்துவிட்டது போலிருந்தது. ஓடிப்போய் நீரில் கால் வைத்தாள். அம்மாவின் அருகாமையாய் அது குளிர்ந்தது. கடற்காற்று அம்மாவின் மென்மையுடன் தலை கோதியது. தூரத்தில் அலைகள் அம்மாவின் சிரிப்பைப் போல் நுரைகளுடன் கரை சேர்ந்தன. எங்குமே அம்மா நிறைந்திருப்பதாய்ப்பட்டது. கடலும் ஒரு தாய்தானே.

கரையோரமாக எங்கோ போய்விட்டு வந்து கொண்டிருந்த பொறுப்பாளர் அவளைக் கண்டு கூப்பிட்டார்.

"ஓமம்மா"

சொல்லிவிட்டு நாக்கைக் கடித்தாள் அவள். நல்லவேளை, பக்கத்தில் யாருமில்லை. கடலின் இரைச்சலில் பொறுப்பாளருக்கும் சரியாக விளங்கியிருக்க வாய்ப்பில்லை.

**சூரிய நிலா**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பு.சிந்துஜன்



## 1

மீளவும் உயிர்த்திருக்கிறது பசுமை
தமிழரின் நிமிர்வின் குறியீடாய்
இயக்கச்சியைத் தின்றிருந்த
'அயன் சைற்' றின் நிழலில் அறுத்தெறியப்பட்ட
தாலங்களின் "அடிக்கட்டைத் தோப்பில்"
மீளவும் உயிர்க்கின்றது பசுமை
'உடையவன் கண்டால் தற்கொலைதான் செய்வான்'
என்றவிந்த நெஞ்சுகள் குளிர்ந்தன...
வயிறெரிந்து சாபமிடல், கழிவிரக்கம்
என்பதல்ல எங்கள் வாழ்வியல்
'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' எங்கள் வழி!
வாழ்க தோப்புடையோனே,
நீங்கள் எங்கள் வாழ்வின் துளிர்.

## 2

பளை தாண்டிப் போகிறது வண்டி
வட்டற்ற தென்னைகள் பனைகள்.
எறிகணைச் சிதறல்களைத் தாங்கி
பலப்பல கோலங்களில் மரங்கள்.
குறுக்கறுத்த புலிகளைச் சூழ்ந்து
அறுபதாயிரம் படையினர் புரிந்த சாதனை!
பதைக்கிறது மனது,
இதனுள் நின்றவர் எப்பாடுபட்டிருப்பர்!

விரிகின்றன விழிகள்.
உயிரிழந்து பல்லிளித்து நிற்கிறது
துருப்புக்காவி ஒன்று அப்பாலே ஒரு ட்ரக்.
இதனுள்ளிருந்தா கேட்டாய் எம் தளபதியைச் சரணடைய
காப்போமவற்றை.
எம்பிள்ளைகளின் வீரத்தின் சின்னமாய்.

## 3

வாய்விட்டுச் சிரித்தேன்
மறுகணம் இறுகிக் கொண்டது மனம்
முட்கம்பியும் காவலரணும் சுவர்க்கரையொன்று
"Srilankan Army Is Best" என்கிறது.
திரும்பிப் பார்த்தேன்
யாழ் வளைவும் செம்மணி வெளியும்
தெளிவாய்த் தெரிந்தன.

## 4

எட்டாவது ஆண்டில் உன்னைத்
தரிசிக்க வந்தேன் உன் துயிலிடத்தில்
நள்ளிரவில் சுடரேற்றி நாமழுது உரமேற்ற
நாட்கள் எழுந்தன மனதில்
இப்போதும் மஞ்சள் மாலையில்
ஆயிரங்களாய்க் கூடினோம்
'சந்திகளில் நின்றோர்' முகமும் மனமும் அதிர
மீண்டும் உயிர்த்த உன் துயிலிடத்தில்
ஏற்றுகிறேன் சுடர்கள்
சுடர்கிறது ஒளியென் மனதில்.



www.tamilarangam.net



# உனது வாழ்வையும்தான் நாம் நேசிக்கின்றோம்

நீயும் நானும் சமர்க்களத்தில்
எதிரெதிரே இருந்தோம்.
உனது சுடுகுழல் என்னைக் குறிவைக்க
என்னை நீயும் உன்னை நானும்
கவனித்தபடியே எம் காப்பரண் வாழ்வு
ஓடிக் கழிந்தது.
உனது ஊர் பிடிக்கும்
கடமை சுமந்து என்னைக் கொல்ல வரும்
உன்னை முன்னேற விடாத
எனது காவல்.
சமர்க்களமொன்றில் கட்டுடைத்துப் பாய்ந்து
ஆறாய்ப் பெருகிய
என் குருதிக்கு
உனது ரவையொன்றுதான்
காரணமாக இருந்திருக்கலாம்.
எனதருகே காவலிருந்த தோழி
கண்ணொன்றைப் பறி கொடுக்க
நீதான் சிலவேளை சுடுகுழல் இயக்கியிருப்பாய்.

உனது குழுத்தலைவன் தப்பியோடிய
அன்றைய பாரிய மோதலொன்றில்
எனது குழுத்தலைவி
மண்ணுள் விழி மூடிப்போனாள்.

அவளின் புகழுடலுக்கு ஊர்ச்சனம்
மண்போட்ட அன்று
உங்களது பண்டாவும், சமரவீராவும்
நீங்கள் வெட்டித் தறித்த
தென்னந் தோப்புக்கே
உரமாகிப் போயினர்.
அர்த்தமுள்ள எம் சாவுக்குப் பின்னால்
அருகதையின்றிப் போயிற்று
உன் மாந்தர் உயிர்கள்.

சாவுகளை எம் அருகில்
உறங்க விட்டு நாம் விழித்திருக்க
நீயும் உன்னவரும் அதை
எதிர் கொள்ளப் பயந்து விழித்திருக்க
நித்திரையற்ற எத்தனை இரவுகளில்
விடுமுறையில் போய்த்திரும்பியே வராத
நினைப்போடு நீயும்,
என் உறவுகள் ஊர் போகும்
கனவோடு நானும்
கண் விழித்திருப்போம்.

வெடிமுழக்கச் செய்தி கேட்டு
உனது சுஜாதா விகாரைக்குச் செல்வாள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனது அம்மாவும்
தேங்காய், கற்பூரம், பூக்கள் சகிதம்
அரசடிப் பிள்ளையாருக்கு முன்னால்
பிரதட்டை பண்ணியிருப்பாள்.
எப்படி இவற்றையெல்லாம்
சுலபமாக மறக்கமுடியும் பகைவீரா!
இவ்வளவு நாளும்
உயிருடனிருக்கிறேன் என்பதையே
நம்ப முடியாமலிருக்கிறது எனக்கு.

இப்போது நீயும் நானும்
சில மீற்றர் தூரங்களில்
சிரித்தபடியே பார்த்திருக்கிறோம்.
உனது சாவடி தாண்டி வரும் எம்மவரை
சோதனையிட்டுப்
புன்னகையொன்றை வெளியிட்டபடி
போகச் சொல்கிறாய்.
காலம் தான் எவ்வளவு மாறிவிட்டது பார்த்தாயா
என்னையும் உன்னையும்
வழிநடத்திய தளபதிகள்
ஒரே மேசையில் உட்கார்ந்து பேச,
உன்னூருக்கு என் சனமும்
என்னூரில் உன் உறவுகளும்
சுற்றுலா மேற்கொள்ள
எதிரெதிரே இருந்தவரை
அருகருகே வைத்துள்ளதே இக்காலம்.
ஆட்சியும் அரசும்
மாறி மாறிக் கழிய
என் மாந்தர் துயருக்காய் நானும்
உன் உறவுகளின் பசிபோக்க நீயும்
காப்பரண் வேலிக்கு வந்திருந்தோம்.
இப்போது சமாதானக் கனவில்
அதிகம் மகிழ்ந்திருப்பது
நீதான் என்று எனக்குத் தெரியும்.
நித்திய சாவும் பூரணவாழ்வுமாய்
இருந்த உனக்கொரு இடைவெளி.

கார்த்திகை வந்துள்ளது
கண் மழையுள் எமை வீழ்த்திய
காலங்களை விரட்டிய
எம் வீரர்களுக்குச் சுடரேற்ற
கல்லறைக்குச் செல்லவுள்ளேன் நான்.
நீயெப்படி...........

இன்னமும் கம்பி வேலிக்குள்ளா
காலத்ததைக் கடத்துகிறாய்.
இவ்வுடல் மண்வீழும் வரைக்கும்
விடுதலைக்காகவே வாழ்கிறேன் நான்.
உயிர்விடும் கடைசித் துளிவரை
அச்சத்துடன் கழிகிறதே உன்வாழ்வு.
உனது துப்பாக்கியும்
எனது சுடுகுழலும்
இப்போது மௌனித்திருக்கிறது.
தேசத்தைக் கட்டியெழுப்பும் பணிகளில்
சிரத்தையாயுள்ளது எம்கரங்கள்.

எப்போதும் சுடுகுழல் காவித்திரியும்
சுமை கொண்ட வாழ்வுக்குச்
சொந்தக்காரனே
உனக்காய் யார் ஏது செய்தார்கள்?
எங்கள் தலைவனின் காலத்தில்
விடியும் நாளுக்காய்
கனவுகள் சுமந்தபடி
ஊர்போக முடியாது காத்திருக்கும்
எம் தமிழர் வீடுகளில்
பாதுகாக்கப்பட்டிருக்கிறதா உன்
வாழ்வு?
இரு
எமது இயல்பு வாழ்வுக்காய்
எதையும் செய்வதை விரும்பாதவர்கள்
உனது முள்வேலி வாழ்க்கைக்காவது
ஒரு முடிவு கட்டுவார்களா?

உனது சுஜாதாவுக்காக
இளநீர் சீவிப் பிழைப்பு நடத்த
இனியாவது காலம் உன்னை
அனுமதிக்கட்டும்.
பகைவீரா!
இந்த மண் உன்னைத்
தோழமையுடன் வழியனுப்பி
வைக்கவே விரும்புகின்றது.
நான்கு பேர் சுமக்க முடியாது
உப்பிப் பருத்த
வெற்றுடலாகவல்ல.

அம்புலி





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆய்வாளர் கவனத்தை ஈர்க்கத் தவறிய வாவெட்டிமலை இராசதானி

கலாபூஷணம், முல்லை மாமணி வே.சுப்பிரமணியம் வட இலங்கை வரலாறு பற்றி சுவாமி ஞானப்பிரகாசர், முதலியார் இராசநாயகம் முதல் பேராசிரியர்களான அரசரத்தினம், கா.இந்திரபாலா, சி.பத்மநாதன், கலாநிதி க.செ.நடராஜா, விரிவுரையாளர் ப.புஷ்பரட்ணம், க.தங்கேஸ்வரி வரை பலர் ஆய்வு செய்து கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியுள்ளனர்.

கயிலாயமாலை, வையாபாடல், பரராச சேகரன் உலா, இராசமுறை யாழ்ப்பாண வைபவமாலை, மகாவம்சம், சூளவம்சம் முதலானவற்றையும் ஆதாரமாகக் கொண்டு ஆய்வுகளை நடத்தியுள்ளனர்.

இவற்றில் மிகப் பழைய நூலான வையாபாடல் சயவீரசிங்கை ஆரியன் என்னும் ஐந்தாம் செகராசசேகரன் காலத்தில் (1380 - 1414) சமஸ்தானப் புலவராக விளங்கிய வையா என்னும் புலவரால் செய்யுள் நடையில் இயற்றப்பட்டது என்பதே இந்நூலின் உண்மையான பெயராகும். காலப் போக்கில் நூற் பெயர் மறைந்து போக ஆக்கியோன் பெயராலேயே இது அழைக்கப்படுகிறது. இது ஒரு வரலாற்று நூல். இலக்கிய நோக்குடன் இந்நூல் செய்யப்படவில்லை. இந்நூற் செய்யுள்களில் கற்பனை வளமோ, வர்ணனையோ, அணிச்சிறப்போ, காவியச் சுவையோ இல்லை. இந்நூலில் இடம்பெறும் செய்திகள் பெருமளவு வரலாற்றுண்மைகளும் மிகச்சிறிதளவு கற்பனையையும் கொண்டுள்ளன.

இந்நூலின் 17ஆம், 96ஆம், 99ஆம் செய்யுள்களில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வாவெட்டி மலை இராசதானியில் இருந்து அரசோச்சிய மன்னர்கள் பற்றி குறிப்புகள் உண்டு.


கி.பி.18ஆம் நூற்றாண்டில் மயில்வாகனப் புலவர் இயற்றிய யாழ்ப்பாண வைபவமாலை என்னும் வசன நடையில் அமைந்த நூல் கைலாயமாலை, வையாபாடல், பரராசசேகரன் உலா, இராசமுறை என்னும் நூல்களை ஆதாரமாகக் கொண்டு இயற்றப்பட்டதென நூலின் சிறப்புப்பாயிரம் கூறுகின்றது. எனினும் வைபவமாலை வாவெட்டி மலை இராசதானி பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. பின்வந்த ஆய்வாளர்களும் இதனைக் கவனத்துக்கு எடுக்கவில்லை.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வையா வன்னியிலுள்ள இராசதானி பற்றிக் கற்பனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. வலுவான ஆதாரம் ஒன்றின் அடிப்படையிலேயே வாவெட்டிமலை இராசதானி பற்றிக் குறிப்பிட்டிருக்க வேண்டும். துரதிஷ்டவசமாக அந்த ஆதாரம் தற்போது எமக்குக் கிடைக்கவில்லை. கல்வெட்டுச் சான்றுகளோ, வேறு ஆதாரங்களோ கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக இதனை ஒதுக்கிவிட முடியாது.

வன்னி மாவட்டத்திலுள்ள ஒட்டுசுட்டானுக்கு மூன்று மைல் தொலைவில் உள்ளது வாவெட்டிமலை. அடர்த்தியான காட்டின் மத்தியில் உள்ள வாவெட்டிமலை இராசதானியினதும், வணக்கத்தலத்தினதும், குடியிருப்புக்களினதும் அழிபாடுகளை இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றது. 'மாநகர் வாவெட்டிமலை' என வையாபாடலில் குறிப்பிடப்படுவதிலிருந்து பெரிய தொரு நகரமாக வாவெட்டிமலை திகழ்ந்திருக்கிறது என அறியக்கூடியதாக இருக்கிறது.

வாவெட்டிமலை இராசதானி பற்றி வையாபாடலில் இடம்பெறும் குறிப்பினையும் அது தொடர்பான சம்பவங்களையும் நோக்குவோம்.

இலங்கை வேந்தனாகிய இராவணன் சங்காரம் செய்யப்பட்ட பின் இலங்கை மன்னனாக இராமனால் முடிசூட்டப்பட்ட விபிஷணன் முன்னிலையில் யாழ் பாடியொருவன் (கவிவீரராகவன்) யாழ் வாசித்து வட பால் அமைந்த மணற்றிடல் காட்டைப் பரிசாகப் பெற்றான். அதனைத் திருத்தி நற்பயிர் விளைவித்துச் சோலையாக்கினான். அங்கு ஓர் அழகான மண்டபத்தை அமைத்தான். பின்னர் தசரதனின் மைத்துனனான குலக்கேதுவின் மைந்தன் கோளுறு கரத்துக் குரிசிலைக் (கூழங்கைச் சக்கரவர்த்தி) கூட்டிவந்து அவனுக்குச் சக்கரவர்த்திப்பட்டம் சூட்டினான். இது நிகழ்ந்தது கி.மு. 101ஆம் ஆண்டிற்குச் சமமான கலியுக ஆண்டு 3000 இல் ஆகும்.



**வன்னிப் பிரதேசத்தில் நிலவும் செவிவழிச்செய்தி குளக்கோட்டன் ஒட்டுசுட்டான் தான்தோன்றிஈஸ்வரன் கோவிலுக்குத் திருப்பணி செய்தான் என்று கூறுகின்றது. நந்தி உடையாருடன் ஏற்பட்ட பிணக்குக் காரணமாக அவரது நந்திக்கடல் வயல் வெளிக்கு பேராற்று நீரை செல்ல விடாது தடுக்கும் நோக்குடனேயே முத்தையன் கட்டுக் குளத்தை திருத்திக் கட்டுவித்தான். இக்குளம் சோழப்பெருமன்னர் காலத்தில் (993–1070) ஒட்டுசுட்டானில் வன்னிப்பிரதேச ஆட்சிக்குப் பொறுப்பாக இருந்த இராஜப் பிரதிநிதி முத்தரையனால் கட்டப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.**

கோளுறு கரத்துக் குரிசிலின் மாமனான உக்கிர சோழனது மக்கள் சிங்ககேது என்பவனும்... மாருதப்பிரவை என்பவளும் இலங்கை சேர்ந்தனர். மாருதப்பிரபைக்கு இருந்த குதிரை முக நோய் கீரிமலைத் தீர்த்தமாடக் குணமாயிற்று. 'குதிரை முகம் என்பது முழந்தாளைக் குறிக்கும். குதிரை முகநோய் என்பது முழந்தாளில் ஏற்படும் ஒரு நோய் போலும்' என வையாபாடல் பதிப்பாசிரியர் கலாநிதி.க.செ.நடராசா கூறுகின்றார்.

பின்னர் அவள் கதிலையம் பதிக்குச் (கந்தரோடை) சென்று அரண்மகவினை வணங்கிவருங் கால் உக்கிர சிங்கசேனன் அவளை மணந்து வாவெட்டியில் மண்டபமியற்றி அங்கிருந்து அரசாட்சி செய்தான். உக்கிர சிங்க சேனனை உக்கிரசிங்கன் எனவும் மாருதப் பிரபையை மாருதப்பிரவல்ல, என்றும் யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகின்றது. உக்கிரசிங்கன் கதிரைமலையில் இருந்து அரசாண்டான் என்று கூறுகின்றது இந்நூல். இவன் வன்னிமார்க்கமாகச் செல்லும் போது வன்னியார் ஏழு பேரும் எதிர் கொண்டு வந்து, தாங்கள் வன்னி நாடுகளைத் திறை கொடுத்து ஆள உத்தரவு கேட்டனர். தனக்கும் சேரவேண்டிய திறையை கோணேசர் கோவிலுக்குக் கொடுக்குமாறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூறிவிட்டுக் கதிரை சென்றான் என்கிறது வைபவமாலை. வாவெட்டி இராசதானியில் இருந்து ஆட்சிபுரியும் போது இச்சம்பவம் நிகழ்த்தியிருக்கலாம் என ஊகிக்கலாம். கோளுறு கரத்துக் குரிசிலின் மறைவுக்குப் பின் உக்கிரசிங்கன் கதிரைமலைக்கு சென்று யாழ்ப்பாண அரசனாகியிருக்கலாம்.

உக்கிரசிங்கன் விஜயனின் சகோதரன் மரபில் உதித்தவன் என்கிறது வைபவமாலை. உக்கிரசிங்கனே குளக்கோட்டன் எனவும் மாருதப்பிரவையே ஆடக சௌந்தரி எனவும் சுவாமி ஞானப்பிரகாசர் கருதுகிறார். சோழகங்கன், சோடகங்கன் ஜயபாகு என்னும் வேறு பெயர்களும் குளக்கோட்டனுக்குண்டு.

"சாலிவாகன சகாத்தம் 358 ஆம் வருடத்திலே (கி.பி. 436) மனுநீதி கண்ட சோழன் மகன் குளக்கோட்டு மகாராசன் யாத்திரை பண்ணித் திருகோணமலையிற் சேர்ந்து கோணேசர் சிவாலயத்தைத் தரிசித்துத் தம்பலகாமத்திற் பழுதுபட்டுக் கிடந்த கோணேசர் சிவாலயத்தைப் பழுது பார்ப்பித்தான்" என யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது.

ஜயபாகு(குளக்கோட்டன்) கலிங்கமாகனுடன் இணைந்து இராசரட்டையை ஆண்ட தமிழ் மன்னன் என சூழவம்சம், பூஜாவலி ஆகிய நூல்கள் கூறுகின்றன. இவர்களின் காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதி என தற்கால ஆய்வாளர் கூறுகின்றனர். கிழக்கிலங்கையுடனேயே குளக்கோட்டன் திருப்பணிகள் பற்றிப் பெரும்பாலும் பேசப்படுகின்றன.

வன்னிப் பிரதேசத்தில் நிலவும் செவிவழிச்செய்தி குளக்கோட்டன் ஒட்டுசுட்டான் தான்தோன்றிஈஸ்வரன் கோவிலுக்குத் திருப்பணி செய்தான் என்று கூறுகின்றது. நந்தி உடையாருடன் ஏற்பட்ட பிணக்குக் காரணமாக அவரது நந்திக்கடல் வயல் வெளிக்கு பேராற்று நீரை செல்ல விடாது தடுக்கும் நோக்குடனேயே முத்தையன்கட்டுக்குளத்தை திருத்திக் கட்டுவித்தான். இக்குளம் சோழப்பெருமன்னர் காலத்தில் (993-1070) ஒட்டுசுட்டானில் வன்னிப்பிரதேச ஆட்சிக்குப் பொறுப்பாக இருந்த இராஜப் பிரதிநிதி முத்தரையனால் கட்டப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இவற்றிலிருந்து உக்கிரசிங்கனே குளக்கோட்டன் கருத்து வலுவடைகிறது. இவன் வாவெட்டிமலையில் இராசதானி அமைத்து வன்னிப் பிரதேச நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருந்தான் என்று கொள்வது தவறாகாது.

பொன்னகர் நிகழும் கதிரையாம் பதியில்
போய் அரண் மகவினை வணங்கிப் பின்னர்
உக்கிரசிங்கசேனன்றன் பெண்ணென
இருந்தனன் அதன் பின் மன்னவன்
அடங்காப் பற்றினிலேகி மாநகர்
வாவெட்டிமலையில் தன்னிகரற்ற மண்டபம்
இயற்றித் தன்னரசியற்றினன் இருந்தான்
(வையாபாடல் 17)

என்றும் வையாபாடல் மாருதப்பிரபை கதிரைமலையில் அரண்மகவினை (முருகப் பெருமானை) வணங்கியபின் உக்கிரசிங்கனின் மனைவியானாள் என்பதையும் சுட்டுகின்றது.

வாவெட்டிமலை இராசதானி பற்றிய இன்னொரு குறிப்பு வையாபாடல் 96ஆம் 99ஆம் செய்யுள்களில் இடம் பெறுகிறது.

யாழ்ப்பாணத்திலே செகராச சேகரனையும், வாவெட்டியிலே சங்கிலியையும் அரசு பாலிக்க வைத்து அவர்கள் தமையனை பரராசசேகரன் முள்ளியவளையிலிருந்து பேரரசோச்சினான் என்றும் தன் தம்பியர்கள் யாழ்ப்பாணத்திலும் வாவெட்டியிலும் எவ்வாறு பரிபாலனம் நடத்தினார்கள் என மாதந்தோறும் சென்று கண்காணித்து வந்தான் என்றும் வையாபாடல் குறிப்பிடுகின்றது.

அந்தவனை வோர்களையும்
மன்னவர்கள்
மன்னவன் பார்த் தன்பினோடு
கந்தமலி தாரிளவல் செகராச
சேகரனைக் கருணை கூர
இந்த யாழ்ப் பாணமதில் இருக்க
வென்றே
சித்திரவே வரையு மீந்து
வந்து முள்ளி மாநகரில் கோட்டையும்
சினகரமும் வகுப்பித் தானால்
(வையாபாடல் 96)

எந்நாளுமிம் முறையே யாவரையும்
வாழ்விரென விருத்தியங்கன் மன்னான
இளவெலெனும் சங்கிலியை வாவெட்டி சாரச்
செய்து முன்னோர்க்குப் புரிபூசை நிதம்
தெரிசித்தே முள்ளி வளையா மூரில்
மன்னான இரவிகுலப் பரராச சேகரனும்
வாழ்ந்தா னன்றே
(வையாபாடல் 99)

பரராசசேகரன் முள்ளியவளையில் கட்டியதாகக் கூறப்படும் கோட்டையின் சிதைவுகள் இன்றும் காணக்கூடியதாக இருக்கிறது. முள்ளியவளைக் காட்டுவிநாயகர் ஆலயமே (சினகரம்) பரராசசேகரன் கட்டிய கோயிலாகும்.

யாழப்பாணத்தை இரண்டு சங்கிலி மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். முதலாவது சங்கிலி கி.பி. 1519 தொடக்கம் 1561 வரை ஆட்சி செய்தான். இரண்டாவது சங்கிலி (சங்கிலி குமாரன்) 1615 தொடக்கம் 1619 வரை யாழ்ப்பாணத்தில் அரசோச்சினான். வையா என்னும் புலவர் எந்தச் சங்கிலியைக் குறிப்பிடுகின்றார் என்று தெரியவில்லை. முதலில் வாவெட்டியிலும் பின்னர் யாழ்ப்பாணத்திலும் ஆட்சி புரிந்தவன் முதலாவது சங்கிலி எனக் கொள்ளலாம்.

தற்கால ஆய்வின்படி சங்கிலி பரராசசேகரனின் சகோதரன் அல்லன். பரராசசேகரனின் மூன்றாவது மனைவி வயிற்றுப் பிறந்தவன். பட்டத்து இராணி வயிற்றில் பிறந்தவர்கள் சிங்கவாகு, பண்டாரம் என்போர். சிங்கவாகுவுக்கோ அல்லது பண்டாரத்துக்கோ இளவரசுப்பட்டம் கட்டியபோது சங்கிலியை வாவெட்டியில் உபராசனாக அமர்த்தியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. பட்டத்துக்குரிய இளவரசர்களை விட இவன் வீரமும் ஆற்றலும் கொண்டவனாகத் திகழ்ந்திருக்கிறான். முடிக்குரிய இளவரசர்கள் கொல்லப்பட்ட பின்னர் (சங்கிலியே இவர்களைக் கொலை செய்தவன் என வைபவமாலை ஆசிரியர் அவன் மீது பழி சுமத்துகிறார்) சங்கிலி யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றியிருக்கலாம். கீர்த்தி வாய்ந்த நாட்டுப்பற்றுள்ள மன்னனாக 42 ஆண்டுகள் யாழ்ப்பாணத்தை ஆட்சிபுரிந்த பெருமை இவனைச் சாரும்.

யாழ்ப்பாண அரசனான பரராசசேகரன் ஏன் தன் இராட்சியத்தை விட்டு வன்னிப் பிரதேசத்துக்கு சென்றான்? இதற்கு வையாபாடலும் யாழ்ப்பாண வைபவமாலை வெவ்வேறு காரணங்களைக் கூறுகின்றன.

"தென்னிலங்கை அரசர் சிலர் கொடுங்கோலோச்சிய காரணத்தால் குடி சனங்கள் பரராசசேகரன் பால் முறையிட அவன் தம்பியோடு படை நடத்திச் சென்று பகையரசரை அடக்கினான்" என வையாபாடல் கூறுகின்றது. அதன்பின்னரே முள்ளியவளையில் இருந்து இராச்சிய பரிபாலனம் செய்திருக்கவேண்டும்.

"முடிக்குரிய இளவரசர்களை சங்கிலி கொலை செய்வித்ததை அறிந்த பரராசசேகரன் தன்னையும் அவன் கொன்று விடுவான் என்று அஞ்சித் தன்னிடமிருந்த சேமதிரவியத்தை இராக்காலத்திலே யானைகளில் ஏற்றிக் கொண்டு போய் வன்னிகுள்ளே சேமித்து வைத்து செங்கோலையும் முடியையும் கூட வைத்து உன்மத்த வைரவனைக் காவல் வைத்தான்" என வைபவமாலை கூறுகின்றது.

யாழ்ப்பாண அரசர்களான உக்கிரசிங்கனும், சங்கிலியும் வாவெட்டியில் இராசதானி அமைத்து ஆட்சி புரிந்ததையும் வையாபாடல் தெளிவாகக் கூறுகின்றது. வாவெட்டிமலையையும் முள்ளியவளையில் உள்ள பரராசசேகரன் கோட்டையின் சிதைவுகளையும் அகழ்வாராய்ச்சி செய்யின் பெறுமதிமிக்க வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கக்கூடும். இத்தகைய ஆய்வு பல்கலைக்கழக மட்டத்தில் செய்யப் பட வேண்டும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# எப்போதும் எதிரிக்குப் போரிடியாக...

## லெப்.கேணல் நிர்மா

மேரி சாந்தினி ஞானானந்தம்
கிளிநொச்சி

பிறப்பு-1973.09.23
வீரச்சாவு-2001.04.28

"இந்தக் கோட்டையில் என்று புலிக்கொடி பறக்கின்றதோ அன்றுதான் எமக்கு விடிவு பிறக்கும்"

லெப்.கேணல் திலீபனின் உரையைச் சுமந்த காற்று கோட்டையிலே கம்பீரமாக பறந்து கொண்டிருந்த புலிக்கொடியைத் தழுவி வீசியது. மகிழ்ச்சி, பெருமிதம், இன்னும் இனம் புரியாத உணர்வுகள் எல்லாம் கலந்த ஒரு உணர்வில் தமிழர்கள் ஊறிப்போயினர்.

'ஜீவன்' கானகப் பாசறை வெற்றியைக் கொண்டாடியது. லெப்.கேணல் மாதவி (பின்நாட்களில் கடற்புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி)யிடம் படையியற் பயிற்சியைப் பெற்றுக் கொண்டிருந்த மகளிர் படையணியின் அந்த அணிக்கு, தாம் பயிற்சி முடித்துப் போய் அடித்துத்தான் கோட்டையைப் பிடிப்போம் என்று சொல்லிச் சொல்லி பயிற்சி எடுத்த அந்த அணிக்கு வெற்றிக் களிப்பையும் மீறி கவலை வந்தது.

"எப்போது எங்களுக்குச் சண்டை?"

எல்லோர் மனதிலும் இதே கேள்விதான்.

"நீங்கள் வரப்போறீங்கள் எண்ட பயத்திலேயே அவன் ஓடி விட்டான்"

பயிற்சியாசிரியர்கள் கேலி செய்தனர்.

"நாங்கள் போக முதலே இப்பிடியெண்டால், போயிருந்தால் என்ன நடந்திருக்கும்"

என்று வீரம் பேசிச் சமாளித்துக் கொண்டனர் லெப்.கேணல் நிர்மா முதலான பயிற்சியாளர்கள் சண்டை ஒன்று வராமலா போகும் என்று தம்மை ஆறுதற்படுத்திக் கொண்டனர்.

அது இரண்டாம் ஈழப்போர்க் காலம். களங்கள் விரிந்திருந்தன.

பலாலிப் படைத்தளம் போராளிகளால் காவலிடப்பட்டது. கட்டுவன், வீமன்காமம் போன்ற பகுதிகளில் ஆளுமையைக் கொண்டிருந்த நிர்மா ஆரம்பத்திலேயே சிறு அணியொன்றின் இரண்டாவது பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் பெரிதும் பேசப்பட்ட எமது முதலாவது மரபு வழிமுறைப் போரான ஆனையிறவுத் தளம்மீதான ஆகாய கடல் வெளிச்சமருக்கும் அணியொன்றின் இரண்டாவது பொறுப்பாளராகவே போயிருந்தார்.

ஆனையிறவு எமது கையில் விழாமல் தடுக்குமுகமாக வெற்றிலைக் கேணியில் தரையிறங்கி, ஆனையிறவு நோக்கி நகர்ந்த படையினரை வழிமறித்து நடந்த சண்டைகளின் போது புல்லாவெளியில் காயமடைந்தார்.

காயம் ஆறியதும் கண்ணி வெடிகள் தொடர்பான சிறப்புப் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டார். விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் முதலாவது கண்ணிவெடி அணியாகப் பயிற்சி முடித்து எமது அமைப்பின் தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்களால் வழங்கப்பட்ட சின்னங்களுடன் பணி செய்வதற்காய் வெளியேறினார்.

அதன் பின் தொடர்ந்த கஜபார எதிர் நடவடிக்கை(1992), பலவேகய -02 எதிர் நடவடிக்கை (1992) என்றவாறாக அவரின் களங்கள் தொடர்ந்தன.

1992இல் தொண்டமானாற்றிலிருந்து ஒட்டகப்புலம் வரையான 150 காவலரண்கள் தகர்ப்பு நடவடிக்கைக்கு முன்னரான ஒழுங்கமைப்புக்களின்போது பகல்நேர அவதானிப்புக்கென ஒரு பகுதி நிர்மாவிடம் கொடுக்கப்பட்டிருந்தது. இரவு நேரங்களில் எமது வேவு அணிகளுடன் முன்னகர்ந்து, தாக்குதல் அணிகள் உள்நுழையவுள்ள பாதைகளில் கிடக்கும் எதிரிகளின் கண்ணிகளை அகற்றுதல், பகலில் தொடர்ச்சியாக மழையில் நனைந்து வெய்யிலில் காய்ந்தவாறு அவதானித்தல், மறுபடி இரவு கண்ணிவெடி அகற்றல் என்று கடைசி ஐந்தாறு நாட்களிலும் ஓய்வேயில்லத கடும் பணி.

இடையில் நிர்மாவின் அணியை வந்து பார்த்த நிர்மாவின் பொறுப்பாளர், எல்லோரையுமே பின்னணிக்குப் போய்க் குளித்துவிட்டு வருமாறு பணித்தார். பகல் நேர அவதானிப்புத்தானே என்று முழுப் பேருமே போகாமல் தன்னோடு ஒருவரை நிறுத்திக்கொண்டு ஏனையவர்களைக் குளிக்க அனுப்பினார் நிர்மா. சண்டை தொடங்க இன்னும் ஓரிரண்டு நாட்களே இருக்கும் போது தமது கவனக்குறைவால் ஏற்படப்போகும் சிறு தவறுகூட நடவடிக்கையில் பாதிப்பை ஏற்படுத்தி விடக்கூடாது என்பதில் அவர் மிகக் கவனமாகவே இருந்தார். நிலைமை சிக்கலில்லை என்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பு நிர்மாவுடையது. பலாலி விமானத்தளப் பகுதியினுள் பகலில் நடமாட்டம் கூடுதலாக இருப்பதால், சாப்பிடுவதற்குக்கூட மரத்தை விட்டு இறங்காமல் தொலைநோக்குக் கருவியால் அவதானித்தவாறே இருந்தார்.

சண்டை தொடங்கும்போது நிர்மாவுக்கு பின்னணியில் நின்று காயக்காரர்களை வெளியேற்றும் பணி கொடுக்கப்பட்டிருந்தது. நேரடியாகச் சண்டையில் தன் பங்கு இல்லை என்பது நிர்மாவால் ஏற்றுக்கொள்ளமுடியாததாக இருந்தது. இருளில் நகர்ந்து கொண்டிருந்த அணிகளுடன் சேர்ந்து நகரத் தொடங்கிய நிர்மாவை அவரின் பொறுப்பாளரின் கூர்மையான விழிகள் கண்டுகொண்டன. உடனடியாகவே ஆளைப் பின்னணிக்கு அனுப்பிவிட்டார்.

சண்டை தொடங்கி முதற்தொகுதி காயக்காரர்களைப் பின்னணிக்கு நகர்த்திக் கொடுத்து விட்டு காவும்குழு மறுமுறை முன்னணிக்கு நகர்ந்தபோது நிர்மா அவர்களோடு இணைந்து கொண்டார்.

1993 இல் ஆனையிறவிலிருந்து யாழ்தேவி நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் விடுதலைப் புலிகளின் போர் அணிகளால் முறியடிக்கப்பட்டு, திருப்பி அனுப்பட்ட வழியெங்கும் படையினர் விதைத்துச் சென்ற கண்ணிகளை அகற்றும் பணியில் நிர்மாவின் அணியும் ஈடுபட்டது.

கண்ணிகளை அகற்றும்போது, வெடிக்காமல் விழுந்து கிடந்த எறிகணைகளையும் அகற்றினர். எறிகணைகளைக் கையாளுவது வேறு தனியான அணியினரின் வேலையாக இருந்தபோதும், அது மக்கள் வாழ்ந்த பகுதி என்பதால் திடீரென வருகின்ற மக்களுக்கு ஏற்படக்கூடிய விபத்துக்களைத் தவிர்க்க முயன்றார் நிர்மா. தன் அணியினரைக்கூட அனுமதிக்காது தானே எறிகணைகளை அகற்றினார்.

வேலைகளைப் பார்வையிட வந்த பொறுப்பாளர் நிர்மாவை மிகவும் கண்டித்து,

"வெடிக்காமல் கிடக்கும் எறிகணைகளை எடுக்க உங்களுக்கு அனுமதியே இல்லை"

என்று கடுமையாகச் சொல்லும் வரை நிர்மா எறிகணைகளையும் சேர்த்தே அகற்றினார். அதன் பின் எறிகணைகளருகே அடையாளத்துக்காகத் தடிகளைக் குத்தி விட்டு, எழுதுமட்டுவாளிலிருந்து கறுக்காய்



தமிழந தேசிய ஆவணச சுவடிகள்

www.tamilarangam.net



செந்தூரா நிலா

இப்படி இப்படியெல்லாம்
கண்ணிகளை விதைக்குமாறு
எமது தலைவர் திரு. வே.பிரபாகரன்
அவர்கள் தயாரித்த திட்டத்தை,
தனது அணியினரை வைத்துச்
செவ்வனே செய்து முடித்த நிர்மா,
எறிகணைகளாலேயே எப்போதும்
காயமடைகின்ற நிர்மா,
"எறிகணைக்கு என்மேல்
அவ்வளவு அக்கறை அதுதான்
தேடி வருகிறது!
என்று சிரிக்கின்ற நிர்மாவைத்தேடி
அந்த எறிகணை,
கடைசி எறிகணை வந்தது.

வரையான பகுதிக்குள் கண்ணிவெடிகளை அகற்றினார்.

ஆனால் அந்த வேலை முடிந்ததும் தானாகவே பொறுப்பாளரிடம் கேட்டு, வெடிக்காத எறிகணைகளை அகற்றும் பயிற்சியைப் பெற்றுக்கொண்டார். இதுதான் நிர்மா. தனக்குத் தெரியாது என்று எதையுமே விட்டு வைக்க எப்போதுமே அவர் விரும்பவில்லை.

இதன் பின் பூநகரிப் படைத்தளம் மீதான 'தவளை' நடவடிக்கையில் பங்கு கொண்டு, அங்கும் கண்ணிவெடிகளை அகற்றும் பணி செய்தார்.

இவரது பணியைப் பல களங்கள் வேண்டி நின்றன. சூரியக் கதிர் - 01 எதிர் நடவடிக்கைக் களமுனையில் கண்ணிகளை விதைக்கும் பணியை இவரின் அணி செய்தது. அது மிகவும் நெருக்கடி மிகுந்த களம். ஒவ்வொரு நாளும் களமுனை இடம் மாறிக் கொண்டேயிருக்கும். சண்டையின் நிலைமைக்கேற்ப, சண்டையணிகளின் நகர்வுக்கேற்ப நிலக்கண்ணிகளை விதைப்பதும், வரைபடத்தில் குறிப்பதும், அணிகள் இடம் மாறும்போது அகற்றுவதும், மறுபடி விதைப்பதுமாக மிகச் சிரமமான பணி அது. கண்ணிவெடி அணியினரின் கைகள் காய்த்து விட்டிருந்தன. இடர்கள் நிறைந்த சூரியக் கதிர் - 01 களமுனையில் நிர்மா காயமடைந்தார்.

காயம் ஆறிய பின் புதிய அணி ஒன்றுக்கு கண்ணிவெடிகள் பற்றிய பயிற்சிகளை வழங்கும் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கையில், சூரியக் கதிர் - 02 களம் நிர்மாவை அழைத்தது.

மூன்றாம் ஈழப்போரில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்திய ஓயாத அலைகள் - 01 முல்லை மீட்புச் சமர் மூலம் மீட்கப்பட்ட நிலப்பரப்பெங்கும் அங்குலம், அங்குலமாகத் தடவி ஆயிரம் ஆயிரம் கண்ணிகளை அகற்றி, பயமின்றி மக்கள் நடமாட வழிவகுத்த பெரும் பணியில் நிர்மாவின் பங்கு முக்கியமானது.

வெற்றி நிச்சயம் எதிர் நடவடிக்கைச் சமர்முனையில் கண்ணி வெடிப்பிரிவின் பகுதிப் பொறுப்பாளராகப் பணியாற்றிய கடினமான அந்த நாட்கள்...

ஓயாத அலைகள் - 02 கிளிநொச்சி மீட்பு நடவடிக்கையில் ஒரு வரையறுக்கப்பட்ட பகுதியின் கண்ணிவெடிப் பொறுப்பாளராகக் கடமையாற்றினார். எறிகணை வீச்சிலே தலையில் காயமடைந்தார்.

தொடர்ந்தும் எறிகணை வீச்சிலேயே நிர்மா காயமடைவதைத் தோழிகள் கேலி செய்தார்கள்.

"எறிகணைக்கு என்மேல் அத்தனை அக்கறை. அதுதான் தேடிவருகிறது."

என்று சிரித்தார் நிர்மா.

விடுதலைப் புலிகள் மகளிர் படையணியோடு இருந்த கண்ணிவெடி அணி, பின் மாலதி படையணியின் கண்ணிவெடிப் பிரிவாகி, பின் 1999.04. 28 இல் லெப்.கேணல் பொன்னம்மான் கண்ணிவெடி மகளிர் அணியாகப் புதுத்தோற்றம் பெற்றபோது நிர்மா அந்த அணியின் 2வது பொறுப்பாளராக எமது தலைவர் திரு.வே. பிரபாகரன் அவர்களால் நியமிக்கப்பட்டார்.

லெப்.கேணல் பொன்னம்மான் கண்ணிவெடி அணியை விரிவாக்கம் செய்யவென வந்திருந்த புதிய போராளிகளின் தொடக்க படையியற் பயிற்சியையும் மேலதிக சிறப்புப் பயிற்சியையும் நேரடிப் பொறுப்பெடுத்துச் செய்தார். இன்று களமெங்கும் பரந்து நிற்கும் கண்ணிவெடி மகளிர் அணியின் அத்திவாரம் சின்னச்சின்ன விடயங்களில் கூட கவனமெடுத்து நிர்மா போட்ட அத்திவாரமே.

பயிற்சி முடித்த புதிய அணி பணி செய்யப் புறப்பட்ட போது நிர்மா கண்ணிவெடி மகளிர் அணியின் நிர்வாகப் பொறுப்பாளராகப் பணி புரிந்தார்.

அலை மூன்றில் நாம் ஏறி, வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சிக்குள் படை நகர்த்தி எம் பலத்தை பகைவருக்கு உணர்த்திக் கொண்டிருந்த நாட்கள் அவை. களங்கள் அகல விரிந்திருந்தன. பளைப் பகுதியில் கண்ணிவெடி சார்ந்த வேலைகளுக்குப் பொறுப்பாக நிர்மா நின்றார். ஓயாத அலைகள் 01, 02, 03, 04 எல்லாவற்றிலுமே நிர்மாவின் பங்கு கணிசமாக இருந்தது.

நாங்கள் அமைதியாக இருந்தோம் பகைவரோ பரபரப்பாக இருந்தனர். ஒருதலைப்பட்ச போர் நிறுத்தத்தை நான்கு மாதங்கள் வரை பொறுமையாக நீடித்தோம். பகைவரோ போர் நிறுத்த மீறல்களிலேயே காலத்தை நீடித்தனர். போர் நிறுத்தம் முடிவுக்கு வந்த அந்த நாளில், பகைவரின் பெரும் எடுப்பிலான முன்னேற்ற நடவடிக்கையைத் தடுப்பதற்குத் தயாராக நாம் நின்றோம்.

அந்நிய நாட்டு நிபுணர்களின் ஆலோசனையோடும், அவர்கள் வழங்கிய ஆயுத, உபகரண உதவிகளோடும் சிறிலங்காப்படைத்தரப்பினர் ஆனையிறவில் சிங்கக் கொடி பறக்கவிடும் கனவோடு செய்த தீச்சுவாலை - 01 படை நடவடிக்கையை எமது பெரும் பலத்தால் மூன்றே நாளில் அணைத்தோம்.

படையினர் பலர் எறிகணைகளாலும் கண்ணிவெடிகளாலும் பெருமளவில் கொல்லப்பட்டதாகவும், காயமடைந்ததாகவும் படை அதிகாரிகள் தெரிவிக்கும் அளவுக்கு, களத்திலே நிர்மாவின் பங்கு பாரியது. இப்படி இப்படியெல்லாம் கண்ணிகளை விதைக்குமாறு எமது தலைவர் திரு. வே.பிரபாகரன் அவர்கள்

தயாரித்த திட்டத்தை, தனது அணியினரை வைத்துச் செவ்வனே செய்து முடித்த நிர்மா,

எறிகணைகளாலேயே எப்போதும் காயமடைகின்ற நிர்மா,

"எறிகணைக்கு என்மேல் அவ்வளவு அக்கறை அதுதான் தேடி வருகிறது!

என்று சிரிக்கின்ற நிர்மாவைத்தேடி அந்த எறிகணை, கடைசி எறிகணை வந்தது.

தீச்சுவாலை - 01 எதிர் நடவடிக்கை வெற்றிகரமாக முடிவடைந்து, அணிகள் மீளமைக்கப்பட்டு, எரிந்த வேலிகளும் சிதைந்த காப்பரண்களும் போராளிகளால் திருத்தப்பட்டுக் கொண்டிருந்த அந்த வேளையில் இந்தச் செய்தி வந்தது.

நிர்மா எங்களோடில்லை.

கிளி, சென்திரேசா மகளிர் கல்லூரி தனது பழைய மாணவியை ஒரு கூடைப்பந்தாட்ட வீராங்களையை இழந்தது.

இழப்புக்கள் எப்போதுமே துயரத்தைத் தருபவை. ஆனால் உலகத்தில் எந்த ஒரு நாடும் இரத்தம் சிந்தாமலும், ஈகங்கள் புரியாமலும் விடுதலை பெற்றதில்லை.

எமது தலைவர் அவர்கள் சொல்வது போல்

மாவீரர்களது அற்புதமான இலட்சியவாழ்க்கை - அவர்களது ஈகங்கள், அவர்கள் அனுபவித்த துன்ப துயரங்கள், ஏக்கங்கள், அவர்கள் கண்ட கனவுகள். இவை எல்லாவற்றினதும் ஒட்டுமொத்த வெளிப்பாடாகவே எமது போராட்ட வரலாறு முன்னேறிச் செல்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## தமிழ்க்கவி



நீங்கள் என்ன சொல்லுங்கோ இந்த மண் பிரச்சினை ஒரு நாளும் முடியப்போறதில்லை. புரிந்துணர்வு உடன்படிக்கை வந்தென்ன புடுங்கி அடுக்கிறதே.

"சிங்களவருக்கும் தமிழருக்குமிடையே இழுபட்ட பிரச்சினை ஒருபக்கம், இதைச்சாட்டி ஊரைவிட்டு வெளியால போனவை ஒருநாளும் திரும்பமாட்டினம் எண்ட நினைப்பில நிண்டவை வலு 'ஹொரந்தாயா' போனவையின்ர காணிவழிய ஆட்சி பிடித்திருக்கினம். ம்... ஊரைப் பிடிக்கிறான் ஆமியெண்டு ஆளைவிடெண்டு ஓடினாலும், பக்கத்து காணிக்காரன் ரெண்டடி தள்ளி வேலி போட்டுட்டா கோட்டுக்குப் போறசனம்"

"சும்மா விடு. எல்லாம் உடம்பில உயிரிருக்கும்தனைக்குந்தான்" கதைய அந்தளவில விட்டிட்டு வந்தாலும் ராசம்மாவுக்கு தன்ர ஊரில என்ன நடந்திருக்கோ எண்ட பயம் இருக்கத்தான் செய்தது.

"இஞ்ச வரியமொரு வீட்டில வாடைக்கிருந்து களைச்சுப் போனோம். ஏதோ கொழும்புப் பகுதி எண்ட நினைப்பில வீடுகளுக்கு முப்பது நாப்பதாயிரம் அட்வான்ஸ், அய்நூறு ஆயிரம் வாடகை சொல்லி வேலையில்லை. நாங்களும் புதுக்குடியிருப்புக்கு வந்தமே!" ராசம்மா சலிச்சுக் கொண்டே வீட்டவர பக்கத்துக் காணிக்க கல்லுப் பறிபடுது.

"ம்........... சீமெந்து காணாம சனம் எவ்வளவு கஸ்டப்பட்டு உந்தக் காசைக் கட்டிக்காத்து வச்சதுகள். வீடுகட்டப் போறாங்களாக்கும்" ராசம்மாவின்ர குணம் இது. ஆருங்கேக்கினமோ இல்லையோ, ஆரோடயோ கதைக்கிற மாதிரி தன்ர எண்ணத்தில வாறதெல்லாம் வாயால பொழிஞ்சுகொண்டிருப்பா. இந்தக்காணி அவவின்ர இடம்பெயர்வில் எட்டாவது வீடு. இதுக்கு முதல் இருந்த வீட்டில வீட்டுக் காறர் எழும்பச் சொல்லி நிக்க, ஒரு வீடு தேடி அலையலையெண்டு அலைஞ்சு எடுத்த வீடு இதை வீடெண்டு சொல்லுறதைவிட கூடெண்டு சொல்லலாம்.

ராசம்மாவுக்கு நாலுபணம் கையில இல்லையெண்டாலும், நாலு சனம் ஆதரவிருக்கு. மனிசி தேவையோ தேவையில்லையோ ஆற்ற விசயமெண்டாலும் அக்கறையாய்க் கேக்கவும் யோசினை சொல்லவும் முன்னிற்கும். அவ்வளவுதான் இப்ப இருக்கிற காணியில வீடு இல்லை. கூடு கட்டித்தான் இருக்கினம். காணிக்காரன் ஒரு பெரிய பணக்காரன். பிள்ளைகுட்டிகளை வெளிநாடுகளில விட்டுட்டு மனிசனும் மனிசியுமா தனிச்சிருக்கினம். ஆரும் நம்பிக்கையானவை காணிக்கை இருந்தா நல்லந்தானே எண்டுதான் ராசம்மாவை வீடுகட்டவிட்டவர். ராசம்மாவும் அதுக்குத் தகுந்தமாதிரி அந்தப் பயிர்பச்சையில்லாத காணியைப் பக்குவமாய்ப் பாக்கிறா.

சமையல்ல கையை வச்சிருந்தாலும் அடுத்த காணியில பறிபடுற கல்லும் மணலுந்தான் அவவின்ர கண்ணுக்க நிக்குது.

சந்தைக்கு போயிற்று வர காணிக்குள்ள ரெண்டு மூண்டு பேர் கோல்போட்டு அளக்கினம். குறுக்குப் பாடு நெடுக்குப்பாடெண்டு ஓடியோடி அளக்கிறாங்கள்.

ராசம்மாவுக்கு நல்லாவிடுவிடெண்டு தான் கிடக்கு, என்னேயிற? சொந்தக் காணியில்லையே வீட்டுக்காரன் இல்லாத இடத்தில்--------- காணிக்காறன் என்னண்டு ------

உப்பிடித்தான் ராசம்மாவின்ர



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொந்தக்காணியைப் பிடிச்சு பக்கத்துக் காணிக்காறன் வேலி போட்டிருக்கிறானாம். உந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் வந்தபிறகு போய்பார்த்த ராசம்மாவுக்கு வந்த கோவம் இப்படியப்பிடியில்லை.

அதெண்டாலும் பரவாயில்லை. வேலுப்பிள்ளையற்ற காணிக்க இப்ப ஒரு பம்பிடுசிங்கி கல்வீடு கட்டியிருக்கிறா. அந்தாள் பாவம் எங்கேயோ போனடத்தை கிணத்துக்க அடிச்சு வழுத்திப் போட்டாங்களாம். ஒரேயொரு பொடியன் அவனும் விடுதலைப் புலியளோட போட்டானாம்.

எங்கினயன் அலாதில காணிபிடிக்கத் திரியிறவையைக் கண்டா பொல்லாத கோவந்தான் வருது. ஊருலகத்தில நாடு நாடு எண்டு சண்டை பிடிக்க வெளிக்கிட்டவை பாடு குடியிருந்த நிலமும் போச்சு. இனி வல்லடி வழக்கடி எண்டு ஆருதரப் போகினியே. காணியெண்டா சும்மாவே, ராசம்மா புறுபுறுத்து தாளிச்சதும் எரிஞ்சு போச்சு.

என்னணை உங்க கருகி மணக்கிது.?

பொடியன்தான்............ வேலையால வரேக்கயே மூக்கை நீட்டி மணந்து கொண்டு வருது. "அதொண்டுமில்ல" எண்ட ராசம்மா, பொடியனுக்குத் தெரியுமோ தெரியாதோ எண்ட நினைப்பில

"எட பொடியா பக்கத்து வளவுக்காறர், ஏன்ரா இதுக்க வந்து காணியளக்கினம். தங்கடகாணியில வேலை செய்யிறதெண்டா இஞ்சயேன் அளக்கினம்" எண்டாள்.

பொடியன் விடாது, போய்க் கேக்கட்டும் எண்டுதான் ராசம்மா சொன்னது. அவன் அங்க பேசாமற் போறான். அதுகின்ரை குணமது ஒரு கதையும் பறையாது. எல்லாம் அமுசடக்கம்.

"சீமாம்பிள்ளையார் இந்தக் காணிக்கு கொப்பு நேரி வைக்கயுக்கயே உந்தப் பக்கத்துக் காணிக்காறன் பிரச்சினைதானாம். தான் ஓர்மமா நிண்டல்லோ எல்லை பிறிச்சதெண்டு சீமாம்பிள்ளையற்ற மனுசி சொன்னது." "சரியணை அதுக்கு இப்பேன் நீ கத்துறாய்.............."

"என்ன....? கத்துறனோ....?" ராசம்மாவுக்கு உண்மையா இறில் வந்திட்டுது. என்னதான் விடிஞ்சாப் பொழுதுபட்டா வாயோயாமப் பொரிஞ்சு தள்ளினாலும் "கத்துறாய்" எண்டாப் பொல்லாத கோவந்தான் வரும்.

ராசம்மாவுக்கு, பக்கத்துக் காணிக்காறன் மேல பாயேலாத ஆத்திரமெல்லாம் இஞ்சால பறியுது.

சீமாம்பிள்ளையற்ற மனிசியறிஞ்சா துலைஞ்சுது. பொல்லாத வாய்க்காற மனிசி. சும்மா எப்பிலதப்பில காணிபாக்க வரயுக்கயே ஊரெடுபடக் கத்திக் கொண்டுவரும்.

"எங்க வேலிக்கதியாலக் காணேல்ல, வெட்டிப் போட்ட கட்டையைக் காணேல்ல, ஆர் வேலி பிரிச்ச, உந்த வாய்க்கால மூடினா என்ன" எண்டு ஊருப்பட்ட கதை. வாயோயாது. இப்ப பக்கத்துக் காணிக்காறன் இவயட காணிய அளந்து பாத்ததெண்டு தெரிஞ்சா ஊர் நாறிப்போம்.

ராசம்மாவுக்கு எப்பிடியெண்டாலும் இந்த மண்பிடிக்கிற வெறியுள்ளவையை கிழிகிழியெண்டு கிழிப்பிக்க வேணும். எங்க ஆளாளுக்கு வீட்ட விட்டிட்டு வெளிக்கிட்டுப் போனா.... வீட்டில ஒருவரும் இல்லை எல்லாம் அலாதில கிடக்கு. ஒரு அச்சறிக்கையில்லாத வீடு. .

பிறகும் ஒரு நாலைஞ்சு நாள் கழிச்சுப் பாத்தா கச்சேரிக்காறரோட வந்து காணியளக்கினம். இவைக்கு சீமாம்பிள்ளையரப்பற்றித் தெரியேல்ல. ஆள் இண்டைக்கு நேற்றில்ல. பிரிட்டிஷ்காறன் காலத்திலயிருந்து சிறிலங்காகாறன்ர காலம்போய் தமிழீழக் கோடு வரைக்கும் "சிவில் லோ" வைக் கரைச்சுக் குடிச்சு காணி வழக்காடின மனிசன் சும்மாயில்லை.

கைத்தடிய ஊண்டிக்கொண்டு தொப்பையைத் தடவித்தடவி அந்தாள் நடக்கிறதும் ஒரு டாம்பிகம்தான். சும்மாவே உரப்பையில காசு நோட்டுக்களை கட்டுக்கட்டா வச்சு நெறுத்துத் தானாமே மோள்காறிக்கு சீதனங்குடுத்தது. அப்பேர்க்கொத்த கொம்பனோட பக்கத்துக் காணிக்காறன் மோதினா விளையாட்டோ! ஆள் உண்டு இல்லையெண்டு பண்ணிப்போடும். "அந்தநாளில திருக்கணாமலையால வந்த சனமாரோ இதுக்க வீட்டகட்டிப் போட்டுதுகளாம். ஒரு கதையில்லையாம். சீமாம்பிள்ளயற்ற மனிசி வந்து முழுச் சாமானுந் தூக்கியெறிஞ்சு கொட்டிலும் பிரிச்சுப்போட்டு போட்டுதாம்."

ராசம்மா மொலுமொலெண்டு ஆருக்கெண்டில்ல சொல்லிக் கொண்டே வேலை செய்யுது. சீமாம்பிள்ளையர் பொல்லாத மனிசன்தான். அந்தாளின்ர காணியள் எவ்வளவு எங்கயெங்கக் கிடக்கெண்டு அவற்ற மனிசிக்கே தெரியாதாம். மெய்யே, இந்தக் காணியள சிங்களவர் பிடிச்சுப் போடக்கூடாதெண்டு எத்தினை பிள்ளையள் போராட இவற்றை பிள்ளையளெல்லாம் வெளிநாடுகள்ள வசதியா இருக்குதுகளாம். அவா மனிசிக்காறி சொல்லுறா.

"அதுகளெங்க வாறது சும்மா சேத்து வைப்பம் எண்டு" பின்னை ராசம்மா ஏன் கிடந்து பொரியுது. சும்மா ஒரு பொழிப்புப் பாக்கத்தான்போல. இது நல்ல கதை அதென்ன பொழிப்பு? அதுகள் எங்கள நம்பித்தானே குடியிருக்க விட்டது. அப்ப நாங்கள் கவனமாகப் பாக்க வேண்டாமோ. எட இது ஒரு கடமையுணர்வுதான். ராசம்மா இருந்தாப்போல கிளிநொச்சி இருக்கிற மோளப்பாக்க போட்டா, ஒரு ரெண்டு மூண்டு நாள் மோளோடும் பேரப்பிள்ளையளோடும் நிண்டிட்டு ஆறுதலா வீட்டவந்தா...... வளவு மாறிப்போன மாதிரிக்கிடக்கு.

"ம்........... எட வளவுக்குள்ள ஒரு பாகம் பிடிச்சு கம்பிக்கட்டை போட்டிருக்கு. மனிசி ஏங்கிப்போச்சு. எட ஏதோ சும்மா சும்மா எண்டு பாக்க இவங்கள் உள்ளுக்க இவ்வளவும் பிடிச்சு வேலிபோடவோ............" மோன்காரன் வந்ததும் வராததுமா மனிசி துவங்கீற்று.

"எடபொடியா ஒரு நம்பிக்கைக்கு இருக்க விட்டா உதுகுமொரு வேலை யோடா? அந்தாள்ரெண்டு மூண்டு கட்டைக்கங்கால இருக்க அவங்கள் இந்தவேலை செய்திருக்காங்கள் போய் சொல்லிப்போட்டு வாடா. நாளைக்கு ஒரு நம்பிக்கைத் துரோகமாய்போயிடும்."

"சரியணை பேசாத இண்டைக்குத்தான் கட்டை போட்டவை."

நான் மறிக்க.............. இது என்ரகாணியே"

"என்னடா காணிக்காரன்வராம அடுத்த காணிக்காரன் வந்து கட்டை போட............ இக்கணம் அந்தாள் வந்து கிழிக்கப்போகுது. என்ன வில்லங்கம்மப்பா இது. உந்த வேலையைப் போட்டுட்டுப் போடாப்பா..........."

ராசம்மா அலுப்பாரிச்சதில் மோன்காறன் உடன வெளிக்கிட்டிட்டான். மகனை அனுப்பிய பிறகுதான் மனிசிக்கு நிம்மதி. ஆள் தானே போய்க் கொழுவுதோ, இல்லாடிப் பொலிசுக்குப் போகுதோ தெரியா, இல்லாட்டி........... வந்தெல்லாம் புடுங்கி எறியும் தாவும் சொல்லேலா. எப்பிடியோ ஒரு பெரிய சண்டையை எதிர்பாத்து, வலு உற்சாகமாகக் குந்தியிருக்கிறா. மகன் வரக் கொஞ்சம் பொழுதுபட்டுப் போச்சு. மனிசியும் அந்தவேலை இந்தவேலையெண்டு கொஞ்சம் அசந்து போச்சு இரவாகி கொஞ்ச நேரத்தாலதான் இருந்தாப்போல நினைவு வந்து "சீமாம்பிள்ளையரட்டப் போனநியே? எண்டு கேட்டா"

அவன் "ஓமண, அவரட்ட வந்து கேட்டவையாம் காணி கொஞ்சம் பிடிபட்டுப் போச்செண்டு...... தான்தானாம் சொன்னது அளந்தெடுக்கச் சொல்லி.... தன்ர காணியில கொஞ்சம் கூடத்தான் பிடிபட்டுப்போச்சாம். வேலி போடக்க தான் வந்தா மனவருத்தமா இருக்குமாமெண்டுதானாம் வரயில்ல...."

எட புரிந்துணர்வு உடன்படிக்கை, "ம்............. காலங் கலிபிரண்டு கத்தரிக்கா மூழ்பிரண்டுதாம்." ராசம்மா வாயில கையவச்சிட்டுது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிகரங்களைத் தொட்ட பின்னும் இன்றும் பெண்...

இரு மனங்கள் இணைந்து நடைபெறும் திருமணங்கள் மூலம் அமையப்பெறும் குடும்பங்கள் கணவன், மனைவி இருவராலுமே கொண்டு நடத்தப்பட வேண்டும். அங்கு எடுக்கப்படும் தீர்மானங்கள் அனைத்தும் புரிந்துணர்வின் அடிப்படையில் இருவராலும் மேற்கொள்ளப்படுவதாகவே அமைய வேண்டும். இருவரும் சமமே மதிக்கப்படவேண்டும்.


ஆணையே தலைவனாகக் கொண்டியங்கும் குடும்ப அமைப்பைக் கொண்டது எமது சமூகம். ஒரு வீட்டில் ஆணே சகலதையும் தீர்மானிப்பவனாகிறான். அவனே சகலதுமாகிறான். சிறு வயதிலிருந்து தனது தந்தையே உணவிலிருந்து எதையும் தீர்மானிப்பவனாக இருப்பதைப் பார்த்து வரும் ஒரு பெண், தன்னியல்பாகவே தீர்மானங்களுக்காக ஆணை எதிர்பார்க்கும் மனநிலைக்கு உள்ளாகிறாள். தந்தையும் பின்னர் தமையனும், பின்னர் கணவனும், பின்னர் தனயனும் கூட அவளுக்கான முடிவுகளை எடுக்க அப்பெண்ணும் அது தொடர்பான எவ்வித மறுப்புணர்வுமின்றி அவர்களின் ஆளுகைக்குள் உட்படுகின்றாள். தாமே சிந்தித்து சுயமே முடிவெடுக்கும் ஒரு சில பெண்கள் கூட ஆண் தன்மை கொண்டவர்களாகவே வர்ணிக்கப்படுகின்றனர்.

ஒரு வீட்டில் ஆணின் ஆதிக்கம் உணவு விடயத்தில் ஆரம்பமாகிறது. "என்னப்பா சமையல் செய்யிறது?" எனும் மனைவியின் அங்கீகாரத்துடன் இது ஆரம்பமாகும். ஒரு சில குடும்பங்களில் பிள்ளைகளின் விருப்பிற்கும் முக்கியத்துவம் கொடுத்தாலும் கணவனின் விருப்பு பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் அவை மேலதிகமாகவே அமையும். பிள்ளைகளில் கூட ஆண் பிள்ளைகளின் விருப்பிற்கே முக்கியத்துவம் கொடுக்கப்படும். வீட்டில் கணவனில்லாத சந்தர்ப்பங்களில் "அவரில்லைத்தானே இருக்கிறதைச் சாப்பிடுவோம்" என்ற முடிவு பெண்ணின் மனோபாவத்தைத் துல்லியமாகக் காட்டி நிற்கிறது.

மதியம் ஒரு மணிக்கு அரிசியில் நெல் பொறுக்கிக் கொண்டிருந்த பெண்ணொருவரிடம் "என்னன்ரி இப்ப நெல்பொறுக்கி எப்ப சமைச்சுச் சாப்பாடு கொடுக்கப் போகிறீர்கள்" என்று கேட்ட போது "தம்பி இரண்டு மணிக்கு வந்திடுவான். அதுக்கிடையிலே நான் சமைச்சிடுவேன்" என்ற பதிலில் வீட்டிலிருந்த மகள் கருத்திலெடுக்கப்படவில்லை என்பது புரிந்தது. அந்தத் தம்பி எத்தனை வயதுடையவனாக இருந்தபோதும் அவனது பசியே கருத்தில் கொள்ளப்படுவது வேதனையான உண்மை.

மாதம் மாதம் இயற்கையான குருதியிழப்பிற்குள்ளாகும் இளம் பெண் எதிர்காலத்தில் தாயாகவும் பொறுப்புக்களைச் சுமப்பதற்கும் பிள்ளைப்பேறு மூலம் ஏற்படும் குருதி இழப்பு, உடற்பல இழப்பு என்பவற்றை ஈடுசெய்யவும் அவள் சிறந்த உடல் நலம் உள்ளவளாகப் போசிக்கப்பட வேண்டும் என்பதைப் பெரும்பாலான தாய்மார் உணரத் தலைப்படவில்லை. தனது தாய், தனது தந்தையினதும், தமையனினதும், தம்பியினதும் உணவு தொடர்பான விருப்பு வெறுப்புகளுக்கு முன்னுரிமை கொடுப்பதையும் வீட்டிலுள்ள ஆண்களே முதலில் உண்ண வேண்டும் எனும் எழுதப்படாத சட்டம் ஒன்று பேணப்படுவதையும் சிறு வயதிலிருந்தே அறிந்து வரும் பெண் அவ்வழியிலேயே தானும் செயற்படுவாள்.

கணவனே முதலில் உண்ண வேண்டும். அவனுக்கே சிறந்தது அனைத்தும் படைக்க வேண்டும் எனும் பெண்ணின் மனப்போக்கும், வீட்டில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ன இருக்கிறது இல்லை என அறியாமலேயே தான் உணவருந்திவிட்டுச் செல்லும் கணவனின் மனப்போக்கும் மாற்றப்பட வேண்டும். சேர்ந்திருந்து இருப்பதைப் பகிர்ந்துண்ணும் பழக்கம் பெரும்பாலான நமது குடும்பங்களில் இல்லாதிருப்பதும் இம்மனப்போக்கிற்கு ஒரு காரணமே.

உடை என்பதும் பெரும்பாலான பெண்களின் மீது திணிக்கப்பட்ட ஆணின் தீர்மானமாகவே காணப்படுகிறது. தனது உடல்நிலை, மனநிலைக்கேற்ப தான் எவ்வாறு உடையணிய வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை அவளுக்கு மறுக்கப்படுகிறது. பெரும்பாலும் கணவனும் சிலவேளைகளில் சகோதரர்களுமே அதைத் தீர்மானிப்பவர்களாக இருக்கிறார்கள். "அண்ணாவுக்குப் பிடிக்காது, அவருக்குப் பிடிக்காது" என்ற வாசகங்களின் பின் தமது ஆற்றாமையை மறைத்துக் கொண்டு உலாவருகிறார்கள் பல பெண்கள். அவ்வாற்றாமை இயலாமையாக, பொறாமையாக, ஏக்கமாகப் பல பெண்களில் உருவெடுப்பதையும் அவதானிக்கலாம். "பொம்பிளை இப்படித்தான் இருக்க வேண்டும்" எனும் பண்பாட்டுக்கோலம் ஒன்றை வரைந்து உடும்புப்பபிடியாக பற்றிக் கொண்டிருக்கும் ஆணின் விருப்பிற்கேற்ப, தனது இயல்பு நிலைக்கு மாறாக, "இவருக்கு நான் இப்பிடி உடுப்புப் போடுவதுதான் விருப்பம். இவருக்கு நான் இப்படி பொட்டு வைக்கிறதுதான் விருப்பம்" என்று பெருமையாக வெளியில் கூறிக் கொள்ளும் பெண்களின் உள்மன ஏக்கங்கள் ஆழங்காணமுடியாதவை. தனது கணவனைத் திருப்திப்படுத்துவதற்கான இவ்வியல்பான ஆர்வத்தை ஆண்கள் மேலும் துஷ்பிரயோகம் செய்து மேலும் தமது திணிப்பை மேற்கொள்கின்றனர். தான் ஆசைப்பட்டதை நிறைவேற்ற முடியாத பெண். தன் இயல்பு நிலைக்கேற்ப வாழமுற்படும் இன்னொரு பெண்ணை "பொம்பிளை இப்பிடித்தான் நடக்கிறது" என விமர்சிக்க முற்படுவது அவளின் ஆதங்கத்தின் இயலாமையின், ஏக்கத்தின் வெளிப்பாடு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தனது உடல்நலக் குறைபாடுகளுக்கான சிகிச்சைக்குக் கூட ஒரு பெண் முடிவெடுக்கத் தயங்கி கணவனது அல்லது மகனது முடிவுக்காகக் காத்திருக்கும் சந்தர்ப்பங்கள் பல உண்டு.

"கர்ப்பப்பை இறக்கம்" எனும் உடல்நலக்குறைபாட்டுடன் வந்த இருபெண்கள் கூறிய வார்த்தைகள் என்னை வேதனைப்பட வைத்தன. அப்



பெண்கள் இருவருமே நடுத்தர வயதைத் தாண்டியவர்கள். இருவருமே இவ் உடல்நலக் குறைபாட்டினால் பல உடல் உபாதைகளை அனுபவிப்பவர்கள். உடன் தீர்க்கப்படவேண்டிய அல் வுபாதைகளுக்காகவே மருத்துவரை நாடிவந்திருந்தார்கள். மேற்கொள்ளப்படக்கூடிய ஒரேயொரு இலகுவான சிகிச்சை முறையை வைத்தியர் கூறியபோது இருவரது தயக்கமும் பதிலும் திகைப்பையே அளித்தது. ஒரு பெண் "இவரைக் கேட்கவேணும். பேசுவாரா" என்றார். அடுத்த பெண் - "மகன் வவுனியா போட்டார். வந்த பிறகு கதைச்சிட்டுத்தான் சொல்லுவன்" என்றார். ஆணின் முடிவுகளுக்காகக் காத்திருப்பதில் ஏற்படும் விளைவுகள் உயர்த்தப்பட்டபோதும் கூட அவர்களின் தயக்கம் ஒன்றையே உணர்த்தியது. இதுவரை காலமும் தங்களுக்கான எந்த முடிவையும் தீர்மானித்து அப்பெண்களுக்குப் பழக்கமில்லையென்பதே.

கணவன் மனைவி இருவராலுமே இணைந்து தீர்மானிக்கப்பட வேண்டிய குழந்தைப்பேறு கூட ஏதேச்சதிகாரமாய் ஆணாலேயே தீர்மானிக்கப்படுவதே உண்மை. பல உடல்நலக்குறைபாடுகள் உபாதைகளும், சிரமங்களுமாய் பத்துமாதம் சுமப்பவளும், வலி, வேதனை, கருதியிழப்பு எனப் பிரசவத்தில் நொந்து போபவளும், இரவிரவாய் கண்விழித்து குழந்தையை வளர்ப்பவளும் பெண்ணாய் இருக்க, பிள்ளைகளைத் தீர்மானிப்பது மட்டும் ஆணின் கையில் இருக்கிறது. இதயமும் நுரையீரலும் எப்படி அவளுக்காகச் செயற்படுகின்றனவோ, அதே போன்ற உறுப்பான கர்ப்பப்பைக்கு மட்டும் அவளுக்காகச் செயற்படும் உரிமையில்லை. அவளது கருவறையின் பொறுப்பாளனாகக் கணவனே உள்ளான். பல பிள்ளைகளைப் பெற்றுக் களைத்து, நிரந்தரமாக கருத்தடை செய்ய ஆர்வத்துடன் விபரம் கேட்கும் பெண், "அவருக்கு விருப்பமில்லை" என முகத்தை தொங்கப்போட்டவாறே கூறும் சம்பவங்கள் பல.

அவருக்காகவே வாழ்ந்து வெளியிட முடியாப் பல ஏக்கங்களுடனேயே இறந்து போகும் பெண்கள் தங்களுக்காகவும் சிறிது வாழ முற்பட்டால் என்ன? தனக்காகவும் உண்டு, தனக்காகவும் உயிர் வாழ்ந்து, தனக்காகவும் சிந்தித்து பெண் வாழப்போவது எப்போது?

தந்தையும் கணவனும் தமையனும் தனையனும் தனக்காகச் சிந்திப்பதும் தன்னை கீழானவளாக மதிப்பதுமே இயல்பு என்ற நிலையில் வாழும் பெண்ணைத் தட்டியெழுப்பி "விழி! எழு! இதோ பார்! ஒரு ஆணைப்போன்றே நீயும் ஆறறிவு படைத்தவள், சிந்திக்கும் திறன்மிக்கவள், ஆணைவிடவும் பெண்ணே சிந்திக்கும், முடிவெடுக்கும் ஆற்றல்மிக்கவள்" என்று கூறி அவளை அவள் கூட்டிலிருந்து வெளிக்கொணர்தல் ஒரு தலையாய பணியே!

கு.தீபா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அன்பு

தீபா குமரேஸ்

நெடியதொரு பயங்கரக்கனவு போன்று இரவுகள் கனத்தன. இருட்டு மூலைகளிலிருந்து விநோத உருவங்கள் நடை முளை கொண்டு நடந்து வருவது போன்ற பிரமை. ஆம் பிரமையேதான். இல்லாவிடில் இத்தனை ஆண்டுகள் கழிந்த பின்னும் இன்னும் உயிரோடிருக்கிறோமே.

இறுக அடைத்த கதவுகள் யன்னல்கள் வீட்டினுள் ஒரு வித இறுக்கத்தைப் புழுக்கத்தைத் தோற்றுவித்திருந்தது. மகங்களும் புழுங்கிக்கொண்டுதானிருந்தன.

யாருமேயில்லாதது போன்ற வெறுமை வீட்டினுள் நிலவினாலும் ஆட்கள் இருக்கத்தான் செய்தார்கள். முன் விறாந்தையிலிருந்த ஈசிசெயரில் அப்பா சாய்ந்து கிடந்தார். அவர் வாசித்த டால்ஸ்டாயின் 'போரும் சமாதானமும்' புத்தகம் கீழே கிடந்தது. அடையாளம் வைத்துப் புத்தகத்தை மூடுவதே அவர் வழமை. இன்றோ... வழமைக்கு மாறாகப் பக்கங்கள் நிலத்தில் படப் புத்தகம் கவிழ்ந்து கிடந்தது. நடுவிறாந்தையிலிருந்த கட்டிலில் அம்மம்மா முடங்கிக் கொண்டு அடிக்கடி பெருமூச்சுவிட்டபடி கிடந்தாள், சமையலறைக் கதவுடன் சாய்ந்தவாறு இருந்த அம்மா, அடிக்கடி சட்டைக்கையில் கண்ணைத் துடைத்துக் கொண்டிருந்தாள். அழுகிறாள் போல.... தம்பியின்.... அறைவிளக்கு வெளிச்சத்தில் கதிரையில் அவனிருப்பது சுவரில் நிழலாக விழுந்தது. கைகளிரண்டும் நாடியைத் தாங்கியவாறு இருப்பது தெரிந்தது. அவன் வெறுமனே எதுவும் செய்யாமல் உட்கார்ந்திருந்தான்.

முகங்களில் அப்பிக்கிடந்தது இருளா சோகமா எனத் தெரியாதவாறு... எல்லோர் முகங்களும் இருண்டு கிடந்தன.

எதுவுமே பேசாமல்.... எதுவுமே பேசப்பிடிக்காமல்... எது பேசினாலும் அழுது விடுவோமோ எனப்பயந்த... வாய்கள் இறுகமூடியிருந்தன. மனங்கள் மட்டும் புழுங்கி அவிந்து மூடிய உலையாய்த் தகித்துக் கொண்டிருந்தன.

கடந்த ஐந்து வருடங்களாகவே இரவுகள் பயம் தருவனவாய், எப்பொழுது விடியும் என்று ஏக்கந்தருவனவாய் இருந்தன. கூரை ஓட்டிலோ படலைத்தகரத்திலோ இருந்து எழும் சிறு அசைவும் ஒலியும் பேரிடியாய்.... பேரிரைச்சலாய்... மனங்களை அதிரவைத்தது.

மனங்களும் முகங்களும் பூரித்துப் பொலிந்து புன்னகை பூத்திருந்த விரவிக்கிடந்த அமையும் காற்றின்றி அசையாத மரங்களும், வெய்யில் தகித்த புல்வெளிகளும் கூட வசந்தம் பேசிய அந்த இனிய ஐந்து வருடங்களும் கனவே போற் சென்று முடிந்தபின் வந்த இந்த இருண்ட இலையுதிர் காலத்தில் எமக்கு உற்ற துணையாயிருந்தவன் அன்புதான்.

மற்றும் எந்த இரவைவிடவும் இன்றைய இரவு கனத்துப் போய்க் கிடந்தது. காரணம், அன்புவின் இறப்பு. இன்னும் சூடு அடங்காத அன்புவின் உடல் முன் விறாந்தையில்...





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அது தந்த மனத்துயரமும் பழைய நினைவுகளுமாய் நாங்கள்... முடங்கிப் போய்க் கிடந்தோம்.

யாரிந்த அன்பு? அன்பு யாரென்று யார் கேட்டாலும் நாங்கள் மௌனிப்பது வழக்கம். அன்பு எங்களில் ஒருவனாய், எம்மூரில் ஒருவனாய்... தெரு வழியே போகும் போராளிகளின் உற்ற நண்பனாய் அன்பு, தன் பெயரைப் போலவே அன்புருவாயிருந்தான்.

பருவ காலங்கள் மாறிமாறி வருவது போன்றிருந்தது. எங்கள் வாழ்க்கை.... துக்கமும் பயமும் விரவிக்கிடந்து முள்ளந்தண்டில் குளிர் பரப்பிய இலையுதிர் காலமும், பல்நிறவண்ணத்துப் பூச்சிகள் கலகலத்து சிறகடித்துப் பறக்க சுதந்திரக் காற்றும் மகிழ்ச்சியும் பொலிந்து கிடந்த வசந்த காலமுமாய் காலங்கள் மாறி மாறி வாழ்க்கையைப் பந்தாடின. "ஏன் வந்தாய்!" என சலிப்புற்று விரட்ட வைத்தன இலையுதிர் காலத்து இரவுகள். இரவுகளில் மரணங்கள் மலிந்து போயின. ஓலங்கள் சூழ்ந்தன. அதிகாலையில் மீந்திருக்கும் இரவின் இருள் முகங்களில் அப்பிக்கொள்ளும், கால்கள் தெருவில் இறங்கத் தயங்கும்.

இலையுதிர் காலப் பகல்களோ "எப்பொழுது வருவாய்?" என ஏங்க வைக்கும். இரவு மிச்சம் வைக்கும் பயங்கரங்கள் வீதியோரங்களில் கிடந்த போதும் கூட பகல் நம்பிக்கையூட்டியது. இரவுகள் ஒளியூட்டப்படும் எனும் நம்பிக்கையுரம் பகலிலேயே போடப்பட்டது.

இத்தகைய இலையுதிர் காலப் பகல்களிலும் இரவுகளிலும் அன்பு நம்பிக்கையின் அடையாளமாய் இருந்தான். படிப்படியாக அன்பு ஆட்களை இனங்காணத் தொடங்கினான். எதிரிகளெவர் நண்பர்களெவர் என அவனுக்குத் துல்லியமாகத் தெரிந்தது. அவர்களை எங்களுக்கு இனங்காட்ட விசேட ஒலிகளை அவன் கற்றுக் கொண்டான். வந்து போகும் போராளிகள் அவனுக்குப் பழக்கமானவர்களாயினர். அன்றுதான் ஒரு புது போராளி வந்தால்க் கூட அவரை தொடங்கியது எங்களுக்குப் பெரிய ஆச்சரியம். அது அவனை இனங்காண வைத்தது. காய்ந்த தலை புதர்மண்டிய முகங்கள், மெலிதாய் வரும் வெடிமருந்தின் மணம் அவர்களிடமிருந்து வெளிப்பட்டுப் பிரபஞ்சமெங்கும் பரவும் அன்பின் பலமிக்க எண்ணங்களின் அலை, எதை அன்பு இனங்கண்டான் என்பதை பேசத் தெரிந்திருந்தால் அவன் சொல்லியிருக்கக்கூடும்.

ஒரு இலையுதிர் காலத்தின் போது... காலம் கெட்டுக்கிடந்தது. எங்கள் இளைஞர்களே சிலர் எங்களுக்கு எதிரியாய் இருந்தார்களாம். இரவுகளில் திடீரென்று தோன்றி வீட்டிலுள்ள ஆணை வெளியே இழுத்துச் சென்று விடுவார்களாம். வீட்டிலிருந்து கதைக்கவென அழைத்துச் செல்லப்பட்ட அவர் தெருவில் பிணமாய் கிடப்பதை அதிகாலையில் எழும் ஓலம் ஊருக்குத் தெரிவிக்கும். அன்று அம்மா பள்ளிக்கூடம் போக விடமாட்டாள். எல்லோர் முகங்களிலும் சோகம் அப்பிக்கிடக்கும் பகலில் கூட வீட்டின் மூலைகள் பயம் தாங்கிநிற்கும்.

அந்த சோகமும் மௌனமும் பயமும் அன்புக்கு எதையோ உணர்த்தியிருக்கக்கூடும். ஏனெனில் அதன் பின்னர் நிசப்தமான இரவுகளில் ஊருக்குள் அந்த முகமூடி இளைஞர்கள் நுழைந்த போதெல்லாம் அன்பு மெதுவாக அழத் தொடங்குவான். படிப்படியாக அது ஓலமாகும். தெருவிற்கு ஓடி ஏதோ ஒரு திசையை உணர்ந்து அத்திசை நோக்கி நின்று ஓலமிட்டு ஓலமிட்டுக் களைத்து அவன் அனுங்கி அனுங்கிப் படுப்பான். மௌனமாகும் போதும் அவன் கண்களிலிருந்து நீர் வழியும். இத்தகைய இரவுகள் அதிகரிக்க அதிகரிக்க நாங்கள் இரவுகளை வெறுக்கத் தொடங்கினோம்.

இனிதே விடிந்த அன்றொரு நாளில் துப்பாக்கி முகவுரைகளோடும் இனிய முகமலர்ந்த நன்றியுரைகளோடும் கொடூர இரவுகள் சென்றொழிந்தன.

அமைதி காக்கவென அவர்கள் வந்தபோது அன்பு எங்களுக்குப் பெருந்துணையாகிப் போனான். தூரத்திலிருந்தே வந்து முகத்தில் மோதி அருவருப்பையும் அச்சத்தையம் தரும் கடலை எண்ணெயின் வாசனை எங்கள் மூக்குகளுக்கு இசைவாகிப் போனதாலோ என்னவோ காலஞ் செல்லச்செல்ல அவற்றை எங்களால் உணர முடியாமற் போனது. அந்த வாசனை வருவதை உணர்ந்தே ஒளிக்க வேண்டியவற்றை ஒளித்தும் அனுப்பி வைக்க வேண்டியவர்களைப் பாதுகாப்பாக அனுப்பியும் செயற்பட்டுக் கொண்டிருந்த எங்களுக்கு இது சிக்கலாகிப் போனதுணர்ந்து அன்பு கைகொடுத்தான். அன்புவின் எச்சரிக்கைக் குரலுணர்ந்து துரிதகதியில் செயற்பட்டும் பத்து நிமிடங்கள் கழிந்த பின்னரே அவர்கள் வருவார்கள்.

அமைதி போர்த்த அவர்கள் முகங்களின் பின்னே மறைந்து கிடந்த அவர்கள் வெறிக்கு எங்கள் இளம் பெண்கள் பலியாகத் தொடங்கியது அப்போதுதான்... இரவோ.... பகலோ..... எங்கிருந்தோ எழும், ஒரு பெண்ணின் "ஐயோ!... அம்மா...." என்ற கதறலில் நாங்கள் உடல் விறைத்து நிமிரும் போது அன்புவும் உடல் விறைப்பான். பின்னர் இத்தகைய சம்பவங்கள் எங்களூரில் நடை "பெறாமற்போனதற்கு அன்பும் ஒரு காரணம். பகல்களில் "அவர்கள் வருகிறார்கள்" என்பது போல் அவன் எழுப்பும் ஒலி கேட்டு இளம் பெண்கள் கோயில்களை நோக்கியோடி மக்கள் கூட்டத்துடன் சேர்ந்திருந்து தம்மை மறைத்துக் கொள்வார்கள். இரவுகளிலோ அவனின் குரல்கேட்டு வளவளவாகப் பாய்ந்துசென்று இருண்ட தோட்டத்து மூலைக் குடிசையில் ஒதுங்கிக் கொள்வார்கள்.

திரௌபதி மானத்தைக் காத்ததாகக் கூறப்படும் கிருஷ்ணன் உண்மையிலேயே இருந்திருந்தால் எங்கள் அன்பு போலவே இருந்திருக்கக் கூடும். அவன் போலவே அன்பும் எம்மூர்ப்பெண்களின் நேசத்திற்குரியவனானான்.

அன்பு போராளிகளின் நேசிப்புக்குரியவனானான் இரவுகளில் எங்கோ தொலைவில் ஒரு வெடிச்சத்தமோ குண்டுச் சத்தமோ கேட்கும் அம்மா மௌனமாக எழுந்து குசினிக்குள் போய் அடுப்பை மூட்டுவாள். அதுவே தனக்கு சமிக்ஞை போல விறைத்து நிமிர்ந்த காதுகளுடன் அன்பு வேலியோரம் போவான். அங்கும் இங்கும் பார்த்தபடி நிற்பான். படலையில் என்ன சத்தம் கேட்டாலும் திடுக்கிடும் எங்களுக்கு இந்த வேளைகளில் வரும் அன்புவின் குழைந்த மெல்லிய அன்புக் குரலுடன் வரும் படலைச் சத்தம் மகிழ்ச்சியையே தரும். வாசற்படிவரை அவர்களோடு மெய்ப்பாதுகாவலனாய் வந்துவிட்டு மீண்டும் பேசாமல் படலையோடு அன்பு நிற்பான்.

சில வேளைகள் அச்சமும் பரபரப்புமாய் அன்பு ஒலியெழுப்புவது எங்களுக்குள்ளும் அச்சத்தையும் பரபரப்பையும் தரும். அப்பா வெளியில் சென்று அன்பு பார்க்கும் திசையைப் பார்ப்பார். அதன்பின்தான் போராளிகள் எத்திசையால் செல்வதென்பது தீர்மானிக்கப்படும். அந்த வேளைகளில் அன்பு ஒருதிசையறிகருவியாய் செயற்படுவான்.

அமைதிப் போர்வை போர்த்வர்கள் எங்கள் வீட்டில் சந்தேகங் கொண்டு திடீர்திடீரெனத் தேடுதல் நடத்தி ஏமாற்றம் கண்ட போதெல்லாம் அவர்களின் ஆத்திரம் அன்புவின் முதுகில் துப்பாக்கியடியால் விடியும். அன்பு அலறவே மாட்டான். அந்த நேரங்களில் அவனும் ஒரு தியாகியாய்.....

அதிகாலைச் சுற்றி வளைப்புகளில் அன்பு அதிக பரபரப்புடன் காணப்படுவான். அனைத்து வேலியோரமும் சுற்றிச்சுற்றி ஓடியோடிக்கத்துவான். வீட்டுக்குள் ஓடிவருவான். மீண்டும் உள்ளே வந்து அறைகளை எட்டிப்பார்ப்பான் வீட்டின்பின் வளவினூடு பற்றைகளைத் தாண்டியோடி யாரையோ எச்சரிக்கை செய்துவிட்டு மீண்டும் ஓடிவருவான். அவனது குரலடங்கி அவன் அமைதியாகும் கணம் தான் அவர்கள் வரும் கணம். அதுவரை எங்கள் ஒளிப்பு மறைப்பை ஊக்குவிக்கக் கத்திக் கொண்டேயிருப்பான்.

மீண்டும் இனிதொருகாலைப் பொழுதில் அவர்கள் அனைவரும் கப்பலேறிச் சென்றொழிந்த போது, வீட்டிற்கு வந்த வாகனங்கள் அனைத்தையும் சுற்றிச்சுற்றி வந்து தடவி முகர்ந்தே அவன் களைத்த போது, புன்னகை பொலிந்த எங்கள் முகங்களில் மேலும் சிரிப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அன்பு

அப்போராளிகளின் மடியும் தோளும் அவன் குடியிருப்பாகிப் போனது.

இனிமையும் அமைதியும் கலந்த இவ் வசந்த கால வருடங்கள் கழிந்த பின் செல்மழை பொழிந்தவாறே இராணுவம் ஊரினுள் நுழைந்த இரண்டாவது இலையுதிர் காலத்தின் போது, ஊரோடு ஊராக இரவோடு இரவாக மக்களெல்லாம் வெளியேறினார்கள். அந்த இரவு மிகமிக நீண்டதாய் கொடியதாய்... கன்னங்களில் வழிந்த கண்ணீர், மழைத் தண்ணீரோடு கலந்து வெளியேறியது யாரறிவர்? கார்முகிலும் கனத்த சோகமும் இரவும் தந்த இருட்டில் எங்கள் முகவரிகளை நாங்கள் தொலைத்தோம்.

மரங்களின் கோயில் மண்டபங்களின் கீழும் கூரையைத்தேடி ஒதுங்கிய மக்களின் பயணம் தென்மராட்சியூடு தொடர்ந்த போது, கொட்டு மழையே கூரையாகிப் போனதே பலருக்கு இப்பயணம் வன்னியில்தான் முடிவுற்றது. வன்னி செல்ல எங்கள் மனங்கள் முனைந்து நின்றன. அன்புவோ வன்னி செல்வோர் முகங்களையே ஏக்கந் ததும்பப் பார்த்தபடி நிற்பான். நோயுற்ற அப்பப்பாவைக் கொண்டு செல்ல முடியாது தென்மராட்சியில் தங்கிய போது அதிகம் துன்பப்பட்டவன் அன்புதான். அவனது உற்ற தோழர்களையெல்லாம் நாங்கள் பிரிய நேரிட்டது.

முன்பொரு காலம் மாட்டுக் கொட்டிலாகக் கிடந்த அக்குடிலை தெரிந்தவரொருவர் தங்குவதற்காக தந்த போது, நாங்கள் ஆறுதலாக மூச்சுவிட்டோம். ஏனெனில் நான்கு புறமும் திறந்திருந்த அக் கொட்டிலுக்கு மேலே கூரையிருந்தது. மழையும் குளிரும் கூதல்காற்றும் அப்பப்பாவை மேலும் துன்புறுத்திய போது குளிரில் விறைத்த அவர் பாதங்களில் அன்பு ஏறிக்கிடப்பான். பாதங்களுக்கு சூடேற்றுவான். வீட்டை ஊரை உறவை பிரிந்த சோகம் அவன் முகத்திலும் உறைந்து கிடந்தது.

வன்னி செல்வதா? யாழ் செல்வதா? என நீண்ட மனப் போராட்டம் எங்களுக்குள் இடம்பெற்றபோது அன்பு வன்னி செல்வதிலேயே உறுதியாயிருந்தான். வன்னி செல்லும் மக்கள் கூட்டத்தை நோக்கி எங்களை இழுப்பான். அப்பப்பாவைக் கொண்டு செல்லவோ விட்டுவிட்டுச் செல்லவோ முடியாதென்பதை உணர்ந்து வீடு செல்ல நாங்கள் முடிவெடுத்தபோது அன்பு அழுத அழுகை.... இம்முறை அன்புவின் உள்ளுணர்விற்கெதிராக நாங்கள் முடிவெடுத்துக் கொண்டோம்.

மீண்டும் வீட்டுக்குச் சென்றபோது, வாசற்படியே அன்புவின் வாசஸ்தலமானது. அவன் கண்களில் எச்சரிக்கை, எதையோ இழந்த ஏக்கம் யாரையோ எதிர்பார்த்துக் காத்திருக்கும் தவிப்பு. இரவுகள் மீண்டும் கொடியதாய், நெடியதாய் ஆயின உணவும் தூக்கமும் குறைந்து அன்புவின் செயற்றிறன் குறையத் தொடங்கியது. சற்று முன்னர் அனைத்தும் அடங்கி ஏக்கங்கலந்த விழிகளைத் திறந்தபடியே அவன் உயிரடங்கிய போது.....

"யார் இந்த அன்பு" என்று யாரும்கேட்டால் நாங்கள் மௌனிப்பது வழக்கம். ஏனெனில் அன்புவை நாயென்று சொல்ல எங்களில் யாருக்குமே பிடிக்காது. "உந்த நாயைப் பிடி தம்பி" என்று சொன்ன கந்தசாமி அண்ணையுடன் தம்பி பிடித்த சண்டையை வேடிக்கை பார்த்த ஊர் மறந்தும் கூட அன்புவை நாயென்றதில்லை.

அன்பு எங்கள் வீட்டிற்கு வந்த முதல் நாள் இன்றும் நினைத்தவுடன் என் கண் முன் வரும். தெருவழியே போன சொறி நாயைப் பிடித்துத் தரும்படி மூன்று வயதுத் தம்பி அடம் பிடித்து அழ, அம்மா அப்பாவை அதட்டினாள்.

"போங்கோ, ஓடுங்கோ அவன் மூச்சடங்கியெல்லே அழுகிறான். அங்கை துரையண்ணை வீட்டு நாய் ஒரு மாதத்துக்கு முதல் குட்டி போட்டதாம்" ஒரு குட்டியை வேண்டிக் கொண்டு வாங்கோ, என விரட்டினாள். "இவவோடை பெரிய கரைச்சல்" எனப் புறுபுறுத்தபடியே ஓய்வுநாள் அலுப்புடன் கிடந்த அப்பா சைக்கிளைத் தூக்கிக் கொண்டு போனார்.

எனக்குள் பரபரப்பும் பயங்களும் போட்டி போட்டன. "உது தம்பிக்கென்றால் என்னை விளையாட விடுவானோ? என்னைத் தொடவிடுவானோ? உவருக்குப் பெரிசா என்ன தெரியும்? குளிக்க வார்ப்பாரே? சாப்பாடு வைப்பாரே? நான் தான் எல்லாம் செய்ய வேணும் என்ற நினைவு நாய் எனக்குத்தான் என்ற பலத்தைத் தந்ததும் என்ன பெயர் வைக்கலாம்? என நான் யோசித்ததும் இன்றும் நன்றாய் நினைவிருக்கிறது.

"மூன்று வீடு தள்ளியிருக்கிற அன்புச் செல்வனை எனக்குப் பிடிக்காது. நாங்கள் எல்லோரும் ஸ்கூலுக்கு ஒன்றாத்தான் போறநாங்கள். போகேக்கையும் வரேக்கையும் தலையிலை குட்டுவான். 'எலிவால்' என்று சொல்லி என் தலைமயிரைப் பிடிச்சு இழுப்பான். அவனைக் கொல்ல வேணும்போல எனக்கு ஆத்திரம் வரும். ஆனா என்ரை வயநென்றாலும் அவன் குண்டன். அவனை ஒன்றும் செய்ய ஏலாது. அவனைப் பழிவாங்க ஒரேவழி, நாய்குட்டிக்கு 'அன்பு' என்றுதான் பெயர் வைக்கிறது" என்று பல எண்ணங்கள் என் சின்ன மனதில் ஓடின. ஆனால் வெறும் நாயென்று நினைத்த போது அன்புச் செல்வனை பழிவாங்கவென்று 'அன்பு' எனப்பெயர் வைத்த நான் சிந்திக்க ஆரம்பித்து அம்முரண்பாடும் உறுத்தத் தொடங்கிய போது, அன்பு எங்களில் ஒருவனாகியிருந்தான். அதே அன்பு அன்புச் செல்வனின் மேலும் ஏற்பட்டு அவன் என் பிரிய நிநேகிதனானான். 'அன்பு' எனும் என் சிறுவயதுப் பெயர் சூட்டலைக் கேட்டவன் இன்றும் சிரித்துக் கொள்வான்.

படலையைத் திறந்து அப்பா வருமுன்னரே "தம்பி! தம்பி! நாய்க்குட்டி" என்று கத்திக் கொண்டுதான் நான் ஓடியதும் அப்பா அன்புவை என்னட்டைத் தாங்கோ என்று நான் கத்தியதும் அப்பா என்னை விறோதமாய்ப் பார்த்ததும் இன்றும் ஈரம் காயாமல் என்னுள்.

"என்னப்பா! உம்மடை மகள் நாய் வரமுன்னமே பேர் வைச்சிட்டாள். அதுவும் அன்புவாம்" என்று சொல்லியபடி உள்ளே போக நானும் தம்பியும் பொத்திப் பொத்தி நாய்க்குட்டியை மூலைக்குள்ளை வளர்த்திப் போட்டு முன்னுக்குக் குந்தியிருந்தோம். மண்ணிறந்தில் புசுபுசுவென்று வட்டக் கண்களை உருட்டி உருட்டிப் பார்த்தபடி இருந்த அன்பு அன்றே எங்களில் ஒருவனானான்.

அம்மா முட்டை அவித்தால் அம்மா அன்புக்கு முட்டை என்றும் நாங்கள் ரெண்டு பேரும்படும் பாட்டைப் பார்த்து அம்மா எங்களுக்கென்று வாங்கும் தின்பண்டம் எல்லாவற்றையும் மூன்று பேருக்காய் வாங்கத் தொடங்கினாள்.

"இஞ்சை தம்பி உதை வீட்டுக்கை அடுக்காதை கூடொன்று கட்டி வெளியிலை விடு" என் அப்பப்பா அப்பாவிடம் சொன் போது நானும் தம்பியும் அழுத அழுகை. அழுது.... முரண்டு பிடித்து அன்று காலை தான் அப்பப்பா சொல்லித்தந்த "அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்" என்ற குறளை நான் அவரிடமே பதம் பார்த்து... எல்லோரும் சிரித்து... நினைவுகளின் சுமையினால் கண்ணீர் தானாகவே வழிந்தது.

அன்பு! எம்மினிய அன்பு! உன்தோழர்கள் வருவார்களே! அன்பு எங்கே என்று உன்னைத் தேடுவார்களே! அதுவரையும் காத்திராமல் நீ சென்றதேன்? கொடிய இரவுகளில் நீயொரு நம்பிக்கைக் கீற்றாய் இருந்தாய், இனி...........

தம்பியின் அறையில் அசைவு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தென்பட்டது. தம்பி எழும்பி வெளியே வந்தான். அன்புவின் அருகே அமர்ந்தான். "அப்பா" என மெல்ல அழைத்தான்.

திடுக்குற்றவராய் அப்பா "என்ன தம்பி?" என்றார். "அன்புவை விதைக்க வேணும்"

"ஓமோம்"

"எங்கே விதைகுழி வெட்டலாம்"

"பின்னாலை தானே தம்பி தாக்க வேணும்" என்றார் அம்மம்மா.

"அம்மம்மா!" என்று அழுத்தத்துடன் அழைத்தான் தம்பி.

"தாக்க என்று சொல்லாதீங்கோ விதைக்க என்று சொல்லுங்கோ. மனிதர்களைப் போலவே அவனும் போராட்டத்திற்காக உழைத்தான், மரித்தான். அன்புவால் எங்கள் இளம் பெண்கள் எத்தனை பேரின் மானம் காப்பாற்றப்பட்டிருக்கும். அவனால் எத்தனை போராளிகள் காப்பாற்றப்பட்டிருப்பார்கள். காயப்பட்டு பற்றைகளுள் பதுங்கி மயங்கிப் போன எத்தனை போராளிகளை அவன் எங்களுக்காகக் காட்டித் தந்திருப்பான். அவர்களுள் எத்தனை பேர் அன்று காப்பாற்றப்பட்டதால் இன்று பொறுப்பாளர்களாகவும் தளபதிகளாகவும் சாதனை படைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் அவனை முன்பக்கம் தான் விதைப்பேன் நடுவேன் இதுதான் அன்புவின்ர தியாகத்துக்குச் செய்யும் மரியாதை நாளைக்கு அவனால் காப்பாற்றப்பட்ட போராளி மாமாக்கள் வந்து கேட்டால் காட்டவொரு கல்லறை வேணும், அது வெறும் கல்லறையா இருக்காது ஒரு சரித்திரமே அதற்குள்ளை இருக்கும்" பதின்மூன்று வயதிற்கேயுரிய விளக்கத்துடனும் ஆவேசத்துடனும் அவன் உரைத்த போது.....

சம்மதத்திறகறிகுறியாய் நாங்கள் மௌனமானோம். எங்கள் அன்பு போல் எத்தனை அன்புகளின் பணி இந்தப் போராட்டத்திற்குக் கிடைத்திருக்கும். உண்மையிலேயே இராமர் அணைகட்ட அணில்கள் மண் கொட்டி உதவினவா எனநானறியேன். ஆனால் அவ்வணில்களைப் போல் அன்புக்கள் சரித்திரத்தில் இடம் பெறுவார்களா? நிலைப்பார்களா? என்ற எண்ணம் என்மனதில் ஓடியது. தம்பி கூறிய அந்தச் சரித்திரம் எல்லோர் விழிகளிலும் கண்ணீர் வரச்செய்தது. கூடவே ஏக்கம்... தவிப்பு... எதிர்பார்ப்பு... மூலைகளிலிருந்து இருட்டை விரட்ட ஒளிக்கீற்றைச் சுமந்துவரும் சூரியக் கடவுளர்க்காய்....

# தீர்க்களும் இரவும் நாங்களும்

ஓடிக்–கபாருடி க்கு ×நர தேவு டிக்க
றாரிலுமூ –கபாருடி க்கு எங்களுெம மூ
உங்களின் கரங்கஜ் ரு
யிடீபா
புஅருணைநமாணி வரப்டபா?பூ
என் றுகஜ்
வாளு வாறு துளமூகஷீ×மரைபாமூ×பா×வா .
ஏ×தணி சிலுதனோளு யிகிநபாங்கஜ்
ஒ கண தஹ்ணூ இழ்லுமூ×பாறூா
படி பூறி கூ×யாபடபா?
என்னிவிட்டுனிறுகஜ்.
சிரிவுல் கவலிவ ×சறுலு×தவ .

பாமூகயாவுபாக ரங்கிகனு கூவுபடு வீ
எருலி–யருலி எ கணே –சளு வீய
கபாலங்கஜ்றாலகிவு×பாக
எவீரிகஜ்ஓடு ×வக வீயி×கயிப
எ கணே–சளு வீகனு நகறு மூ
வபாகனுாங்கனுச்–சளு மூ வ லமே –பயிற
ச×கபாதரிகஜிணிபீடய ச×கபாதறுக×னு.
இறுா×லவபாகனுாங்கஜ்–சளு மூ அீனுாவ
ஆருகனுபாக தபான்இ வூபாறுகஜ்என்னி
வூடிஉனிவியபாக லுறுமாதிக்கி றுகஜ்?
உங்களின் எ தபாத சட்டங்கனு
நீக்கிஎ லுமூறாட்டு
தயகஷீ –கவ்மூ கவதிவங்கஜ்.
நபானுக்கு உங்கஜ் அக்கபா
Hiace –சளு வீச்–ச லக்கூடு
உங்கனுமூ கடைசி தங்கே
Passion இ ற த ×ந
கவுபாயி–தபாகுவீக்கட்டனு தனுபவீயபாவ்
ம மகஜ் ற த ஆகு .
த ழ வீ ஒுந லறுமபாதியபாவ்
–றுபாமகஜ்இ த க .
சட்டங்கஜ்–பயிறபாளு கதலுவீரத ழ வீ
×வலேளு லபாச்சிக்க யிகுஜ்
சிக்கபாமூஉங்கனுமூ
ல்த றுயபா கவடனிவீவுல்னுாமேவு ஈடுபடு
கனுாகங்கனு கனு கச்சிதமபாவ்ச்–சளு த டிவ
உ னுச்சிரமவுபடு உலக தே ஒயிறேக்
கேயபா உ ட்டவு×பாகு உங்கனுமூ
×ப வீஜன்–ப மே கபாமூ
×பனிஉங்களுக்குஇ த ந லமூ.

எமத மே உறகஷீக×னு
இதி×யணி வபாகனுாங்கனுமக்கு ×பாமூ
–பாமூவு–பயாரி றுஜீ மூதறு×களுங்கஜ்.
உறகஷீவு–பருகனுபாளு லுதபா உநமூ ஜீசஜீளு
ஜினுயவறுகனுபாறுா ஜினுயவபாகனுாங்கஜீளு
இட லுதபா ச்சய உதகஷீயபாறுகஜ்.

×நயினி இன்னி நபானுவ
ஒ ×பாமூ ஒுன்றுபாகஇ க்க டியபாமூ
என்பமூடன் .
இமூ
சூரியதின்ல்த றுாகஜ்உலகஷீ ×தச .

**நிலா**



www.tamilarangam.net



ஆதிலட்சுமி சிவகுமார்

சில பதிவேடுகளும் குறிப்புப் புத்தகங்களும் அவருக்கு முன்னால் இருந்தன. அவர் தூரத்தே தெரிந்த தென்னந்தோப்பைப் பார்த்தபடி யோசனையில் ஆழ்ந்திருப்பவர் போல் தெரிந்தார். சில நாட்களாய் எதிலும் ஒட்டிக்கொள்ள விரும்பாத மாதிரி அவர் மனம் அழுத்தமுற்றிருந்தது.

கிளிகளும் குருவிகளும் தென்னோலையில் இருப்பதும் பறப்பதுமாய் அமளிப்பட்டுக் கொண்டிருந்தன. வானத்தின் மென்நீலப் பின்னணியில் தென்னை மரங்களின் தலைகளைத் தடவும் சூரியனின் கதிர்கள் பளபளத்தன.

வாசலில் மோட்டார் சையிக்கிள் ஒன்று வந்துநிற்கும் சத்தம். அவர் யோசனைகளிலிருந்து விடுபட்டவராய் நிமிர்ந்தார். யன்னலூடாக அவன் வந்துகொண்டிருப்பது தெரிந்தது. அவன் வழக்கமாக வருகிற பழக்கமானவன்.

எழும்பி சேட்டை எடுத்துக் கொளுவியபடியே,

"வாரும் தம்பி" என்றார். அவனோடு இன்னொருவனும் வந்திருந்தான்.

"வணக்கம் சேர்...."

"வணக்கம்" பரபரத்தார்.

அவரதுமேசைக்கு முன்னாலிருந்த வாங்கில் இருவரும் அமர்ந்தார்கள். புதிதாக வந்திருந்தவன் அறையின் நான்கு பக்கங்களையும் கண்களால் துருவிப் பார்ப்பதை அவர் உணர்ந்தார்.

"ஓமோம்.... இல்லதம்பி..... சாடையான அலுப்பு......"

சிறு புன்னகையோடு, கொண்டு வந்த புத்தகங்களையும் பைல்களையும் அவன் அவர் முன்னே மெதுவாக வைத்தான்.

"இந்த முறை புத்தகங்கள் கிடைக்கப் பிந்திப்போச்சு சேர்...... குறை நினைக்காமல் கொஞ்சம் நேரத்தோடை அலுவலை முடிச்சுத்தர வேணும்"

அவர் தலையாட்டினார்.

"அப்ப வரப்போறம் சேர்..........."

"இருங்கோ தம்பி.......... ரீ குடிச்சிட்டு....."

"இல்ல சேர்.... வேற அலுவலும் கிடக்கு... ஆறுதலா வாறம்...."

அவர்களுடன் அவரும் கேற்வரை வந்தார்.

புதிதாக வந்தவன் மோட்டார் சயிக்களை ஸ்ராட் செய்தான். அது அனுங்கிவிட்டு மௌனமானது. திரும்பவும் இரண்டு முறை முயற்சிதான். ஸ்ராட் வரவில்லை.

அவனின் செட் முழுவதும் வியர்வையால் நனைந்து விட்டது. நெற்றியிலும் கன்னங்களிலும் வியர்வை உருண்டது.

அவன் சூப்பி என்று சொல்லப்படுகின்ற பெற்றொல் நிரப்பிய சிறிய குப்பியை எடுத்து சிறிய குழாயினூடு பிதுக்கினான். மற்றவன் ஸ்ராட் செய்தான்.

புகையைக் கக்கிக் கொண்டு மோட்டார் சையிக்கிள் உறுமியது.

"வாறம் சேர்....."

தலையசைத்தார். தெருப்புழுதியை வாரிக்கொண்டு போனார்கள். அவர் உள்ளே வந்து மேசையின் முன்னால் அமர்ந்தார். பைல்களைப் புரட்டிப் பார்த்தார். அவசரமாய்ச செய்து கொடுக்க வேண்டிய வேலை.

நெற்றிப் பொட்டில் கையை வைத்துக் கொண்டு பார்வையை வெளிச் செலுத்தினார். ஜன்னலுக்கு நேரே வீதிக்கு எதிர்புறமாய் கதிரின் தேநீர்க் கடையில் இரண்டு மூன்று இளைஞர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

கதிர் நிலத்தில் வைத்த பெற்றோல் மாக்ஸ் கொளுத்திக் கொண்டிருந்தான். அவர் மனைவி அறைக்குள் வந்து அரிக்கன் லாம்பை துடைத்துக் கொளுத்துவதற்காக எடுத்துக் கொண்டு போனாள். அவர் இன்னமும் வெளியே பார்த்தபடி இருந்தார்.

"அப்பா .... அப்பா..."

அவரது ஏழுவயது மகன் கார்த்திக் ஓடிவந்தான்.

"இவரால தானேயப்பா ஆக்களுக்கு காய்ச்சல் வாறது?..."

அவனுடைய கையில் செத்த நுளம்பு ஒன்றிருந்தது.

"நுளம்பால எப்படியப்பா மலேரியா வாறது?..." அவருடைய மனநிலைக்கு சிறிதும் சம்பந்தமில்லா கேள்வி அது. ஆனால் சின்னவயதின் ஆர்வம். தேடலை அலட்சியம் செய்துவிடக் கூடாது என்கின்ற உணர்வும் எழுந்தது. மகனுக்கு நுளம்பிலிருந்து மலேரியாக் கிருமிகள் பரவும் விதத்தை விளங்கப்படுத்தினார்.

அவன் மிகுந்த மகிழ்ச்சியோடு ஏனைய நுளம்புகளையும் துரத்தி அடிப்பதற்காக ஓடினான்.

மனைவி அவர் முன்னால் அரிக்கன் லாம்பையும் தேனீரையும் வைத்து விட்டுபோனாள். இளைஞர்கள் தந்த புத்தகங்களைப் புரட்டினார். சில வரலாறுகள் அதில் இருந்தன. ஆங்கில மொழி மூலமான அந்த வரலாறுகளை இளஞ்சந்ததியினருக்காக தமிழில் மொழி பெயர்ப்புச் செய்யும் பணி அவருக்குத் தரப்பட்டிருந்தது.

மூலத்தைச் சிதைக்காமலும், நையிலும் மொழிபெயர்க்கும் திறமை அவருக்கிருந்தது. நீண்ட காலமாய் அவர்களுக்கு இப்பணியைச் செய்தபோதும் விளம்பரங்களேதுமின்றி அவர் இருந்தார்.

புத்தகமொன்றின் ஓரிரு பக்கங்களைப் புரட்டி மேலோட்டமாய் படித்துக் கொண்டிருந்தபோது கதிரின் தேனீர்க் கடையில் இருந்து ரேப்றெக்கோடர் பாடத்துவங்கியது. நிமிர்ந்து பார்த்தார்.

பெற்றோல் மாக்ஸ் வெளிச்சம் வீதியில் பரவிக்கிடந்தது. நாலைந்து இளைஞர்கள் வாங்கில் அமர்ந்திருந்தார்கள். பழுத்த வாழைக்குலைகள் இரண்டு கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்தன.

தெருவைத் தாண்டி பாடல் ஒலியும் இளைஞர்களின் சிரிப்பு ஒலியும் அவரைக் குழப்பின. தாய்மொழியைக் கொல்லும் அந்தச் சினிமாப்பாடலை அவரால் சகித்துக் கொள்ள முடியாமலிருந்தது. அண்மைக் காலமாய் இது ஓர் அவஸ்தையாக அவருக்குப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முரண்கள்

முரண்கள்

காலை ஏழு முப்பதுக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு அலுவலகத்தின் பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம்கொடுத்து வீடு திரும்புகையில் தினமும் கதிரின் தேனீர்க்கடை அவருக்கு எரிச்சல் ஊட்டுவதாக இருந்தது.

திரும்பத்திரும்ப ஒரே பாடல்கள். அதுவும் அளவுக்கு அதிகமான ஒலி அதிர்வுடன்.

கதிருக்கு நாலுவார்த்தை சூடாகப் பேசவேண்டும் என்று சில நேரங்களில் முயன்று பார்த்திருந்தார்.

பாடசாலை ஆசிரியையான அவரது மனைவி காலையில் அவசரமாக குசினிக்குள் வேலையாயிருக்கும்போது கதிரின் கடையடிக்கு அவர் போவார்.

காலையில அவனுக்கு பிஸ்னஸ் அமளியாயிருக்கும். தேனீர் கலக்குவதும் சிற்றுண்டிகளைப் பரிமாறுவதமாய் அவன் ஆரவாரப்படுவான்.

அவரைக்கண்டதும் தன் வேலைகளை நிறுத்தி வணக்கம் சொல்லி ஸ்டுல் எடுத்துப்போடுவான். அதே அவசரத்துடன் தேனீர் கொடுப்பான். காலைப் பத்திரிகையைக் கூட அவனது கடையிலேயே அவர்படித்துக் கொள்வார்.

சில்லறைகளை எடுத்து நீட்டினால் "இருக்கட்டும்" என்று வாங்க மறுத்து விடுவான். அவருடைய அறிவுக்கும், வயதுக்கும் அவன் கொடுக்கும் மரியாதையாக இது இருக்கலாம் என எண்ணிக்கொள்வார்.

"பாடலைப் பற்றிச் சொல்லவா?" என்று மனம் போராடிக்களைக்கும். எதுவுமே சொல்லாமல் வீட்டுக்கு வருவார்.

அவர் இப்போதும் கடையையே பார்த்துக் கொண்டிருந்தார். பாடல் அதிகமான ஒலியுடன் நகர்ந்து கொண்டிருந்தது. தேனீர் பரிமாறும் மேசையில் தட்டித் தாளமிட்டு மகிழ்ந்து கொண்டிருந்தார்கள் சில இளைஞர்கள்.

அவர் தவிர்க்கமுடியாமல் இளமைப்பராயத்து மாலைப் பொழுதுகளை எண்ணிப் பார்த்தார். அவரது இளமைப் பராயத்து மாலைப் பொழுதுகள் திருமுறை வகுப்புக்களிலும், புராண இதிகாச சொற்பொழிவுகளிலுமே கரைந்திருந்தன.

திருமுறைப் பாடல்களை பண்ணிசையில் சொல்லித்தரும் தன் குருவை மனக்கண்ணில் நிறுத்திப் பார்த்தார்.

கைப்பிடியளவு குடுமியும், காதுகளில் கடுக்கன்களும் இடுப்பில் நான்கு முழ வேட்டியும் அணிந்திருக்கும் குருநாதர் அவர் முன் பிரசன்னமானார்.

"அவருக்கு கல்வியையும் கலையையும் வைத்துக் காசு பண்ணக்கூடாது" என்று அவர் அறிவுரை கூறுவார். அலுவலக வேலைகள் தவிர்ந்த. பிரத்தியேமாக செய்யும் கடமைகளுக்கு அவர் ஒருபோதும் காசு வாங்கியது கிடையாது.

தன்னுடைய தொண்ணூற்று மூன்றாவது வயதில், குருநாதர்உயிர் நீத்தபோது அவருடைய பூதவுடலை அடக்கம் செய்யும் நிகழ்வில் கூட அவரால் கலந்து கொள்ளமுடியாமற் போய்விட்டது.

அவர் ஊரிலிருந்த போது அவர் வீட்டுக்கு வரியுடை தரித்தவர்கள் வந்து செல்வதும், அவர்களின் வாகனங்கள் தேவைகருதி வீட்டுக்கு வந்து போவதும். அவர் வரியுடை தரித்தவர்களூடாக அரிய பணி செய்வதை யாவரும் அறிவர் என்பதாலும் ஊருக்குப் போய்வர அவர் அச்ச முற்றிருந்தார்.

இப்பொழுது அவரின் காதுகளுக்கு மிக அருகே சில நுளம்புகள் பாடத் தொடங்கின. அவர் மேசை லாச்சிக்குள் இருந்து உடனடியாக நுளம்புத்திரி ஒன்றை எடுத்துக் கொளுத்தினார்.

அவசரமாகச்செய்து கொடுக்க வேண்டிய வேலைகள் உறுத்தின. மூக்குக்கண்ணாடியை எடுத்துத் துடைத்தவிட்டு கண்களில் பொருத்திக் கொண்டார்.

ஆங்கிலப் புத்தகம் ஒன்றை எடுத்துப்புரட்டினார். புத்தகத்துக்கான முன்னுரையைப் பார்த்தார். எந்தப் புத்தகத்தைக் கையில் எடுத்தாலும் முதலில் முன்னுரையைப் படிக்கும் பழக்கம் அவரிடமிருந்தது.

முன்னுரையை அவர் படித்துக் கொண்டிருக்கும் போது கதிரின் தேனீர்க் கடையிலிருந்து ஒலிக்கும் பாடல் அவர் செவிகளில் நுழைந்தது.

அவருக்குள் இப்போது சினம் மூளத் தொடங்கியது. வேண்டுமென்றே கதிர் தன்னைக் குழப்புவதாக எண்ணும் குரூரம் அவருள் உருக் கொள்ளத் தொடங்கியது.

"கோவம் பாவத்தைத் தேடும்" என்று மனதைக் கட்டுப்படுத்த முயன்றார். கண்களை மூடிக்கொண்டு தியானித்தார்.

"அவன்" கல்வியறிவு நிரம்பாதவன்..... தன் அறியாமையால் இந்தத்தவறைச் செய்கிறான். அவனுக்கு இதைப்புரிய வைக்க வேண்டும்..... தன்னை ஒரு முகமாக்கினார்.

இப்போதே கடைக்குப் போய் கதிரை அழைத்து நிதானமான முறையில் அவனுக்கு விளங்கப்படுத்த வேண்டும் என்று நினைத்தார்.

புத்தகத்தை மூடி, அரிக்கன் லாம்பைத் தணித்து வைத்தார். ரோச்லைற்றைக் கையில் எடுத்தக் கொண்டு கதவைப் பூட்டினார்.

"மகனும் மனைவியும்" தூங்கியிருக்க வேண்டும். எதுவித சிலமனையும் காணாததால் எண்ணிக் கொண்டார்.

முன்கதவை நீக்கி வாசலில் இறங்கினார். படியில் ஒரு உருவம் அமர்ந்திருக்க அவள் மடியில் அவர்களின் மகன் உறங்கியிருந்தான்.

"ஏன் உதிலை இருக்கிறீர்" இருட்டில பாம்பு பூச்சி ஏதும் வந்தால்...." ரோச்லைற்றை நிறுத்தி விட்டுக் கேட்டார்.

"கதிர் நல்ல பாட்டுக்கள் போடுறான்.... அதுதான் இதில இருந்து கேட்டுக்கொண்டிருக்கிறன்....."

மனைவியின் பதில் அவருக்கு வியப்பாக இருந்ததா? வேதனையாக இருந்ததா? என்று அவருக்கே புரியாத நிலையில, அவர் படியிறங்காமல் அப்படியே நின்று கொண்டிருந்தார்.

தெருவைத் தாண்டி பாடல் ஒலியும் இளைஞர்களின் சிரிப்பு ஒலியும் அவரைக் குழப்பின. தாய்மொழியைக் கொல்லும் அந்தச் சினிமாப்பாடலை அவரால் சகித்துக் கொள்ள முடியாமலிருந்தது. அண்மைக் காலமாய் இது ஓர் அவஸ்தையாக அவருக்குப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமூக வாழ்விலும் மனித இனத்தின் முன்னேற்றத்திலும் தாமும் முழுமையான பங்கை வகிப்பதற்காக, அடக்குமுறைகளிலிருந்தும் பாரபட்ச நடவடிக்கைகளிலிருந்தும் தம்மை விடுவித்துக் கொள்வதற்காக உலகின் பல பாகங்களிலும் இன்றும் போராட்டம் நடாத்தி வருகிறார்கள்.

பாரபட்சத்திற்கும் அடக்குமுறைக்கும் அடிப்படைக் காரணமாக இருப்பது சுரண்டல் முறையே, தேச விடுதலை, சமூக விடுதலை, சோசலிச சமுதாய முறைமையை உருவாக்குதல் என்பவற்றுக்காக தாமும் போராடுவதன் மூலமே தமது உண்மையான விடுதலையைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற உண்மையை சீனப்பெண்கள் அனுபவத்தின் வாயிலாக உணர்ந்து கொண்டனர்.

ஆரம்ப சீனாவில், சமூகத்தின் ஏனைய பிரிவினரைவிட வேலை செய்யும் பெண்களே கடுமையான அடக்குமுறைக்கும் சுரண்டலிற்கும் ஆளானார்கள். சமூகத்தில் அவர்களுக்கென ஒரு அரசியல் நிலை இருக்காததுடன் அவர்களது குடும்பங்களிலேயே அவர்கள் பாரபட்சமாக நடாத்தப்பட்டார்கள்.

பெண்கள் தமது அரசியல் விழிப்புணர்வை அதிகரித்தல், போராட்டங்களில் பங்கெடுத்தல், அவற்றுக்கு உதவுதல், பிரபுத்துவ கருத்துக்கள் மற்றும் பெண்களைக் கீழ் நிலைக்கு இட்டுச் செல்லும் பழக்கவழக்கங்களை நீக்குதல் ஆகியவற்றின் மூலமே ஆண் - பெண் சமத்துவம் எட்டப்படலாம் என்பது தெளிவாகியது. இவையெல்லாவற்றுக்கும் முதலில் ஆண்களுடன் இணைந்து அந்நிய ஆக்கிரமிப்புக்கெதிராகப் போராட வேண்டிய தேவை சீனப் பெண்களுக்கு ஏற்பட்டது. தேச விடுதலை, சமூக விடுதலைப் போராட்டங்களில் ஆண்களுக்கு நிகராக பங்கெடுப்பதன் மூலம் அவர்களிடமிருந்து தமது உரிமைகளை இலகுவாக வென்றெடுக்க முடியும் என அவர்கள் நம்பினார்கள்.

ஏற்கனவே சீனாவில் பல பெண்கள் அமைப்புக்கள் தோன்றியிருந்தாலும் அவை மாஓ சேதுங்கினது கம்யூனிச கட்சியின் தலைமையின் கீழ் வந்த பின்னரே செயற்றிறனுடையவையாக மாறின. 1921இல் சீன கம்யூனிச கட்சி ஆரம்பிக்கப்பட்ட பின்னர், பெண்கள் தொடர்பான விடயங்களில் கட்சிப் போராளிகள், பெண்கள் கட்சி உறுப்பினர்கள் மற்றும் கட்சியைச் சாராத அலுவலகங்கள், பாடசாலைகள், நிறுவனங்கள், தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்கள் ஆகியோர் பங்கெடுத்தனர். முதல் நடவடிக்கையாக பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அரசியற்கல்வி ஊட்டப்பட்டது. தொழிற்சாலை ஊழியர்கள் சம்பள உயர்வு மற்றும் தமது உரிமைகளுக்காகப் போராட்டங்களை நடாத்தியபோது அதில் பெண்களின் விசேட கோரிக்கைகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

எல்லா இனங்களைச் சேர்ந்த பெண்களுமே புரட்சி எதிர்ப்பு இயக்கத்திற்கு ஆதரவு வழங்க மறுத்ததுடன் பல்லாண்டு காலமாக தம்மை அடக்கி வைத்திருந்த கன்பூசியசின் (Confucius) ஆணாதிக்க கொள்ளையையும் எதிர்த்தனர். பெண்கள் இப்போது தமது பலத்தைத் தெரிந்துக் கொண்டார்கள். தாங்கள் என்ன செய்யவேண்டும் என்பதும் மக்கள் நம்மிடமிருந்து எதனை எதிர்பார்க்கின்றனர் என்பதும் அவர்களுக்கு தெளிவாகியது.

கன்பூசியசின் (Confucius) கருத்துக்களுக்கெதிரான விமர்சனங்கள் மேலும் தீவிரமடைந்து பழைய சமூகத்தால் விட்டுச் செல்லப்பட்ட பழக்கவழக்கங்கள் அருகிவர, புதிய சோசலிச சமூகத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான உறவு புதியதொரு பரிமாணத்தைப் பெற்றது. 'ஆண்கள் வெளி விவகாரங்களையும் பெண்கள் வீட்டு வேலைகளையும் கவனிக்க வேண்டும்' என்ற கன்பூசியசின் கருத்து பெண்கள் மேலும் அடிமைப்படுத்துவதாக அமைகிறது என்பதை உணர்ந்து கொண்டதால் இதற்குப் பதிலாக ஆண்களும் வீட்டுவேலைகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. 'பெண்கள் பிற்போக்கானவர்கள். அவர்கள் இளமையில் தமது தந்தையரிற்கும், திருமணமாகிய பின் தமது கணவன்மாரிற்கும், முதுமையில் அல்லது விதவையானால் தமது மகன்மாரிற்கும் சேவை செய்யவேண்டியவர்கள்' என்பது போன்ற, சீனாவில் நிலவிய பிற்போக்குக் கெதிராக கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இவை சீனப் பெண்களுடைய கருத்தியலிலும் அவர்களுடைய சமூகப் பணிகளிலும் ஆழமான மாற்றத்தை ஏற்படுத்தியது.

யப்பானிய ஆக்கிரமிப்பிலிருந்து தமது நாட்டைப் பாதுகாப்பதற்கான போரில் கம்யூனிச கட்சிக்கு ஆதரவளிப்பதுடன் மட்டும் நின்றுவிடாமல் பதுங்குகுழி அமைத்தல், இராணுவத்திற்குத் தேவையான ஆடைகளைத் தயாரித்தல் போன்றவற்றிலும் பெண்கள் ஈடுபட்டனர். ஆண்கள் அமைத்திருந்தது போன்ற தற்காப்புப்படையொன்றையும் பெண்கள் அமைத்தனர் போரில் திறமையாக செயற்பட்ட பெண்களையே கிராமங்களில் தமது அமைப்புக்களின் தலைவர்களாக மக்கள் தெரிவு செய்தனர்.

புரட்சிக்குப் பின்னர் எல்லாத்துறைகளிலும் பல்வேறுபட்ட வேலைகளில் பெண்கள் ஈடுபட்டனர். பெருந்தொகையான பெண்கள் வேலை செய்யும் வகுப்பினராக மாற்றம் பெற்றனர். முன்னர் பெண்களுக்கு பொருத்த மற்றவை என்று பலரால் கருதப்பட்ட வேலைகளிலும் தொழில்நுட்ப துறைகளிலும் கூட அவர்கள் தேர்ச்சி பெற்றனர். எண்ணெய் வயல்களிலும், நிலக்கரிச் சுரங்கங்களிலும் பணிபுரிவதற்குத் தேவையான தொழில்நுட்பங்களை தமது தோழர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர். அத்துடன் பெண்கள் கல்வி, விஞ்ஞானம், சுகாதாரமும் வைத்தியமும், கலைஇலக்கியம் மற்றும் விளையாட்டு ஆகிய துறைகளிலும் ஈடுபாடுடையவர்களாக இருந்தனர். குளிர்நிறைந்த பனிமலைகளிலும் ஆண்களுக்கு நிகராக நின்று வேலைசெய்தனர்.

வேலை செய்யும் சீனப் பெண்கள் மீதான சமூக, வர்க்க ரீதியான அடக்குமுறை மற்றும் சுரண்டல் முறையை சோசலிச முறைமை நிர்மூலமாக்கியது. சகல துறைகளிலும் வேலை செய்வதற்கான உரிமையை அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். புதிய சீனாவில் வழக்கிலிருந்த "வானத்தின் பாதியைத் தாங்குதல்" (Holding up half the sky ) எனுங் கூற்றானது சீனப் புரட்சியில் ஆண்களுடன் இணைந்து நின்ற மாபெரும் பெண்கள் சக்திக்கு எடுத்துக்காட்டாகின்றது. எவையெல்லாம் ஆண்களால் செய்ய முடியுமோ அவை யாவும் பெண்களாலும் முடியும் என்ற நிலை ஏற்பட்டது.

பாட்டாளிகளின் புரட்சியில் கிடைத்த ஒவ்வொரு படி முன்னேற்றமும் சீனாவின் பெண் விடுதலை இயக்கங்களுக்கு கிடைத்த முன்னேற்றம் என்பதனை சீன வரலாறு காட்டி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "வானத்தின் பாதியைத் தாங்குதல்" சீனப் பெண்களின் அனுபவம்



கா.செல்வி

நிற்கிறது. ஏற்கனவே நடைபெற்ற கலாச்சாரப் புரட்சியும் கன்பூசியசிற்கெதிரான இயக்கமும் பெண்விடுதலை இயக்கங்களை புதியதொரு கட்டத்துக்கு இட்டுச் சென்றது.

வேலை செய்யும் சீனப் பெண்களுக்கு பழைய சமூகமும் புதிய சோசலிச சமூகமும் இரு வேறுபட்ட உலகங்களாக இருந்தன. சகல துறைகளிலும் அவர்கள் ஆண்களுக்கு சமனான உரிமைகளை அனுபவித்தனர். தனது பழைய வாழ்க்கையை நினைவு கூரும் சோசலிசப் பெண் ஒருவர் "அப்போது எனக்கென்றொரு தகுதிநிலையோ, தனித்துவமான அடையாளமோ இருக்கவில்லை. எனது பெயரைக் கூட எந்தவொரு இடத்திலும் பயன்படுத்தவில்லை. நான் எனது கணவனது குடும்பத்துக்கு சொந்தமானவளாகவே கருதப்பட்டேன். ஆனால் இன்று 2000இற்கு மேற்பட்ட ஆண், பெண் பிரதிநிதிகளுடன் இணைந்து அரச விவகாரங்கள் பற்றிக் கலந்துரையாடுகிறேன்" என்று கூறினார்.

விடுதலையைத் தொடர்ந்து குறிப்பாக கலாச்சாரப் புரட்சி ஆரம்பித்த பின்னர் அரசாங்கமும் கம்யூனிசக் கட்சியும் பெண் தலைவர்களை உருவாக்குதற்கும் பயிற்சியளிப்பதற்குமென விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டன.

சீன கம்யூனிசக் கட்சியிலும் கம்யூனிச இளைஞர் கழகத்திலும் சேர்த்துக் கொள்ளப்பட்ட பல்லாயிரக்கணக்கான பெண்கள் சீனாவின் சகல பாகத்திலுமுள்ள மக்களையும் கம்யூனிச பாதைக்கு கொண்டு வருவதற்காக கடுமையாக உழைத்ததுடன் அவர்களுடன் நெருக்கமான தொடர்புகளையும் கொண்டிருந்தனர். இவ்வாறு பல்லாயிரக்கணக்கான பெண்கள் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டமையால்தான் சீனாவில் அவர்கள் விடுதலை பெறுவது சாத்தியமாயிற்று. இதனையே 1939 இல் சீனத்தலைவர் மாவோவும் "சீனாவின் சனத்தொகையில் அரைப்பங்கை வகிக்கும் பெண்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டாலே சீனப்போரில் வெற்றி பெற முடியும்" என்று கூறினார்.

1942இல் யப்பானிய வல்லாதிக்க சக்தி "எல்லோரையும் கொல்லுதல், எல்லாவற்றையும் சூறையாடுதல், எரித்தல்" என்ற நடவடிக்கையை ஆரம்பித்தபோது சீனப் பெண்கள் ஆண்களை ஒளித்து வைத்திருப்பதிலும் அவர்களுக்கு தகவல்களை வழங்குவதிலும் உதவியதுடன் அவர்களுடன் இணைந்து இரவு ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். எல்லா ஆண்களும் போராட்டத்துக்கு சென்றாதாலும் மறைவு வாழ்க்கையில் ஈடுபட்டதாலும் பெண்களே நிலங்களை உழுது, பயிரிட்டு, அறுவடைசெய்து போராளிகளுக்கு தானியங்களை அனுப்பி வைத்தார்கள்.

யப்பனுக்கெதிரான போர் வெற்றிகரமாக முடிவடைய அமெரிக்காவின் ஆதரவுடன் 'கோமின்ராங்' பிற்போக்கு வாதிகள் நடாத்திய உள்நாட்டுப்போர் ஆரம்பமாகியது. இதில் ஏழைவிவசாயிகளின் நிலச்சீர்திருத்தங்களுக்கு தலைமைதாங்குதல் பிரபுத்துவ நிலக்கிழாந்தரின் ஆட்சியைக் கவிழ்த்தல், போராட்டத்துக்கு பலமான ஒரு அடித் தளத்தை கட்டியொழுப்புதல், போராட்டத்திற்கு ஆதரவு அளிப்பதுடன் தமது பிரதேசங்களிலிருந்து பிற்போக்குவாதக் கருத்துக்களை விரட்டுதல் ஆகியனவே பெண்களின் பணிகளாக விருந்தன.

1960இல் மக்கள் விடுதலை இராணுவத்தில் [PLA] இணைந்து கொள்வதற்கு மாவோ விடுத்த அழைப்பை ஏற்று முதன்முதலில் இராணுவத்தில் இணைந்து கொண்டனர். அவர்கள் கடற்கரையிலும் வயல்வெளிகளிலும் தம்மை வருத்தி கடுமையான பயிற்சிகளைப் பெற்றனர். ஆரம்பத்தில் துப்பாக்கிகளை ஏந்தியவாறு பாதுகாப்பு ரோந்து நடவடிக்கைகளில் தனித்து ஈடுபடுவது அவர்களுக்கு வித்தியாசமானதொரு அனுபவத்தையே தந்தது. சேற்றினுள் கைகளையும் கால்களையும் பயன்படுத்தி அவர்கள் ஊர்வு நகர்வுகளை மேற்கொண்டு, வியர்வையில் குளித்து தம்மை இராணுவ வீரர்களாகப் புடம் போட்டுக் கொண்டபோது, பிரபுத்துவ கருத்துக்களில் ஊறியிருந்த மக்களின் கடும் விமர்சனங்களுக்கு ஆளானார்கள்.

"முன்னர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் மற்றவர்களின் தயவில் வாழ வேண்டியிருந்தது. மற்றவர்களுக்கு மத்தியில் இருக்கும் போது நிலத்தைப் பார்த்த வண்ணம், அவர்கள் எம்மைத் தாக்கினாலும் தடுப்பதற்குக்கூட துணிவற்றவர்களாக இருந்தோம். ஆனால் இப்போது தலைவர் மாவோவும் கம்யூனிசக் கட்சியினரும் எம்மை மட்டுமன்றி எமது நாட்டையும் பாதுகாத்துக் கொள்வதற்கேற்ற துணிவுடன் துப்பாக்கிகளையும் வழங்கியுள்ளனர்" என்று பெருமையுடன் கூறியுள்ளார் மக்கள் விடுதலை இராணுவத்தைச் சேர்ந்த பெண்ணொருவர்.

"என்று நாட்டின் எல்லாப் பாகங்களிலுமுள்ள பெண்களும் ஒன்றாக அணிதிரள்கிறார்களோ, அந்நாளே சீனப்புரட்சியின் வெற்றி நாளாக அமையும்" என்ற மாவோவின் கூற்றை மெய்பித்துள்ளது சீனப் புரட்சியின் வரலாறு. 1924 -1927 இலும் 1927 - 1937 இலும் நிகழ்ந்த உள்நாட்டுப் புரட்சிப் போர்களிலும் 1937 - 1945 வரை நிகழ்ந்த யப்பானியருக்கெதிரான போரிலும் 1945 - 1949 இல் நடைபெற்ற விடுதலைப் போரிலும் கலந்து கொண்ட பெருந்தொகையான பெண்களே அந்த போர்களின் வெற்றியை தீர்மானிக்கும் முக்கிய சக்தியாக விளங்கினார்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நினைவுக்குறிப்பு



## ஜெயசிக்குறுய் எதிர்ச்சமர்:

அனைத்து இராணுவ வளங்களையும் ஒருமுகப்படுத்தி பெரும் நம்பிக்கையுடன் சிங்களம் தொடுத்த பாரிய இராணுவ நடவடிக்கையான ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை 04.12.1998 அன்று கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆக்கிரமிக்கப்பட்ட யாழ் குடாநாட்டுக்கு தரைப்பாதை அமைக்க 13.05.1997 அன்று ஆரம்பிக்கப்பட்ட இப்பாரிய படையெடுப்பு விடுதலைப் புலிகளின் புயலையொத்த எதிர்த்தாக்குதல்களால் நிலைகுலைந்தது சிங்களப்படைக்கு பலத்த இழப்பையும் வரலாற்றில் பொருத்த இராணுவ அவமானத்தையும் ஜெயசிக்குறுய் பெற்றுக் கொடுத்தது.

### குருநகர், பாசையூர் மக்கள் படுகொலை:

டீ.பி.விஜயதுங்க ஆட்சிக்காலத்தில் யாழ் மாவட்டம் குருநகர் பாசையூர் மக்கள் குடியிருப்புக்கள் மீது 05.12.1993 அன்று சிறீலங்கா விமாப்படையின் புக்காரா குண்டுவீச்சு விமானங்கள் குண்டுவீசித் தாக்குதல் நடத்தியதில் சிறுவர்கள் பெண்கள் உட்பட 25 தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 70ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயம் அடைந்தனர்.

### கிழக்கு மாகாணத்தில் முதல் கரும்புலித் தாக்குதல்:

புத்தூர், நவக்கிரி பகுதியிலிருந்து சூரியக்கதிர் என்ற மிகப்பெருமெடுப்பிலான படையெடுப்பை வலிகாமத்தில் மேற்கொண்ட சிங்களப்படையினர் 50நாட்கள் நடத்திய உக்கிரசமரின் முடிவில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர். ஏறக்குறைய 5.5 இலட்சம் பேரைக் கொண்ட வலிகாமத்தில் ஒட்டுமொத்தமான சனத்தொகையும் முற்று முழுதாக வெளியேறிய நிலையில் வெறும் கட்டிடங்களுக்கு மத்தியில் 05.12.1995 அன்று சிங்களப்படை அமைச்சர் அநுருத்த ரத்வத்த சிங்கக் கொடியை ஏற்றிய ஒருசில மணிநேரத்தில் மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் சிங்களச் சிறப்பு அதிரடிப் படையின் முகாம் மீது மேஜர் ரங்கன் கரும்புலித் தாக்குதலை நிகழ்த்தி சிங்களத்தின் ஆக்கிரமிப்பிற்கு பதிலடி கொடுத்தார்.

### சாவகச்சேரிப் படுகொலை:

டி.பி.விஜயதுங்க ஆட்சிக்காலத்தில் யாழ் மாவட்டம் சாவகச்சேரி நகரில் 30.12.1993 அன்று குழுமியிருந்த மக்கள்மீது சிறீலங்கா விமானப்படையின் புக்கார குண்டுவீச்சு விமானங்கள் குண்டுவீசித் தாக்குதல் நடத்தியதில் 10ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர் 50ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயம் அடைந்தனர்.

### மிருசுவில் படுகொலை:

19. 12. 2001 அன்று. சந்திரிகா ஆட்சிக்காலத்தில் தென்மராட்சியின் வடக்குப் பகுதிக்கு தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற ஒன்பது தமிழர்களில் சிறுவன் உட்பட 8ப் பேர் சிங்கள இராணுவத்தால் பிடித்துச் செல்லப்பட்டு அடித்தும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 25.12.2001 அன்று இவர்கள் புதைகுழியிலிருந்து சடலங்களாக மீட்கப்பட்டனர்.

### தியாகி அப்துல் ரவூஃப் நினைவு நாள்:

ஈழத்தமிழருக்கு ஆதரவு தெரிவித்து திருச்சியில் 24வயது தமிழ் இளைஞர் அப்துல் ரவூஃப் 15.12.1995 அன்று தீக்குளித்து தியாக மரணம் எய்தினார். சூரியக்கதிர் யாழ்ப்பாணப் படையெடுப்பின்போது வலிகாமத்தின் ஒட்டுமொத்தமான சனத்தொகையும் முற்று முழுதாக இடம்பெயர்ந்து வெளியேறிய ஒரு முக்கியமான காலத்தில் அவர் இத்தியாகச்சாவை எய்தினார்

## எம்.ஜி.இராமச்சந்திரன் நினைவு நாள்:



தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள். தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் மீது அன்பும் மதிப்பும் வைத்திருந்த ஒரு சிறந்த மனிதர். இவர் புலிகள் இயக்கத்திற்கு பெருந்தொகை நிதியை அளித்து போராட்டத்தை முன்னோக்கித் தள்ள உதவியவர். இவர் 24.12.1987 அன்று உடல்நலக்குறைவு காரணமாக மரணமடைந்தார். இவர் நினைவுநாள் தமிழ்நாட்டு மக்களாலும், தமிழீழ மக்களாலும் நினைவுகூரப்படுகின்றது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மீள்பார்வை

**02.11.2002**

திருகோணமலைக் கடற்பரப்பில் வைத்து, ஆறு விடுதலைப் புலிகளை சிங்களப்படையினர் கைதுசெய்தனர். 02.11.2002 அன்று, திருகோண மலையில் இருந்து சம்பூருக்கு இயந்திரப்படகில் சென்றுகொண்டிருந்த விடுதலைப் புலிகள் ஆறுபேரையே தாம் கைதுசெய்ததாக சிங்களப் படையினர் தெரிவிக்கின்றனர்

**03.11.2002**

விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையே, தாய் லாந்தில் நடைபெற்ற இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தை 03.11.2002 அன்று நிறைவுபெற்றுள்ளது.



**07.11.2002**

பிரான்சில் தலைமையகத்தைக் கொண்டியங்கும், தமிழர் மனித உரி மைகள் மையம், தனக்கென புதிய இணையத்தளம் ஒன்றை 07.11.2002 அன்று உருவாக்கியுள்ளது. தமிழர் மனித உரிமை மையத்தின் இணையத்தள முகவரி, WWW.TCHR.NET.

**08.11.2002**

சிறீலங்காவின் கொழும்பு மேல்நீதிமன்றம், தமிழீழத் தேசியத் தலைவ ருக்கு எதிராக வழங்கிய தீர்ப்பைக் கண்டித்தும், அதனை உடனடியாக வாபஸ்பெற வேண்டும் என வலியுறுத்தியும், 08.11.2002 அன்று, யாழ்ப் பாணம், வவுனியா, முல்லைத்தீவு, நெடுந்தீவு ஆகிய இடங்களில் மாபெரும் கண்டனப் பேரணிகள் நடாத்தப்பட்டுள்ளன.

**10.11.2002**

தாய்லாந்தில் நடைபெற்ற இரண்டாம் சுற்றுப்பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டதற்கு ஏற்ப, அமைக்கப்பட்ட பாதுகாப்பு உப குழு, 10.11.2002 அன்று, ஓமந்தை சூனியப்பிரதேசத்தில், முதல்முத லாகக் கூடியது.

**11.11.2002**

11.11.2002 அன்று, விடுதலைப் புலிகளின் அணி ஒன்று, தரைவழிப் பாதையூடாக வன்னியில் இருந்து மட்டக்களப்பு சென்றடைந்தது. 115பெண்போராளிகளும், 70 ஆண்போராளிகளுமாக மொத்தம் 185போராளிகள், ஏழு பேரூந்துகளில் மட்டக்களப்பைச் சென்ற டைந்தனர்.

**13.11.2002**

கடற்புலிகளின் முக்கிய தளபதிகளுக்கும், சிறீலங்காக் கடற்படை மற் றும் இராணுவத்தின் முக்கிய தளபதிகளுக்கும் இடையே, 13.11.2002 அன்று, முகமாலையில் முதல்தடவையாக முக்கியசந்திப்பு இடம் பெற்றுள்ளது.

**24.11.2002**



தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களும், சிறீலங் காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அவர் களும் 24.11.2002 அன்று, நோர்வேயின் தலை நகர் ஒஸ்லோவில் சந்தித்து கலந்துரை யாடியுள்ளனர். சிறீலங்கா அரசுக்கும் விடுத லைப் புலிகளுக்கும் இடையே, நோர்வேயின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் தற்போதைய சமாதான நடவடிக்கை யின்போது, முதல்முதலாக நடைபெற்றுள்ள முக்கிய சந்திப்பாக இச்சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

**25.11.2002**

25.11.2002 அன்று நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மாநாடு நடைபெற்றுள்ளது. நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் மாநாட்டை ஆரம்பித்து வைத்தார். உலக நாடுகள் பலவற்றின் முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொண்ட இம்மாநாட்டில், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோச கரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கலந்துகொண்டு, உரையாற்றினார்.

**27.11.2002**

27.11.2002 அன்று, தமிழீழ தேசிய மாவீரர்நாளை உலகமெங்கும் வாழும் தமிழர்கள் நினைவு கூர்ந்தனர். தமிழீழ தேசிய மாவீரர்நாளை முன்னிட்டு, தேசியத் தலைவர் அவர்கள் வன்னியில், ஆற்றிய பேருரை, தமிழீழத்திலும், சிங்கள தேசத்திலும் ஒரே நேரத்தில் ஒலித்ததுடன், தமிழர் வாழும் உலக நாடுகளிலும், ஒரே நேரத்தில் ஒலித்தது. உலக நாடுகளில், தேசியத் தலைவரின் மாவீரர்நாள் உரை, தமிழர் தொலைக் காட்சிகளிலும், வானொலிகளிலும் ஒளிபரப்பு, ஒலிபரப்புச் செய் யப்பட்டன. சர்வதேச செய்தி ஊடகங்களும் தேசியத் தலைவரின் மாவீரர் நாள் செய்திக்கு பெரும் முக்கியத்துவம் கொடுத்தன.





www.tamilarangam.net



**மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தை ஒஸ்லோவில் நடைபெற்றது:**
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையேயான மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தை, 02.12.2002 அன்று, நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் ஆரம்பமாகியது. விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் தலைமையில், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன், மூத்த தளபதி கேணல் கருணா, திருமதி அடேல் பாலசிங்கம், டாக்டர் ஜோய் மகேஸ்வரன், சட்டநிபுணர் வி. ருத்திர குமார் ஆகியோர் இப்பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர். சிறீ லங்கா தரப்பில், முஸ்லீம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ராவூப் கார்கீமைத் தவிர்த்து ஏனையவர்கள் கலந்துகொண்டனர்.

**சமஸ்டி அமைப்புமுறை குறித்து இணக்கம்:**
சிறீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே, அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பாக, முக்கியமான இணக்கநிலை ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. விடுதலைப் புலிகளும் சிறீலங்கா அரசும், தமிழ் மக்களின் பிரச்சினைக்கு, அவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் பிரதேசத்தில், உள்ளார்ந்த சுயாட்சி அடிப்படையில், சமஸ்டி அமைப்பு முறையொன்றை ஏற்படுத்துவது குறித்து இணக்கம் தெரிவித்திருந்தனர். நோர்வேயின் சமாதானத்திற்கான சிறப்புத் தூதுவர் திரு. எரிக் சுல்கைம் அவர்கள் இதனை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு என வர்ணிக்கின்றார். நோர்வேயில் இடம்பெற்ற மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தையின் இறுதி நாளான 05.12.2002 அன்று, முக்கியமான இணக்கநிலை தொடர்பாக அறிவிக்கப்பட்டது. ஒற்றையாட்சி முறைமைக்குள்ளேயே இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும் என இதுகாலவரை கூறிவந்த சிறீலங்காத் தரப்பு, முதல்முறையாக, பகிரங்கமாக, கூட்டாட்சி முறையை ஏற்பதாக அறிவித்திருந்தது. சிறீலங்கா அரச பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே, நடந்து முடிந்த மூன்றாம் சுற்றுப்பேச்சுவார்த்தையின் இறுதி நாளன்று, அரசியல் தீர்வுத்திட்டத்தின் அடிப்படை வடிவத்தை இனங்காண்பதில் இருதரப்பும் ஒரு இணக்கத்திற்கு வந்திருப்பதை, பகிரங்கமாக அறிவித்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் திரு. விடார் கெல்கேசன் அவர்கள், தமிழ்மக்கள் வரலாற்று ரீதியாக வாழ்ந்துவரும் பகுதியில், உள்ளார்ந்த சுயாட்சியின் அடிப்படையில் அரசியல் தீர்வைப் பரிசீலிக்க இருதரப்பும் இணங்கியிருப்பதாக அறிவித்தார்.

**ஈ.பி.டி.பி.யினருக்கு எதிராக மக்கள் போராட்டம்:**
ஈ.பி.டி.பி.யினர் நெடுந்தீவை விட்டு வெளியேறவேண்டும் என வலியுறுத்தி, நெடுந்தீவில், மக்கள் தொடர்ச்சியாக, சுழற்சிமுறையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திவருகின்றனர். இம்மக்களின் போராட்டத்திற்கு ஆதரவாக, 06.12.2002 அன்று யாழ் குடாநாட்டின் பல பாகங்களிலும், தீவுப் பகுதிகளிலும், மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மானிப்பாய், சங்கானை, மூளாய், சுன்னாகம் போன்ற பகுதிகளில், மக்கள் மறியல் போராட்டம் நடத்தினர். போராட்டத்திற்கு ஆதரவாக இப்பகுதிகளில் கடைகள் பூட்டப்பட்டிருந்தன. நெடுந்தீவில் மாத்திரமன்றி குடாநாட்டிலிருந்தே ஈ.பி.டி.பி.யினர் வெளியேறவேண்டும் என வலியுறுத்தும், பதாகைகளை பொதுமக்கள் தாங்கிநின்றனர் வேலணை மற்றும் கரம்பன் பகுதிகளிலும் பொதுமக்கள், ஈ.பி.டி.பி.யினரின் வெளியேற்றத்தை வலியுறுத்தி போராட்டம் நடத்தியுள்ளனர்.

**நோர்வேயில் மாவீரர் நாள்:**
07.12.2002 அன்று நோர்வேயில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வில், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன், மூத்த தளபதி கேணல் கருணா, திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் இம்மாவீரர்நாள் நிகழ்வில் கலந்துகொண்டனர்.
அங்கு சிறப்புரையாற்றிய கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள், இறுதியாக நோர்வேயில் காணப்பட்ட இணக்கப்பாடு குறித்து, விரிவாகவும் விளக்கமாகவும் மக்களுக்கு எடுத்துக்கூறினார். அத்துடன், இந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஒரு நிரந்தரத் தீர்வைக் கட்டியெழுப்ப நீண்ட காலம் பிடிக்கும் என்பதையும், அதில் பல பிரச்சினைகளுக்கு தீர்வுகாணவேண்டியிருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

நோர்வே அரசின் சமாதானப் பணியையும் அதன் பாரபட்சமற்ற செயற்பாடுகளையும் அவர் வெகுவாகப் பாராட்டினர்.











தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### நெதர்லாந்தில் மாவீரர் நாள்:

07.12.2002 அன்று நெதர்லாந்தில் மாவீரர் நாள் நடைபெற்றது, பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட இந்நிகழ்வில் தாயகக் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.







### விடுதலைப் புலிகளின் முக்கிய பிரதிநிதிகள் சுவிஸ் நாட்டுக்குப் பயணம்:

சுவிஸ்நாட்டில் உள்ள சமஸ்ட்டி ஆட்சிமுறைமை குறித்து, அறிந்து கொள்ளவும் அதிலுள்ள பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்ந்து தெரிந்துகொள்ளவும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன், மூத்ததளபதி கேணல் கருணா, திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் 08.12.2002 அன்று சுவிஸ் நாட்டுக்குச் சென்றிருந்தனர்.

### 'களமும் புலமும்':

08.12.2002 அன்று சுவிஸ் பேர்ண் நகரில் நடைபெற்ற 'களமும் புலமும்' நிகழ்வில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன், மூத்ததளபதி கேணல் கருணா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தனர். இந்நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து சிறப்பித்தார்கள்.











தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**பிரான்சில் மாவீரர்நாள்:**
உலகமெல்லாம் தமிழர் விரிந்து வாழுகின்ற நாடுகளில் எல்லாம், தமிழீழ தேசிய மாவீரர் நாள் நிகழ்வுகள் வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளன. கடந்த காலங்களிற்கு முற்றிலும் மாறுபட்டவிதமாக, விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள், தமிழீழத்தில் இருந்து வருகை தந்து, இம்மாவீரர்நாள் நிகழ்வுகளில் கலந்துகொண்டிருந்தனர். 08.12.2002 அன்று, பிரான்சில் நடைபெற்ற மாவீரர்நாள் நிகழ்வுகளில், தாயகக் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்., பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட இந்நிகழ்வில், விடுதலைப் புலிகளின் குரல் பொறுப்பாளர் திரு. ஜவான், நிதர்சனம் பொறுப்பாளர் திரு. சேரலாதன், விடுதலைப் புலிகளின் குரல் வானொலியின் பிரதான ஆசிரியர் திரு. தவபாலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.









**ஈ.பி.டி.பி. யின் அலுவலகம் மீது இனந்தெரியாதவர்கள் தாக்குதல்:**
12.12.2002 அன்று அதிகாலை, மல்லாகத்தில் ஈ.பி.டி.பி. கூலிக்குழுவின் அலுவலகம் மீது, இனந்தெரியாதவர்கள் பெற்றோல் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால், அலுவலகத்தின் முன்பகுதி தீக்கிரையாகியுள்ளதாகத் தெரிவிக்கும் செய்திகள், காவலுக்கு நின்ற பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியபோதும், தாக்குதல் நடத்தியவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர்.

**தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் மீது தாக்குதல்:**
தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் மீது, 13.12.2002 அன்று சில நாசகாரிகள் கைக்குண்டு வீசித் தாக்கிவிட்டு தப்பி ஓடியுள்ளனர். சிறீலங்காப் படையினரதும் பொலிஸாரினதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் கொண்ட பகுதியில், இக்கைக்குண்டு வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில், தொலைபேசி இணைப்புக் கம்பிகள், மற்றும் சுவர்ப்பகுதி என்பன சேதமடைந்துள்ளன. இவ்விடயம் குறித்து, சிறீலங்காப் பொலிஸாரும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இது சிங்களப்படையினருடன் சேர்ந்தியங்கும் கைக்கூலிகளின் நாசவேலையாக இருக்கலாம் என, சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

**கண்ணிவெடியகற்றும் பணியில் இளம் பெண் இணைந்துள்ளார்:**
யாழ் குடாநாட்டில் கண்ணிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள குழுவில், நாவற்குழியைச் சேர்ந்த 19வயதுடைய நிரோஜா சிறீராசகுமார் என்ற இளம் பெண் இணைந்துள்ளார். சுவிஸ்நாட்டின் கண்ணிவெடியகற்றும் நிறுவனம் வவுனியாவில் நடத்திவரும் பயிற்சிவகுப்பில் இணைந்து அதனை முடித்துக்கொண்டு, கண்ணிவெடியகற்றும் இவ் ஆபத்தான களத்தில் இறங்கியிருக்கும், முதலாவது தமிழ் யுவதியான நிரோஜா, வைத்தியராகி மக்களுக்கு சேவையாற்றவே விரும்பினேன், ஆனால் அது முடியாமல்போய்விட்டதால், கண்ணிவெடியகற்றும் பணி மூலம் மக்களுக்கு சேவை செய்ய முடிவுசெய்தேன் என பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

**தென்தமிழீழத்தில் கடும்மழையினால் மக்கள் பாதிப்பு:**
தென்தமிழீழத்தில், இம்மாத நடுப்பகுதியில் பெய்த கடும்மழை வெள்ளம் காரணமாக, ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்திலேயே பாதிப்பு அதிகம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் எழுபத்தி நான்காயிரம் குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன. அவற்றில் ஒன்பதினாயிரம் குடும்பங்கள் வீடுகளை விட்டு வெளியேறி பொதுஇடங்களில் தங்கியுள்ளன. திருகோணமலை மாவட்டத்தில் பதினேழாயிரம் குடும்பங்களும், அம்பாறை மாவட்டத்தில் ஒன்பதினாயிரம் குடும்பங்கள் வீடுகளைவிட்டு வெளியேறி பொதுஇடங்களில் தங்கியுள்ளன. கடும் மழை வெள்ளம் காரணமாக, பல இடங்களில் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளன. ஒரு இலட்சம் ஏக்கர் வேளாண்மை பாதிக்கப்பட்டுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net










### சுவிஸ் நாட்டின் தூதுவர் வன்னியில்:

இலங்கைக்கான சுவிஸ் நாட்டின் தூதுவர், 18.12.2002 அன்று வன்னி சென்று, விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இலங்கைக்கான சுவிஸ் தூதுவரும், தூதரக அதிகாரிகளும் வன்னி சென்றிருந்தனர். விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவகப் பணியகத்தில் ஆரம்பமான இக்கலந்துரையாடலில் திரு. சு.ப. தமிழ்ச் செல்வனுடன், திரு. புலித்தேவன், திரு. தயா மாஸ்டர் ஆகியோர் இக்கலந்துரையாடிலில் பங்குபற்றினர்.

### தீ விபத்து:

18.12.2002 கொழும்பில், ஐந்துலாம்படிச் சந்திப்பகுதியில், கடைத் தொகுதி உள்ளிட்ட கட்டிடத்தொகுதி ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தால், குறைந்தது 16பேர் இறந்தும், மேலும் இருபதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர். பட்டாசுக் கடையொன்றில் ஏற்பட்ட தீவிபத்தே, மூன்று மாடியைக் கொண்ட அக்கட்டிடத் தொகுதி எங்கும் தீ பரவக் காரணமாக அமைந்ததெனத் தெரிவிக்கப்படுகின்றது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட கடைகள், வீடுகள் என்பன முற்றாக நாச மாகியுள்ளன எனத் தெரியவருகின்றது.

### தமிழீழ திரைப்படப் பாடலும் முன்னணி இடத்தைப் பிடித்துள்ளது:

பி.பி.சி செய்தி நிறுவனம் உலகம் பூராவும் 153 நாடுகளில் 150000 மக்கள் பங்கேற்ற வாக்கெடுப்பு மூலம் நடாத்திய பிரபல பாடல்கள் தேர்வில் தமிழீழ திரைப்படப் பாடலும் முன்னணி இடத்தைப் பிடித் துள்ளது. "பூவும் நடக்குது பிஞ்சும் நடக்குது" எனும் தமிழீழ சினி மாப்பாடலே முதல் பத்து இடங்களிற்குள் தேர்வாகியுள்ளது.

### வெகு விமரிசையாக நத்தார் பெருநாள் கொண்டாட்டங்கள்:

25.12.2002 அன்று, தமிழீழப் பகுதிகளில், நத்தார் பெருநாள் கொண் டாட்டங்கள் வெகு விமரிசையாக, மகிழ்வுடன் கொண்டாடப்பட்டுள்ளது. முன்னெப்போதும் இல்லாதவாறு இம்முறை, தமிழர் பிரதேசங்களில், நள்ளிரவுப் பிரார்த்தனைகளும், பூசை வழிபாடுகளும் நடைபெற்றுள் ளன. தற்போதைய சமாதான சூழ்நிலையில், நத்தார் பண்டிகையை, மகிழ்வுடனும், நிம்மதியாகவும் கொண்டாடுவதாக, கத்தோலிக்க மக் களும் கத்தோலிக்க மதத்தலைவர்களும் தெரிவித்திருந்தனர்.
பட்டாசு வெடிகள் கொழுத்தி, மிகவும் குதுாகலமாக, நத்தார் பண்டி கையை, தமிழீழத்தைச் சேர்ந்த கத்தோலிக்க மக்கள் கொண்டாடி யதுபோன்று, சிங்களப் பகுதிகளிலும், கத்தோலிக்க மக்கள், நிம்மதி யாகவும், மனமகிழ்வுடனும் இப்பண்டிகையைக் கொண்டாடினர்.

### நியூசிலாந்தில் மாவீரர் நாள்:

மாவீரர் நாள் நிகழ்வுகள் நியூசிலாந்தில் எழுச்சியுடன் நடைபெற்றது. இங்கு பல கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. இந்நிகழ்வுகளில் பெருந்தொகையான மக்கள் பங்கேற்றிருந்தனர்.







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





**இத்தாலியில் மாவீரா் நாள்:**
மாவீரர் நாள் நிகழ்வுகள் இத்தாலியில்
பலெர்மோ மாநகரிலும் (01.12.2002), வியல்லா நகரிலும் (24.11.2002) எழுச்சியுடன் நடைபெற்றது. இங்கு பல கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. இந்நிகழ்வுகளில் பெருந்தொகையான மக்கள் பங்கேற்றிருந்தனர்.










**ரஸ்யாவில் மாவீரர் நாள்:**
மாவீரர் நாள் நிகழ்வுகள் ரஸ்யாவில் நடைபெற்றது. இங்கு பல கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வுகளில் பெருந்தொகையான மக்கள் பங்கேற்றிருந்தனர்.










தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலை வேட்கை மிக்க
எழுச்சிப் படைப்புக்கள்,
ஒடுக்குமுறைக்கு
எதிரான ஆவேசக்குரல்,
போர்க்கால இலக்கியத்தின்
யதார்த்தப் பதிவு,
மண்ணின் மணத்தோடு
மன உணர்வுகளை வெளிப்படுத்தும்
உன்னத இலக்கியமாக எரிமலை



# எரிமலை

கலை பண்பாட்டு அரசியல் சமூக சஞ்சிகை.

www.erimalai.com
Fax: (33) 1 43 58 11 91
Email: erimalai@erimalai.com
ERIMALAI, C/O T.C.C France,
341, Rue Des Pyrenees, 75020 Paris, FRANCE.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழத் தேசிய ஆவணச் சுவடிகள்